கல்கி

இலவச
இணைப்பைக்
கேட்டு
வாங்குங்கள்!

KALKI 20.5.90 ரூ. 2.50




டெலிவிஷனில் ஊழல்—
தடுப்பதெப்படி?

—உபேந்திரா சிறப்புப் பேட்டி



NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
Rexona
தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா: உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு. மோகனப் புதுமணம்,
புது வடிவம், உமதாசை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னான மென் பட்டு மேனி மெருகுக்கே.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
தூய தேங்காயெண்ணெய் செறிந்



கல்கியின் விமர்சனமும் கலைஞரின் ரசனையும்!

'தூங்குகிறவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குவது போல் பாசாங்கு செய்பவரை எழுப்பமுடியாது' என்பதாக வசனம் சொல்வார்கள். கல்கி பற்றிக் குங்குமத்தில் கலைஞர் எழுதியிருப்பதைப் பார்த்தால் இதுதான் நினைவுக்கு வருகிறது.

விஷயம் என்ன? புத்தாண்டு தினத்தன்று டீவி கவியரங்கத்தில், 'தமிழக அரசின் சாதனைகள் பற்றிக் கலைஞர் கவிதை படித்தது முறையல்ல; கட்சிக்கும் ஆட்சிக்கும் இடையே உள்ள நுண்ணிய வேறுபாடு அறியாத மக்களிடம் இது கட்சிப் பிரசாரமாகி விடவே வாய்ப்பு அதிகம்' என்று கல்கி எழுதி விட்டதாம். அதற்காகத்தான் நமது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய முதல்வர் தமது எத்தனையோ பல வேலைகளுக்கு இடையில் பதில் சொல்லியிருக்கிறார். அதற்காக நன்றி கூறுவதுடன் முதல்வர் கருத்துக்கு மதிப்பளித்து அதனைக் கூர்ந்து கவனிக்கவும்நாம்கடமைப்பட்டிருக்கிறோம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "எத்தகைய திட்டங்களை அரசு செயல் படுத்துகிறது. அவற்றை மக்கள் எவ்வாறு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை விளக்க வேண்டியது ஓர் அரசின் கடமை. அந்தக் கடமை கல்கிக்குக் கட்சிப் பிரசாரமாகத் தெரிகிறது" என்கிறார்.

அரசின் கடமை பற்றி நமக்கும் தெரியும். ஆனால் அந்தக் கடமை நிறைவேற்றப் படும் முறை பற்றித்தான் நாம் ஆட்சேபிக்கிறோம்.

அரசு எத்தகைய திட்டங்களைச் செயல் படுத்துகிறது; அவற்றை மக்கள் எவ்வாறு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை அந்தந்தத் துறையைச் சேர்ந்த உயர்தர அரசு அதிகாரிகள் டீவியில் மக்களுக்கு எடுத்துச் சொல்லட்டும். யார் ஆட்சேபிக்கப் போகிறார்கள்? ஆனால் கருணாநிதி ஆட்சித் தலைவர் மட்டுமல்ல; கட்சித் தலைவரும் கூட. இதர கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்காத, கிடைக்க முடியாத வாய்ப்பை இவர் பயன்படுத்திக் கொள்வது **undue advantage** ஆகிறது. இவருக்குக் கிடைத்த ஒரு சிறப்புச் சலுகை ஆகிறது. அதுவும் பல கவிஞர்களும் சேர்ந்து இவரை 'இந்திரன், சந்திரன்' என்று புகழ்பாட, கூடவே இவர் சாதனைகளை அடுக்கினால், கட்சிக்கும் ஆட்சிக்கும் இடையே உள்ள நுண்ணிய வேறுபாடு அறியாத மக்களிடம் அது அரசச்

செலவில் நடந்த கட்சிப் பிரசாரமாகிவிட வாய்ப்பு அதிகம் என்பது மறுக்க இயலாத உண்மை.

யோசித்துப் பாருங்கள். 'தேர்தல் சமயத்தில் அரசுச் செலவில் சமுதாய நலப் பணிகளை நிறைவேற்ற வேண்டாம்' என்று தேர்தல் கமிஷனே கேட்டுக் கொள்வது எதற்காக? 'தேர்தல் சமயத்தில் அரசு இலாக்காக்கள் முதல்வர் படத்தைப் பெரிது பெரிதாகப் போட்டுப் பத்திரிகைகளில் சாதனை விளம்பரங்களைச் செய்யக் கூடாது' என்று கூறப்படுவது ஏன்? 'இலவச அரிசி வழங்குவதாகக் கலைஞர் குடும்பத்தையே போஸ்டரில் அச்சடிப்பது தவறு' என்று எதிர்ப்புக் குரல் எழுப்பப்படுவது எதனால்? இவையெல்லாம் ஆளும் கட்சிக்கு அரசுச் செலவில் கிடைக்கக்கூடிய விளம்பரமாகி விடும் என்பதால்தான்.

இந்த உண்மை தேர்தல் சமயத்தில் மட்டுமல்ல; எப்போதும் பொருந்தும். ராஜீவ் காந்தி ஆட்சியில் நாம் பல குற்றம் குறைகளைக் கண்டோம் என்பது உண்மைதான். ஆனால் அவர் ஆட்சியில் சாதனைகள் எதுவுமே நடக்கவில்லை என்றும் கூறி விட முடியாது. அவற்றைப் பட்டியலிட்டு, ராஜீவைப் புகழ்ந்து கவிபாட இன்று குமரி அனந்தனுக்குத் தூர்தர்ஷன் வாய்ப்புத் தருமா? தேசிய முன்னணி அரசு அதற்கு வழி வகுக்குமா? அப்படியே அவருக்கு வாய்ப்புத் தரப்பட்டாலும் இதர கட்சிகள் பிறகு சும்மா இருக்குமா? தங்களுக்கும் நேரம் ஒதுக்கச் சொல்லமாட்டார்களா? அப்புறம் டீவியைக் கண் கொண்டு பார்க்க முடியுமா?

இதிலெல்லாம் சட்ட திட்டம், விதிமுறைகள் என்று கிடையாது. கருணாநிதி செய்ததைக் குற்றம் என்று யாரும் கூறவும் முடியாது. ஆனால் ஜனநாயகத்தில் சட்டத்தை விடத் தர்மம் முக்கியம். மரபுகள் முக்கியம். சிறந்த மரபுகளைப் பிரதமரும் மாநில முதல்வர்களும் முன்னுதாரணமாகத் திகழ்ந்து உருவாக்க வேண்டும். இல்லையெனில் ஜனநாயகம் அதன் உன்னதமான நிலைகளுக்கு உயராமல் தாழ்வுற்றுத்தான் போகும்.


இவையெல்லாம் கலைஞருக்குத் தெரியாத விஷயங்கள் என்று நாம் நம்பவில்லை. அவருடைய அறிவாற்றலையோ, அனுபவத்தையோ, செயல் திறனையோ, தமிழ்ப் புலமையையோ நாம் என்றைக்குமே குறைவாக மதிப்பிட்டது கிடையாது. ஆனாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக அவர் செய்யக் கூடாத சில காரியங்களைச் செய்து விடுகிறார். அது தவறு என்று நட்புரிமையுடன் நாம் எடுத்துக் காட்டும் போது, தமது செயல்களை நியாயப்படுத்த அவர் முயற்சி செய்வதோடு வாசகரின் கவனத்தைத் திசை திருப்பவும் முற்படுகிறார். கேட்கிறார்:

"என்ன செய்வது? கவியரங்கத்துக்குத் தலைமை வகித்த பாவத்தை நான் செய்து விட்டேனே? செய்யலாமா? அதைப் பொறுத்துக் கொள்ளக் கல்கியால் முடியுமா?"

இது திசை திரும்பும் முயற்சி அல்லாது வேறென்ன? இவர் கவி அரங்கத்துக்குத் தலைமை தாங்கியதைக் குற்றம் என்றோ பாவம் என்றோ கல்கி என்று கருதியது? எப்போது எழுதியது? ஏன் இப்படி ஓர் அபாண்டப் பழியைக் கல்கி மீது முதல்வர் சுமத்த வேண்டும்? அவர் சொல்லின் செல்வர் என்பது நமக்குத் தெரியும். அந்தச் சொல்லாற்றலும் தமிழ்ப்பற்றும் நாம் குறைப்பட இடம் வைக்காத உயர்ந்த விஷயங்களில், உன்னதமான முறையில் பயன் படுத்தப்பட வேண்டும் என்பது ஒன்றே நம் விருப்பம்.

விஷயம் இத்துடன் முடிந்து போய் விடவில்லை! அடுத்து ரசனை பற்றிக் கல்கிக்கு ஒரு பாடமும் நடத்தியிருக்கிறார் முதல்வர். அது குறித்து விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்!

— ஆசிரியர், கல்கி.



"நம்ம தலைவர் இவ்வளவு அல்பமா இருப்பார்ன்னு எதிர்பார்க்கலை!"

"ஏன்?"

"உங்களை அரசியலுக்கு இழுத்தது எது'ன்னு பத்திரிகைக்காரங்க கேட்டதுக்கு, 'சோடாவுடையருசி'ன்னு சொல்லியிருக்கார்!"

— எஸ். இரமேஷ்.

நிலம் வாங்குகிறீர்களா? ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!



நிலம் வாங்கும் போது எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. ஒரு ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் 'சாமர்த்தியமாக' ஒரே நிலத்தைப் பலருக்கு விற்றுப் பணம் பண்ணுகிறார் என்று நடனக் கலைஞர் தனஞ்செயன், இதோ, தமது அனுபவத்தின் மூலம் எச்சரிக்கிறார்:

நடன அரங்கம் ஒன்று அமைப்பதற்காக ஓர் ஏக்கர் நிலம் வாங்க நினைத்திருந்தேன், ஐந்து வருடங்களுக்கு முன்பு. அந்தச் சமயத்தில்தான் ஒரு டிப்டாப்பான பேர்வழி, என்னை ஈஞ்சம்பாக்கத்திலுள்ள ஒரு நிலத்துக்குக் கொண்டு போய்க் காண்பித்தார். ப்ளூ பிரிண்ட், பத்திரத்தின் ஜெராக்ஸ் பிரதி எல்லாம் காண்பித்து, இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார். அரசு ஊழியர் வந்து சர்வே செய்து கல்லை எல்லாம் நட்டு, 'இதுதான் உங்கள் நிலம்' என்று சொன்னார். நான் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் கொடுத்து டாகுமெண்டைப் பதிவு செய்து வாங்கி வந்தேன்.

சில நாள் கழித்து, ஒரு முஸ்லிம் நண்பர் எனக்கு போன் செய்து, 'நீங்கள் மேற்படி ஏஜெண்டிடம் நிலம் வாங்கினீர்களா?' என்று கேட்டார். 'ஆமாம். என்ன விஷயம்?' என்று கேட்டேன். எனக்குக் காண்பித்த நிலத்தையே அவருக்கும் காண்பித்து, விற்றிருக்கிறார்! பத்திரம் தயார் செய்யும் போது, ஏற்கெனவே பதிவு செய்த நிலத்தின் பத்திரத்தை வைத்து, உரிமையாளர் பெயரையும், அவர் தகப்பனார் பெயரையும் வேறு காகிதத்தில் டைப் செய்து அதன் மீது ஒட்டி, பிறகு ஜெராக்ஸ் பிரதி எடுத்து விட்டால், மூல டாகுமெண்டின் பிரதி மாதிரியே இருக்குமல்லவா? பிறகு, வாங்குகிறவர் பெயருக்குப் பத்திரத் தாளில் அழகாக டைப் செய்து, ரிஜிஸ்திரார் ஆபீசில் பதிவு செய்து கொடுத்து விடுவதுதான் இவர் வேலை. அப்படித்தான் எங்களை ஏமாற்றியிருக்கிறார்.

முஸ்லிம் நண்பர் விஷயத்தைச் சொன்னதும் உடனே போலீசில் புகார் செய்து, அந்த ஏஜெண்டைக் கைது செய்ய ஏற்பாடு செய்தேன். போலீஸ் ஸ்டேஷனில் போய்ச் சொன்னவுடனே, "ஓ, அவரா!" என்று ரொம்பப் பழக்கமான மாதிரி கேட்டார்கள். பதினைந்து நாள் காவலில் இருந்து விட்டு வெளியே வந்து விட்டார் ரியல் எஸ்டேட் ஏஜெண்ட்!

நான் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தேன். அதற்கு முன்னால் போலீஸ் தரப்பிலிருந்து ஒரு கான்ஸ்டபிள் வந்து, "சமரசம் செய்து கொண்டு விடுங்கள். எழுபதாயிரம் ரூபாய் தந்து விடச் சொல்லுகிறோம்!" என்று 'உபதேசம்' செய்தார். நான் அதற்கு உடன்படவில்லை. கோர்ட்டுக்குப் போனதும் அது நாற்பதாயிரமாகக் குறைந்தது! அதையும் பத்தாயிரம், பத்தாயிரமாக இரண்டு முறை தந்ததோடு சரி.

சில நாள் கழித்து, திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் சங்கீதத்தில் பட்டம் பெற்ற ஓர் இளைஞர் வந்து, மேற்படி ஏஜெண்டின் நண்பர் என்றும், அவரிடமிருந்து பணம் எப்படியும் வந்து விடும் என்றும், நான் மேற்கொண்டு எதுவும் செய்து விடக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்!

மேற்படி ஏஜெண்டின் ஆபீசில் சோதனை விட்ட போது, அரசின் எல்லாவித ரப்பர் ஸ்டாம்புகளும் அவரிடம் இருந்தன.

விஷயம் இத்தோடு முடிந்து விடவில்லை.


சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில், ஓர் எஞ்ஜினியரைச் சந்தித்தேன். "நீங்கள் அவரிடம் ஏமாந்தீர்களா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றேன். "நானும்தான். அதே நிலம்!" என்றார் அவர். ஆக, ரியல் எஸ்டேட் ஏஜெண்டின் 'திருப்பணி' தொடர்கிறது.

இதில் வருந்தப்படக்கூடிய அம்சம் என்னவென்றால், அவர் குறிப்பிடும் ரிஜிஸ்திரார் ஆபீசில், எல்லாருக்குமே இந்த ஏஜெண்டின் 'கை வரிசை' தெரிந்துதான் இருக்கிறது. அவர்களும் அவருக்கு உடந்தையாக இருந்து உதவுகிறார்கள். இல்லை என்றால், இவ்வளவு துணிச்சலாக ஒருவர் செய்து கொண்டே இருக்க முடியாது.

— எஸ். வி. என்.

டெலிவிஷனில் ஊழல்— தடுப்பதெப்படி?

—உபேந்திரா சிறப்புப் பேட்டி



கேள்வி: 'பிரஸார் பாரதி' மசோதா மூலம் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் தன்னாட்சி கொடுக்கப்படும் என்கிறீர்கள். ஆனால் அவற்றை மேற்பார்வையிடும் பொறுப்பிலுள்ள முழுநேர மற்றும் பகுதி நேர கவர்னர்களை அரசுதான் நியமிக்கப் போகிறது என்னும் சூழ்நிலையில் அவை எப்படித் தன்னாட்சியாகச் செயல்பட முடியும்?

உபேந்திரா: இந்த 'பிரஸார் பாரதி' மசோதாவைப் பொறுத்தவரை இரண்டு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. ஒன்று அரசே கவர்னர்களை நியமிப்பது. இரண்டாவது, அரசுதான் நிதியுதவி செய்கிறது என்னும் நிலையில் அது எப்படி தன்னாட்சியாகச் செயல்பட முடியும் என்பது. இரண்டையும் கொஞ்சம் விரிவாகவே விளக்குகிறேன்.

தலைமை நீதிபதி, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர், தேர்தல் கமிஷன் தலைவர், இந்தியக் கணக்குத் தணிக்கை அதிகாரி ஆகியோரை அரசுதான் நியமிக்கிறது. அதாவது பாராளுமன்றத்தின் பரிந்துரைகளின் பேரில் இவர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அந்தந்தத் துறைகளுக்கான நிதியுதவிகளையும் அரசுதான் செய்கிறது. இருந்தாலும் அவையெல்லாம் தன்னாட்சியாகத்தானே செயல்படுகின்றன. அப்படித்தான் வானொலியும் தொலைக்காட்சியும் செயல்படப் போகிறது.

இன்னும் சொல்லப் போனால், இவற்றை நிர்வகிக்கும் கவர்னர்களை ஜனாதிபதி நியமிக்கப் போவதில்லை. அவர்களை நியமிப்பதற்காக அரசு ஒரு குழுவை அமைக்கும். அதில், துணை ஜனாதிபதி, பிரஸ் கவுன்சில் தலைவர், மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் புகழ்பெற்ற ஒருவர் என்று மூவர் இருப்பார்கள். துணை ஜனாதிபதியே அதன் தலைவர். இவர்களே கவர்னர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இரண்டாவது, நிதி வசதி. வானொலி—தொலைக்காட்சிக்கான நிதி வசதிக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று விளம்பரங்களின் மூலம் வரும் வருவாய். இரண்டாவதாக மக்களிடம் பங்குகளை (Share) விற்று அதன் மூலம் பணம் பெறுவது. இந்த இரண்டில் எதைச் செய்தாலும் வானொலியும் தொலைக்காட்சியும் நாட்டிலுள்ள பெரும் பணமுதலைகளின் கையில் போய்ச் சிக்கிக் கொண்டு விடும். நாட்டின் சக்தி வாய்ந்த சாதனம் ஒன்று பணமுதலைகளின் கையில் சிக்கினால் அது ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் மிகப் பெரிய துரோகம்; அபாயம். இந்நிலையில் அரசின் நிதியுதவியைத்தான் பெற்றாக வேண்டும். நீதித்துறை, தேர்தல் கமிஷன், இந்தியக் கணக்குத் தணிக்கைத் துறை, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்றவை அரசின் நிதியுத

வியைப் பெற்றாலும் தன்னாட்சியோடு தானே இயங்குகின்றன! அதே போல்தான் இதுவும்.

கேள்வி: இ. காங்கிரஸ் அரசில் இருந்த அதே அதிகாரிகள்தான் இப்போதும் இருக்கிறார்கள். இந்நிலையில் முழு தன்னாட்சியை அமுல்படுத்த முடியுமா?

உபேந்திரா: அதிகாரிகள் அனைவரும் தங்களுக்கு வரும் உத்தரவுகளை அமுல்படுத்தத்தான் ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு மேலுள்ளவர்களின் உத்தரவுகளை அமுல்படுத்துவதுதான் அவர்களின் வேலை. ஆக, முடிவெடுப்பவர்கள் சரியான முடிவுகளை எடுக்கும்போது பிரச்னைகள் வரவே வாய்ப்பில்லை.

கேள்வி: ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மாதிரி ஐ. எம். எஸ். (**Indian Media Service**) என்று ஆரம்பித்துத் திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கலாமில்லையா?

உபேந்திரா: ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகளும் மேலுள்ளவர்களின் ஆணையைத்தான் நிறைவேற்றுகிறார்கள். இப்போது நாங்கள் 'எஞ்ஜினியரிங் சர்வீஸ்' ஆரம்பித்திருப்பதைப் போல இனி பிராட்காஸ்ட்டிங் சர்வீஸை ஆரம்பிக்க இருக்கிறோம். அதில் செய்தி — ஒளிபரப்புத் துறை அதிகாரிகளும் இணையப் போகிறார்கள். தேவையானால் அவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியும் கொடுக்கலாம். இந்நிலையில் தனியாக எதற்கு இந்தியன் மீடியா சர்வீஸ்?

கேள்வி: 'பிரஸார் பாரதி' கார்ப்பொரேஷனிலாவது அதிகாரங்களைத் தில்லியிலேயே குவித்து வைத்துக் கொள்ளாமல், வடக்கு — தெற்கு என்று பரவலாகப் பகிர்ந்து கொடுப்பீர்களா?

உபேந்திரா: பிரஸார் பாரதி கார்ப்பொரேஷன் என்பது தேசிய அளவிலானது. எனவே, அங்கங்கே தனித்தனியாக அலுவலகங்களைத் திறந்து வைத்துக் கொண்டிருக்க முடியாது. ஆனாலும் மாநில அளவில் கிளைகள் இருக்கும். முடிவு மத்தியில்தான் எடுக்கப்படும் என்றாலும் கிளைகளுக்கான சுதந்திரம் பாதிக்கப்படாமல் இருக்கும். இந்தக் கார்ப்பொரேஷனின் செயல் திட்டங்களைக் கூர்ந்து கண்காணிக்க 'பிராட்காஸ்டிங் கவுன்சில்' என்று ஓர் அமைப்பு உருவாக்கப்படும். அந்தக் கவுன்ஸிலுக்கும் மாநில அளவுகளில் மண்டலக் குழுக்கள் அமைக்கப்படும். எங்களைப் பொறுத்த வரை வடக்கு — தெற்கு என்கிற பாகுபாடின்றி அனைவரும் எல்லாவற்றையும் சமமாகப் பெற வேண்டும் என்றுதான் செயல்பட்டு வருகிறோம்.

கேள்வி: தொலைக்காட்சியும், வானொலியும் அரசின் செய்தித்துறை நிறுவனங்களாக மட்டும் அல்லாமல் — அரசின் பிரசார



சாதனமாக மட்டும் அல்லாமல், அவற்றுக்கெல்லாம் மேலாக சமுதாயப் பொறுப்பு — கற்பித்தலின் மூலம் மக்களை மேம்படுத்தும் பணியும் இருக்கிறதல்லவா?

உபேந்திரா: நிச்சயமாக இருக்கின்றன. அன்றிலிருந்து இன்றுவரை **Information, Education, Entertainment** என்ற மூன்று குறிக்கோள்களுடன்தான் வானொலியும் தொலைக்காட்சியும் செயல்பட்டு வருகின்றன. இது என்றைக்கும் மாறாது.

கேள்வி: 'சென்னைத் தொலைக்காட்சி வழங்கும் 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சிகள் விவசாயப் பெருமக்களுக்கு எந்தவிதத்திலும் பயன்படக்கூடியதாக இல்லை. பேட்டி காண்பவர்களும் சரி, பேட்டியளிப்பவர்களும் சரி, பண்ணை ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளுக்குச் சம்பந்தமில்லாமல்தான் கேள்விகள் கேட்கிறார்கள் — பதில் சொல்லுகிறார்கள். ஆனால், இதே நிகழ்ச்சிகளைச் சென்னை வானொலி நிலையம் சிறப்பாகத் தயாரிக்கிறது' என்று எண்டமாலஜி துறையின் இணைப் பேராசிரியர் டாக்டர். எஸ். திருமூர்த்தி 'ஹிந்து' நாளிதழில் எழுதியுள்ளார். இது பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

உபேந்திரா: தனிப்பட்ட சிலரின் தவறுகளால் ஒட்டுமொத்தமாக அப்படிக் கூறிவிட முடியாது. வானொலியில் சிறப்பாகத் தயாரிப்பவர்கள் இருக்கிறார்கள் என்றால் தொலைக்காட்சியில் மட்டும் எப்படி இல்லா

மல் போக முடியும்? இனி விவசாயத்தில் சமீப வளர்ச்சிகள் வரை அறிந்தவர்களைத் தயாரிக்கச் சொல்லலாம்.


கேள்வி: டில்லியிலிருந்து ஒளிபரப்பாகும் 'பாராளுமன்றச் செய்திகள்' விஷயமும் அப்படித்தான். அதில் வெறும் பெயர்கள்தான் வாசிக்கப்படுகின்றனவே தவிர. விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. ஆனால், 'சட்டசபையில் இன்று' டீவி நிகழ்ச்சியில் விஷயங்களோடு பெயர்களும் விடப்படாமல் ஒலிபரப்பப்படுகின்றன.

உபேந்திரா: டில்லி தொலைக் காட்சிக்கான பாராளுமன்றச் செய்திகளைப் பத்திரிகையாளர்கள்தான் எழுதித் தருகிறார்கள். சில சமயங்களில் எம்.பி.க்கள் தங்கள் பெயர் தொலைக்காட்சியில் வாசிக்கப்படுவதே இல்லையென்று என்னிடமே குறைபட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் பெயர்களை வாசிக்க வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் பத்தே நிமிடங்களில் எப்படி முழுமையாகப் பாராளுமன்றச் செய்திகளைத் தொகுத்துக் கொடுத்து விட முடியும்? சென்னை தூர்தர்ஷன் நிலையத்தின் 'சட்டசபையில் இன்று' நிகழ்ச்சி சுவாரஸ்யமாகத் தெரிவதற்குக் காரணம், அது உங்கள் தொகுதி பற்றிய பிரச்னை அல்லது மாநில அளவிலான உங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூர்ப் பிரச்னை. ஆனால், பாராளுமன்றச் செய்திகள் அப்படியல்ல. இந்தியாவின் எங்கோ ஒரு மூலையிலுள்ள ஓர் எம்.பி., தமது தொகுதி பற்றிப் பேசும் போது இன்னொரு கோடியிலுள்ளவர்களுக்கு அதில் என்ன சுவாரஸ்யம் இருக்க முடியும்? உங்கள் ரசனைக்கு இதுதான் காரணம்.

கேள்வி: இரண்டாண்டுகளுக்கு முன்பு, சென்னைத் தொலைக்காட்சி நிலையம் நல்ல தொடர் நிகழ்ச்சிகளைக் கேட்டிருந்தது. அதில் ஏறத்தாழ எல்லா எழுத்தாளர்களுமே நிகழ்ச்சிகளை அனுப்பி வைத்தார்கள். அதில் சிலர் நிகழ்ச்சிகளே ஏற்றுக் கொள்ளப்பட்டன. எந்த அளவுகோலை வைத்து அந்தச் சிலருடைய நிகழ்ச்சிகளைத்

வேகத் தடைக் கருவி:

அப்புறம் என்ன ஆச்சு?



சில வருடங்களுக்கு முன்பு பல்லவன் மற்றும் இதரப் பேருந்துகளில் டைசிகான் (dysicon) என்னும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. டிரைவர் சீட்டுக்கு முன்பு இடது புறமோ அல்லது வலது புறமோ சின்ன பாக்ஸ் மாதிரி இருக்கும். அந்த வண்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட வேகத்திற்குக் கூடுதலாக ஓட்டினால் 'கீச்... கீச்... கீச்...' என்று ஒரு விதமான ஒலி எழுப்பும். டிரைவர் உடனே உஷாராகித் தன்னுடைய வேகத்தினைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் வண்டியின் வேகம் தானே குறைந்து கொள்ளும். பின்பு மீண்டும் ஆரம்பத்திலிருந்துதான் வேகம் 'பிக் அப்' செய்ய வேண்டும். இது ஓர் நல்ல ஏற்பாடுதான். ஆரம்பத்தில் மொத்தம் சுமார் 8000 பஸ்களுக்குப் பொருத்தப்பட்டதாம். அப்புறம் என்ன ஆச்சு?

ஒரு டைசிகானின் தயாரிப்புச் செலவு ரூபாய் 500 லிருந்து 800 வரைதான் என்றும் ஆனால் (அப்போதைய) அரசு ஒரு டைசிகான் மூவாயிரம் ரூபாய் என்று வாங்கிப் பொருத்தியதாகவும் கூறப்படுகின்றது. இதற்குத் தொழிற்சங்கங்களிடையே பலத்த எதிர்ப்பு! இரண்டாவதாகப் பொருத்தப்பட்ட டைசிகான்கள் பெரும்பாலான வண்டிகளில் சரிவர வேலை செய்யவில்லை. ஒரு முறை ரிப்பேர் ஆகிவிட்டால் அதன் கதை அவ்வளவுதான். திரும்பவும் சரி செய்ய முடியாது. தூக்கி எறிய வேண்டிய நிலை. அப்படி ரிப்பேராகி, அனைத்தையும் இப்போது தூக்கியெறிந்து விட்டார்களா என்ன?

அப்படியெல்லாம் ஏதுமில்லை. நடந்தது இதுதான். நமது பஸ் டிரைவர்களுக்கு இது ஒரு தீராத தலைவலியாகவே இருந்து வந்தது. வேகத்தையும் நேரத்தையும் பிக் அப் செய்ய முடியவில்லை. என்று ஒர்க் ஷாப்பில் சொல்லித் தாங்களாகவே ஒயரினைப் பிடுங்கி விட்டுக் கொண்டார்கள். ஒரு வண்டியில் ஆறு மாதங்கள் கூட டைசிகான் உருப்படியாக இல்லை. 1984 — லிருந்து அரசும் டைசிகான் பொருத்துவதை நிறுத்தி விட்டது.

ஆக, எட்டாயிரம் பஸ்களுக்குப் பொருத்தியதற்கான சுமார் இரண்டு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் கிரிமினல் வேஸ்டாகி விட்டது!

— பாரதிபாலன்.

இத்தகைய விளம்பரம் ஒன்றினை வெளியிடும் நிலையில் நாம் இல்லையே என்று நாட்டிலுள்ள பல நிதி நிறுவனங்கள் ஏங்கக்கூடும்...

சரித்திரம் படைத்தது சக்தி பைனான்சின் ஐந்தாண்டு* சாதனைகள்

- 2,50,000-க்கும் மேற்பட்ட டெபாசிட்தாரர்களுக்கு சேவை செய்துள்ளது.
- ஏறக்குறைய ரூ.200 கோடிகள் புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட டெபாசிட்டுகளாக திரட்டியுள்ளது.
- ஏறக்குறைய 5 லட்சம் நபர்கள் உபயோகமடையும் வண்ணம் ரூ.105 கோடிகள் கடன்கள் வழங்கியுள்ளது.
- வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு ஏற்படும் வகையில் நிதி உதவி அளிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.140 கோடிகளுக்கும் மேல்.
- 1984-ம் ஆண்டின் முடிவில், வெளியிடப்பட்ட பொது வெளியீட்டிற்குப் பிறகு டிவிடெண்டுகள் 122% வரை அளித்துள்ளது. ரூ.10/- மதிப்புள்ள பங்கின் விலை ரூ.51/- என உயர்ந்தது (5.4.1990 அன்றிருந்தபடி).

நான்கு ஆண்டுகள் அபரிமிதமான வளர்ச்சியடைந்த பிறகு அதனை ஒருங்கிணைத்து பலப்படுத்திய ஆண்டு கடந்த ஆண்டு. நடப்பு ஆண்டில் கீழ் கண்டுள்ளபடி பலவிதமான கடன்களை அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

- லாரிகள் எல்லா தயாரிப்புகளுக்கும் மற்றும் எல்லா மாதிரிகளுக்கும், புதிய மற்றும் அதிக பழமை அல்லாதது.
- கார்கள்
- இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நுகர் பொருள் சாதனங்கள் முதலியன.
- இயந்திர தளவாடங்கள், மெஷினரிகள், ஜெனரேட்டர்கள் முதலியன.
- கட்டுமான வேலைக்கான சாதனங்கள்.
- வைத்திய சிகிச்சைக்கான சாதனங்கள், அலுவலக நவீனமுறை சாதனங்கள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குகள்

90-99-ஆம் ஆண்டுகளில் சந்திக்க இருக்கும் சவால்களை எதிர்நோக்க சக்தி பைனான்ஸ் தன்னை தயார்படுத்திக்கொள்கிறது...

SAKTHI FINANCE LIMITED

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

PROFITABILITY

நிர்வாகத் தலைவர்: என்.என். பய்
பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641 018.
தொலைபேசி: 32240, 30500, 30047, 31904 மற்றும் 35586
டெலக்ஸ்: 855-479 SAFIN   தந்தி: SAFIN.

* 31 மார்ச் '90 அன்றுடன் முடிவடைந்த காலத்திற்கு

UIPC:SF:8:90

தேர்ந்தெடுத்தார்கள் என்பது புரியவில்லை. காரணம், பதினாறு வயதுச் சிறுமி ஒருத்தி, தன் தந்தையிடம், 'எனக்கு ஓட்டுப் போடுவதற்குத்தான் வயதாகவில்லையே தவிர, காதலிக்கவும் கர்ப்பம் தரிக்கவும் போதிய வயதாகி விட்டது' என்றெல்லாம் வசனம் வருகிற நிகழ்ச்சி இடம் பெற்றதால்தான் இந்தச் சந்தேகம்... இப்படிப் பல உதாரணங்களைக் கூற முடியும்...

உபேந்திரா: தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விளம்பரதாரர் நிகழ்ச்சிகளைச் சீர்ப்படுத்த வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் சிறப்பாக இருக்க வேண்டுமானால், அவற்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முழுக்க முழுக்க அதிகாரிகளிடம் மட்டுமே இருக்கக் கூடாது. அந்தக் குழுவில் சிறந்த கலைஞர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். யார் யார் எந்தெந்தத் துறையில் சிறந்தவர்கள் என்று பார்த்து அவர்களிடமே தயாரிப்புப் பொறுப்பை ஒப்படைக்க உள்ளோம். இப்போது சினிமா டைரக்டர்கள் கூட சினிமாவை விட டீவி சக்திவாய்ந்தது என்று புரிந்து கொண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கப் போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள். இதனால் நிகழ்ச்சிகளின் தரம் உயர வாய்ப்பிருக்கிறது. தவிர சிலர் மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்குத் தொடர்ந்து நிகழ்ச்சிக்கான நேரங்களை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் புதியவர்களுக்கான வாய்ப்பு தாமதப்படுகிறது.

கேள்வி: தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தாரால் நடத்தப்பட்ட கவியரங்கத்துக்குத் தலைமைதாங்கிய முதல்வர் கலைஞர், அந்த வாய்ப்பைத் தமது அரசு செய்த சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டப் பயன்படுத்திக் கொண்டார். அது சரிதானா?

உபேந்திரா: மாநில முதல்வர்கள் தங்கள் சாதனைகளைத் தொலைக்காட்சியில் சொல்வதில் தவறில்லையே!

கேள்வி: கவியரங்கத்திலா அதைச் சொல்ல வேண்டும்? தனியாக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அதைச் சொல்லியிருக்கலாமே?

உபேந்திரா: அவர் ஒரு கவிஞராகவும் எழுத்தாளராகவும் இருப்பதால் கவியரங்கத்திலும் சாமர்த்தியமாகத் தமது சாதனைகளைக் கொண்டு வந்திருக்கிறார்! (சிரிக்கிறார்). எங்களைப் பொறுத்தவரை மாநிலங்களில் எந்த அரசு பதவியிலிருந்தாலும், அந்தந்த மாநில முதல்வர்களோ அல்லது அவர்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளோ அவரவர் அரசின் சாதனைகளைத் தொலைக்காட்சியில் சொல்லுவதற்கான உரிமைகளை அளித்துள்ளோம். செய்த சாதனைகளைச் சொல்வதற்குக் கூடவா தடை?

கேள்வி: வானொலி — தொலைக் காட்சியில் லஞ்சம் அதிகரித்து வருகிறது. அதனாலேயே நிகழ்ச்சிகளின் தரம் குறைகிறது. இதைத் தடுக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

உபேந்திரா: எல்லா இடங்களிலும லஞ்ச — ஊழல் தாண்டவமாடும் போது நடுவிலிருக்கும் வானொலி — தொலைக் காட்சி மட்டும் எப்படித் தூய்மையானதாக இருக்க முடியும்? இங்கும் இருக்கவே செய்கிறது. இதற்குக் காரணம் தனிப்பட்ட ஒருவருக்கு முடிவெடுக்கும் அதிகாரம் இருப்பது தான் என்பது என் கருத்து. எனவே, 'இப்படித்தான் செய்ய வேண்டும்; இப்படித் தான் முடிவெடுக்க வேண்டும்' என்று விதிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்து அதைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்ற நிலையைக் கொண்டு வந்து விட்டால் பிறகு லஞ்ச — ஊழலுக்கு வழியேது? இதைத்தான் நாங்கள் செய்யப் போகிறோம்.

பேட்டி: **நிலாராஜா.**

அட்டை வண்ணப்படமும், படங்களும்: **உத்ரா.**



அடுத்த இதழில்...

- **கான்க்ரீட் காடுகளிடையே தோட்டத் தீவுகள்.**

  — சிறப்புக் கட்டுரை

வெற்றிகளைக் குவியுங்கள்

— உங்கள் முன்னேற்றத்திற்கு ஓர் இலவச இணைப்பு.

ஹா...ஹா...ஹா... மாநாடு!


நகைச்சுவை என்பது ஒரு குடை போல. குடையால் மழை வராமல் செய்ய முடியாது. ஆனால் மழையிலிருந்து காப்பாற்ற முடியும். அது போலத்தான், நகைச்சுவையால், கவலைகள் வராமல் செய்ய முடியா விட்டாலும், அதை மறக்கச் செய்து விடும். சென்னை ஹியூமர் கிளப் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இணைந்து மே ஆறாம் தேதி ஒரு நகைச்சுவை மாநாடு நடத்தி, நாள் முழுதும் வயிறு வலிக்கச் சிரிக்க வைத்து விட்டார்கள். அங்கே கேட்டு ரசித்த சில ஜோக்குகளின் தொகுப்பு:

●● ஒரு கூட்டத்தில் பேச்சாளர் கேட்டார், ''நான் எத்தனை நேரம் பேசலாம்?'' ஏற்பாடு செய்தவர் சொன்னார், ''நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். நாங்கள் எல்லாரும் பதினைந்து நிமிடத்தில் எழுந்து போய் விடுவோம்.''

●● போர் நடந்து கொண்டிருந்தது. எதிரிகள் தீவிரமாக முற்றுகையிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு சிப்பாய், மேஜரிடம் ஒரு வாரம் லீவு கேட்டான். 'முடியாது' என்று மேஜர் சொன்ன பின்னும் அவன் நச்சரிக்கவே, ''சரி! எதிரி டாங்க் ஒன்றைப் பிடித்துக் கொண்டு வா! ஒரு வாரம் லீவு தருகிறேன்'' என்று சொல்லி விட்டார். மறு நாள், அந்த சிப்பாய், ஒரு டாங்குடன் வந்து நின்ற போது, மேஜருக்கு ஒரே ஆச்சரியம்! 'எப்படி டாங்கைப் பிடித்தாய்?' என்ற போது சிப்பாயின் பதில், ''எதிரிப் படையிலும் என்னைப் போல லீவு கேட்ட ஒரு சிப்பாயும், உங்களைப் போல டாங்க் பிடித்துக் கொண்டு வரச் சொன்ன மேஜரும் இருந்ததால், ஒருவருக்கொருவர் டாங்க்கை மாற்றிக் கொண்டோம்.''

●● குறுகிய சந்து ஒன்றில் எதிரும் புதிருமாய் இரண்டு பேர் காரை ஓட்டிக் கொண்டு வந்தனர். ஒருவரும் பின்னோக்கிப் போகத் தயாராய் இல்லை. அடுத்தவரை வெறுப்பேற்ற வேண்டுமென ஒருவர், ஒரு நியூஸ் பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு, காரின் மேல் சாய்ந்தபடி படிக்க ஆரம்பித்தார். அடுத்தவர் பளிச்செனச் சொன்னார், ''பேப்பரை படித்து முடித்ததும் என்னிடம் படிக்கக் கொடு!''

●● ஒருவருக்கு இந்தி மட்டுமே தெரியும்.



இன்னொருவருக்கு சொற்ப இந்திதான் தெரியும். "இங்கே வா" என்று இந்திக்காரரை அழைக்க வேண்டும். சுலபமாய் 'இதர் ஆவோ' என்று கூறி விட்டார். அடுத்து "அங்கே போ" என்று சொல்ல வேண்டும். இந்தியில் அதற்கு என்ன சொல்ல வேண்டுமெனத் தெரியவில்லை. ஒரு விநாடி யோசனை செய்தபின், அங்கே போய் நின்று கொண்டு சொன்னார் "இதர் ஆவோ!"

●● ஒருவர் விமானத்தில் பயணம் செய்ய ஏர்போர்ட்டுக்குப் போனார். விபத்துக்கள் அதிகரித்து விட்டதால், ரிஸ்க் எடுக்க விரும்பாமல், ஓர் இன்சூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொண்டார். அங்கே ஓர் எடை மெஷின் இருந்தது. காசு போட்டதும், எடை கார்டு வெளியில் வந்தது. கார்டை திருப்பிப் பார்த்தார். "உங்கள் சமீபத்திய முதலீடு நல்ல பலன் தரும்" என அதில் இருந்தது!

●● "அம்மாவை எப்படிக் கூப்பிடுவாய்?"

"Mum."

"பெரியம்மாவை?"

"Maximum."

"சித்தியை?"

"Minimum."

●● துருவ சரித்திரத்தை விளக்கிச் சொன்ன அப்பா, பையனிடம், "எப்பவும் அம்மா பேச்சைக் கேட்டு நடக்கணும்" என்று அறிவுரை கூறினார். பையன் திருப்பிக் கேட்டான், "நான் என் அம்மா பேச்சைக் கேட்டு நடப்பது சரி! நீ ஏன் உன் அம்மா பேச்சைக் கேட்டு அதன்படி நடக்காமல், என் அம்மா பேச்சைக் கேட்கிறாய்?"

●● ஓர் ஊரில் மூன்று புளுகர்கள். ஒருவன் சொன்னான்: "நான் காட்டுக்குப் போன போது, திடீரென ஒரு புலி வந்து விட்டது! முதலில் பயந்தாலும், பின்னர் சமாளித்துக் கொண்டு, கையிலிருந்த துப்பாக்கியைப் புலியை நோக்கிப் பிடித்தேன். இத்தனைக்கும் அது குண்டு இல்லாத துப்பாக்கி. புலி பயந்து ஓடி விட்டது."

இரண்டாவது புளுகன், "நான் காட்டில் போய்க் கொண்டிருந்த போது, புலி வந்து விட்டது. என்னிடம் துப்பாக்கி ஏதும் இல்லை. ஆனாலும் என்னிடம் ஒரு துப்பாக்கி ரவை இருந்தது. அதைக் காட்டினேன், புலி ஓடி விட்டது" என்றான்.

மூன்றாமவனோ, "என் எதிரே புலி வந்த போது, என்னிடம் துப்பாக்கியுமில்லை; குண்டுமில்லை; நல்ல காலம் துப்பாக்கி லைசென்ஸ் இருந்தது. அதை எடுத்துக் காட்டினதும் புலி ஓடி விட்டது" என்றான்.

டெய்ல் பீஸ்:

ஹியூமர் கிளப்பில் சொல்லப்படும் ஜோக் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று விதிமுறை உண்டு. உங்கள் அப்பா, அம்மா, சகோதரி இவர்களுடன் உட்கார்ந்து கொண்டு, தயக்கப்படாமல் சொல்லத் தகுதி உடைய ஜோக்காக இருக்க வேண்டும்! நல்ல கொள்கை!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி.**


மாதம் ஒரு தொகுதி

நிலக்கோட்டைத் தொகுதியின் நிலைகாண வருகிறோம்!

கல்கியின் 'மாதம் ஒரு தொகுதி' திட்டத்தின் கீழ் நடந்த நான்காவது குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொகுதி நிலக்கோட்டைத் தொகுதி. திண்டுக்கல் — காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள இத்தொகுதி ரிசர்வ் தொகுதி.

இத்தொகுதியில் தி. மு. க. வேட்பாளரை விட 692 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர் இ. காங்கிரஸைச் சேர்ந்த திருமதி எஸ். பொன்னம்மாள்.

நிலக்கோட்டைத் தொகுதியிலுள்ள அனைவரும் தங்கள் தொகுதி எம். எல். ஏ. வான திருமதி. எஸ். பொன்னம்மாளிடம் கேட்க விரும்பும் கேள்விகளை எங்களுக்கு எழுதியனுப்பலாம். தேர்தலின் போது அவர் கொடுத்த வாக்குறுதிகளை நினைவுபடுத்தலாம். அத்துடன் எம். எல். ஏ. செய்யும் சிறப்புப் பணிகள் ஏதேனும் இருந்தால் குறிப்பிட்டு எழுதலாம். தொகுதியின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனைகளையும் எழுதலாம்; குறைகளையும் எழுதலாம்.



நீங்கள் எழுதும் ஒவ்வொரு விஷயத்தையும் எம். எல். ஏ. கவனத்திற்குக் கொண்டு வருவோம்; அவருடன் பேசி விவாதிப்போம்; கேள்விகள் கேட்போம். தொகுதியை நேரடியாக வந்து சுற்றிப் பார்த்து உண்மைகளை ஆராய்வோம்.

கடைசியாக எங்கள் அனுபவங்களையெல்லாம் ஜூலை மாதக் கல்கியில் கட்டுரையாக வெளியிடுவோம்.

நிலக்கோட்டைத் தொகுதியிலுள்ள கல்கி வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 7.6.90.

உறையின் மேல், 'மாதம் ஒரு தொகுதி' என்று மறக்காமல் குறிப்பிட்டு உடனடியாக எங்களுக்கு எழுதுங்கள்.

— **ஆசிரியர்.**

மம்முட்டி கேட்ட கேள்வி!



* மம்முட்டி




* ரகுராம்

●● இளையராஜாவைத் தொடர்ந்து மதுரை வட்டாரத்திலிருந்து மேலும் ஓர் இசையமைப்பாளர் அறிமுகமாகியுள்ளார். அவர் 'சாணக்யா' என்ற இளைஞர். சித்ரா லட்சுமணன் இயக்கும் ''பாஞ்சாலி சபதம்'' என்ற படத்திற்கு இசையமைக்கிறார். இவர் வயலின் ஸ்பெஷலிஸ்ட்! முதலில் சித்ரா லட்சுமணனைப் பார்த்து, தம்முடைய மியூசிக் கம்போஸிங்கைப் போட்டுக் காட்ட, அது அவருக்குப் பிடித்தும் போக, அப்படியே அதைக் கொண்டு போய்ப் பாரதிராஜாவிடம் போட்டுக் காட்டியிருக்கிறார். அவர் கேட்டுப் பார்த்து விட்டு, ஓ.கே. சொல்ல, 'சாணக்யா'வுக்குச் சான்ஸ் கிடைத்து விட்டது! இசையில் படித்துப் பட்டம் (பி. மியூசி) பெற்றவர் சாணக்யா. அம்மா சங்கீத டீச்சர். அப்பாவும் ஒரு சங்கீத வித்வான். சொந்த ஊர் திருமங்கலம்.

●● ''ஒரு தொட்டில் சபதம்'' என்ற படத்தைத் தயாரித்த எடிட்டர் மோகன் தம்முடைய அடுத்த படத்தைத் தாமே டைரக்ட் செய்யப் போகிறார். எடிட்டருக்கு ஏன் இப்படி ஓர் ஆசை? ''இப்போது இருக்கிற டைரக்டர்கள் பெரிசாக என்ன செய்கிறார்கள்? அர்த்தமே இல்லாமல் படங்களை எடுத்து விடுகிறார்கள். கடைசியில் எடிட்டர் டேபிளில், நாங்கள்தான் கதையை உருப்படியாக்க வேண்டியிருக்கிறது. எனவேதான் நானே டைரக்ட் செய்வது என்று தீர்மானித்தேன்'' என்கிறார் மோகன்.

* எடிட்டர் மோகன்





* சாணக்யா

●● சமீபத்தில் பிலிம் சேம்பர் சார்பில் நடன இயக்குநர் ரகுராமிற்கு, ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. ஒரு டெக்னீஷியனுக்கு பிலிம் சேம்பரின் சார்பாகப் பாராட்டு விழா நடத்தப்பட்டது இதுவே முதன் முறை. முப்பது வருஷத்தில் நூறு படங்களுக்கு டான்ஸ் அமைத்துள்ளார். ஜெயலலிதாவுடன் பல நாட்டிய நாடகங்களில் நடித்து, பின்பு ஏ. கே. சோப்ரா, கே. தங்கப்பன் ஆகியோர்களிடம் பத்து வருடங்கள் உதவியாளராக இருந்து, சினிமாவில் டான்ஸ் மாஸ்டராக அடியெடுத்து வைத்தவர். ரகுராம் ஒருவர்தான் எல்லா மொழிப் படங்களுக்கும் நடன இயக்குநராகப் பணி புரிந்து வருபவர். ரகுராம் இரண்டு தமிழ்ப் படங்களைத் தயாரித்துத் தாமே இயக்கத் திட்டமிட்டுள்ளார். ஒன்றில் கமல்ஹாசனும் மற்றொன்றில் ரஜினிகாந்தும் நடிக்கப் போகிறார்கள்!

●● மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டிக்குக் கமல்ஹாசன் மீது அதிகப் பொறாமையாம். இதை வெளிப்படையாகவே கூறி விட்டார். 'தம்முடைய உருவத்தினைச் சுத்தமாக மாற்றி, மாற்றுருவம் பூண்டு நடிக்கக் கமல் ஒருவரால்தான் முடியும். விதவிதமான காரெக்டர்களில் கமலைப் போல் எனக்கும் நடிக்க வேண்டும் என்று 'ஆசை' என்று கூறிய மம்முட்டி, 'ரஜினி போன்ற நடிகர்கள் திறமையும் செல்வாக்கும் இருந்தும் ஏன் 'மசாலா'வில் மூழ்கிப் போகிறார்கள்?' என்றும் கேட்டிருக்கின்றார்!

— எஸ். பாலு.



கட்டடக் கலைக்கு இன்னோர் உதாரணம்.

வெறும் கோஷ்டிப்பூசலுக்கு மட்டுமே பேர் போன தமிழக இ. காங்கிரஸார், நம்ப முடியாத வகையில் ஒற்றுமையாகச் சேர்ந்து நின்று, ஓர் அற்புதமான காரியம் செய்திருக்கிறார்கள். அண்ணாவின் நினைவாகக் கலைநயம் மிக்க அண்ணா அறிவாலயத்தைக் கட்டிய கலைஞருக்குத் தாங்கள் சிறிதும் சளைத்தவர்களல்ல என்பதை, காமராஜ் நினைவாலயம் கட்டியதன் மூலம் நிரூபித்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திற்குள் கட்டடச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாய் நிற்கிறது காமராஜ் நினைவாலயம். இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் கடந்த ஆறு வருடங்களில் உருவாகியுள்ள இந்த நினைவாலயத்தை வடிவமைத்த கட்டட இயல் வல்லுனர் கே. என் சீனிவாசன் சொல்கிறார்...

"இந்த நினைவாலயத்தில் இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய ஓர் ஏ.ஸி. அரங்கம் உள்ளது. கீழ்த்தளத்தில் அலுவலகங்கள் இயங்கும். லண்டனில் உள்ள ராயல் பெஸ்டிவல் ஹால், நியூயார்க்கில் உள்ள லிங்கன் சென்டர் போன்ற அரங்கங்களில் உள்ள சிறப்பம்சங்களை உள்ளடக்கியது காமராஜ் நினைவாலயம். அரங்கிலுள்ள மேடையைத் தவிர்த்துப் பார்த்தால், 120 அடி நீளமும், 135 அடி அகலமும் கொண்டது அரங்கம். மேடையிலிருந்து உள்ளே அரங்கத்தை நோக்கினால் அறுகோண அமைப்பில் அரங்கம் உருவாகியிருப்பது தெரிய வரும். உட்புறம் மரவேலைப்பாடுகள் நிறைய உண்டு. எல்லா மரங்களும் ஏற்காட்டிலிருந்து வந்தவை. ரெட் ஸிடார் என்று பெயர். ஓரிடத்தில் தீப்பிடித்தால் தீ உடனே மற்ற இடங்களுக்குப் பரவாதவாறு மரங்களை, fire proof பெயிண்ட் அடித்து பக்குவம் செய்திருக்கிறோம்.

"ஐம்பதடி அகலமும், அறுபதடி நீளமும் கொண்ட ஸ்டேஜ். தென்னாட்டில் எந்த அரங்கத்திலும் இந்த அளவுக்குப் பெரிய ஸ்டேஜ் கிடையாது. அரங்கத்துக்கு வெளியே பெரிய ஹால். மேலும் சிறப்பம்சம் என்னவென்றால், மாருதி கார், குதிரை, யானை ஆகியவை வெளியிலிருந்து நேராக ஸ்டேஜுக்குள் வரலாம். ஸ்டேஜின் நடுப் பகுதி, மரத்தாலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. எதிரொலி சிறிதும் வராத உள்ளடங்கிய சவுண்ட் ஸிஸ்டம். பரத நாட்டியம் பாலே போன்றவற்றிற்கு மிகவும் வசதி. ஜெனரேட்டர் இருப்பதால் மின்வெட்டு பயமில்லை.

"இந்த அரங்கத்துக்கு அழகூட்டுவது வெளிப்புறம் அமைந்துள்ள நான்கு தூண்கள். சுமார் ஐம்பதடி உயரமுள்ள இந்தத் தூண்கள், சிதம்பரம் கோயில் தூண்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டவை. வெளிப்புறம் உள்ள புல்வெளியில் காமராஜ் சிலையை அமைக்கும் திட்டமும் இருக்கிறது!"

எதிர்காலத்தில் மாடியில் லண்டனில் உள்ள wax museum போல் பல தலைவர்களின் மெழுகுச் சிலைகளை வைக்க இருக்கிறார்களாம். ராஜீவ் காந்தி வந்து விரைவில் இந் நினைவாலயத்தைத் திறந்து வைக்கப் போகிறார்.

— தில்லப்பா

படம்: சுபா

வியக்க வைத்த பை!

பிரீதம் தியாகியின் அலுவலக நண்பர்களுக்கு ஒரே ஆச்சரியம்! சில மாதங்களாகவே அவர் ஒரு பெருத்த பையைத் தம் முதுகில் மாட்டி வருகிறார்! ஆனால் அதை ஒரு முறையும் திறந்ததில்லை. ஆர்வம் தாங்காமல் அவரிடமே கேட்டு விட்டனர் அவரது நண்பர்கள். அவரது பதில் ஒரு சிரிப்பு வெடியையே உண்டாக்கியது! பம்பாய் லோகல் டிரெயினில் கூட்டத்தில் இடிபட்டு, மிக்க அவஸ்தைப் பட்டு விட்ட பிரீதம், ஒரு பையில் சில துணிகளை அடைத்து, அதை ஒரு 'தற்காப்பு சாதனமாக'ப் பயன்படுத்தி வருகிறார்! 'இப்போது ஃப்ரீயாக ஏறி இறங்க முடிகிறது; ஆனால் கால் முட்டிக்கு மட்டும் இன்னும் ஆபத்து தொடர்கிறது' என்கிறார்!

— ராஜீவி நரசிம்மன்.





கல்கி

1990 மே 20
மலர் : 48 இதழ் : 42
பிரமோதூத வைகாசி 6



பொருளாதார வல்லரசாகப் பாரதம் உயர...


'தேசிய முன்னணி அரசின் புதிய தொழில் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும்' என்று தொழிலமைச்சர் அஜித்சிங் கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியில் பல காலமாக பர்மிட் — லைசென்ஸ் — கோட்டா முறையே அமுலில் இருந்து வந்திருக்கிறது. இது, தொழிலதிபரிடமிருந்து பணம் பெற்று, தேர்தலைச் சந்திக்க ஆளும் கட்சிக்கு மிகவும் வசதியான ஏற்பாடு. தேர்தல் நிதிக்குத் தொழிலதிபரிடம் நன்கொடை பெற்று, பின்னர் பதவிக்கு வந்ததும் அவருக்குச் சில சலுகைகள் காட்டி விட்டால் அவர், கொடுத்த நன்கொடையை விடப் பல மடங்கு அதிகமாகப் பணம் பண்ணி விடுவார்! இந்தக் கண்ட்ரோல் முறையில் பணக்காரர்களே மேலும் பணக்காரர்களானார்கள். சோஷலிஸம் என்பது வெற்றுக் கோஷமாக மட்டுமே இருந்து வந்தது.

இதற்கு அடுத்த கட்டமாக அயல்நாடுகளிலிருந்து வாங்கப்படும் யுத்த தளவாடங்கள், விமானங்கள், பெட்ரோலியம் எண்ணெய் போன்றவற்றுக்குக் கமிஷன் அடிக்கும் பழக்கம் அமுலுக்கு வந்தது. இதனால் ஆளும் கட்சிக்கு மறைமுகமாக நிறையப் பணம் கிடைக்க, தொழிலதிபர்கள் தரக்கூடிய 'நன்கொடை' பிச்சைக் காசாகியது! இதன் உடன் விளைவாகப் பர்மிட் லைசென்ஸ் — கண்ட்ரோல் முறை முந்தைய ஆட்சிக் காலத்தில் கணிசமாகத் தளர்த்தப்பட்டது.

தற்போது அஜித்சிங், நமது தொழில்துறை நீண்ட காலமாகவே அரசின் பாதுகாப்பைப் பெற்று வந்துள்ளது என்றும் இனி ஆரோக்கியமான போட்டா போட்டியை அது சந்திக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். எனவே புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில், பர்மிட் — லைசென்ஸ் — கோட்டா முறை மேலும் தளர்த்தப்படும் என்று எதிர்பார்க்கலாம். இதில் பலவித அனுகூலங்கள் உள்ளன.

போட்டா போட்டி இருந்தால்தான் தரமான பொருள்கள், நியாய விலையில் மக்களுக்குக் கிடைக்கும். ஏகபோக்கியமாகத் தொழில் — வியாபாரம் நடந்தால், 'நாம் எதை உற்பத்தி செய்து தருகிறோமோ அதைத்தானே வாங்கிக் கொள்ள வேண்டும்! என்ன விலை நிர்ணயிக்கிறோமோ அதைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்!' என்ற கருத்தில் தயாரிப்பில் அசிரத்தை புகுந்து கொள்ளும். மற்றொன்று, சுதந்திரத் தொழில் வியாபாரத்தில் அரசு அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் முன், பர்மிட் — லைசென்ஸ் போன்றவற்றுக்குத் தொழிலதிபர்கள் கைகட்டி நிற்க வேண்டியதில்லையாதலால் லஞ்ச ஊழல் கணிசமாகக் குறையும். ஏற்கெனவே பணக்காரர்களாக உள்ளவர்கள்தான் தொழில் வர்த்தக விஸ்தரிப்பு செய்து மேலும் பணம் பண்ண முடியும் என்ற நிலை மாறி, தொழில்





துறைக்குப் புதியவர்கள் வர வாய்ப்பு அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்கள் பெருக, தொழில் துறை வளம் பெறும். போட்டா போட்டியினால் பண்டங்களின் தரம் அதிகரிக்க, விலை குறையவும் வாய்ப்புண்டு.

'நமது தொழிலுக்குத்தான் அரசு, பாதுகாப்பு அளிக்கிறதே; நமக்கென்ன கவலை என்று நேற்று வரை திருப்தியுடன் உட்கார்ந்திருந்தவர்கள், இனி, போட்டா போட்டியைச் சந்திக்கும் போது உசுப்பி விடப்படுவார்கள். பாதுகாப்பு போய் விட்டது, நஷ்டம் வரலாம் என்பதால், புதிய துறைகள் பற்றிச் சிந்திக்க ஆரம்பிப்பார்கள். 'அயல்நாடு போவோமா, ஏற்றுமதி வாய்ப்பை ஆராய்வோமா' என்றெல்லாம் யோசித்துச் செயல்படத் தொடங்குவார்கள். தொழில் துறை சுறுசுறுப்படைந்து, வளர்ச்சி வேகம் அதிகரிக்கும்.

கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது மட்டும் போதாது. தொழில் வளப் பெருக்கத்துக்கு அடிப்படைத் தேவைகளான மின்சாரம், தண்ணீர் வசதி, சாலைகள் போன்றவற்றைப் பூர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டும். தொழிலதிபர்களும், நவீன நிர்வாகத் திறனைப் பயன்படுத்திக் குறைந்த செலவில், நிறைய உற்பத்தி செய்ய வழிகாண வேண்டும்.

எல்லாவற்றையும் விட முக்கியம், மலை முழுங்கி மகாதேவர்களாக விளங்கும் அரசுத் துறை நிறுவனங்களில் செலவுகளைக் குறைத்து, லாபம் பெற முயற்சிகள் மேற்கொள்வது.

அஜித்சிங், புதிய கொள்கையை அறிவிப்பதுடன் நில்லாது, இவற்றிலெல்லாமும் தீவிர கவனம் செலுத்தினால், நிச்சயம் பாரதம் உலக நாடுகளிடையே பொருளாதார வல்லரசாக உயர வாய்ப்புண்டு.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஜெய்பால் ரெட்டி ஜெயிப்பாரா?



• பொம்மை



• ஜெய்பால் ரெட்டி

●● ஜனதா தளத் தலைவர் தேர்தலில், ஜெய்பால் ரெட்டிக்கும் பொம்மைக்கும் நடக்கும் போட்டியில், எந்தெந்தத் தலைவர்கள் எந்தெந்த அணியில் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதே குழப்புகிற சமாசாரமாயிருக்கிறது. ஒருவரையொருவர் சகித்துக் கொள்ளாத தேவிலாலும் அஜீத்சிங்கும் கூட ஒன்றாகி, பொம்மையை ஆதரிக்கிறார்கள்! ஜவுளித் துறை அமைச்சர் சரத் யாதவ், தேவிலாலின் ஆதரவாளர். அவர் ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக்குடன் சேர்ந்து, ஜெய்பால் ரெட்டியை ஆதரிக்கிறார்! பீகார் முதல்வர் லலு பிரசாத் யாதவ் தேவிலால் ஆதரவாளர். அவரும் கூட ஜெய்பால் ரெட்டியைத்தான் ஆதரிக்கிறார். ஆனால் பொம்மைக்கு தேவிலால் — சந்திரசேகர் அணி தீவிர ஆதரவு தெரிவிக்கிறது. முடிவு தெரியும் வரை ஒரே சஸ்பென்ஸ்தான்!

●● முக்கியமான ஓர் அதிகாரியை, தமக்கு வேண்டிய இலாகாவில் நியமனம் செய்ய அருண் நேரு எவ்வளவோ கேட்டுக் கொண்டும், பிரதமர் வி. பி. சிங் அதற்கு மறுத்து விட்டார். 'அருண் நேரு லேசுப்பட்டவர் அல்ல; ராஜீவ் அருண் நேருவிடம் மோதிக் கொண்ட பிறகு அவருக்கு ஏற்பட்ட நிலைமை தெரியாதா?' என்று விவரமறிந்தவர்கள் வி. பி. சிங்கிடம் எடுத்துச் சொல்லியும் பிரதமர் மசியவில்லை. வியப்பளிக்கும் இன்னொரு தகவல் — அருண்நேரு இப்போது தேவிலாலின் பக்கம் அதிகம் சாய்கிறாராம்!

●● இந்திரா காங்கிரஸ் இயங்கும் விதத்தில் அதிருப்தி அடைந்திருக்கும் சிலர், ராஜீவ் காந்தியை நேரடியாகக் குற்றம் சாட்ட முடியாத போது, பூட்டா சிங் மீதும், சிவசங்கர் மீதும், மணி சங்கர் மீதும் பழி சுமத்தினார்கள். இன்னும் ஒரு சிலர் இ. காங்கிரசில் இருந்து கொண்டே, தேவிலாலைச் சந்தித்துப் பேசுகிறார்கள்; வி. பி. சிங்கைச் சந்தித்துப் பேசுகிறார்கள்! இன்னும் சிலருக்கோ மாநிலம், மாநிலமாக வளர்ந்து வரும் பி. ஜே. பி. மீது ஒரு கண் இருக்கிறது. முன்னாள் அமைச்சர்கள் கே. சி. பந்த், மார்கரெட் ஆல்வா இருவருமே விரைவில் ஜனதா தளத்தால் பதவி கொடுத்துக் கவுரவிக்கப்படலாம் என்றும் பேச்சு அடிபடுகிறது.

●● புதிய அமைச்சர்களை அறிமுகம் செய்யும் தினத்தன்று, பாராளுமன்றத்தில் இடப் பிரச்னை எழுந்தது. சில புதிய அமைச்சர்கள் எப்படியோ இடம் பிடித்து உட்கார்ந்து விட்டாலும், இன்னும் சில அமைச்சர்கள் பாவம், உட்கார இடம் கிடைக்காமல் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தார்கள். முன்னால் அமர்ந்திருக்கும் உறுப்பினர்களைச் சற்றுப் பின்னால் நகர்ந்து உட்காரச் சொல்லி வேண்டுகோள் விடுக்கப்பட்டும், யாரும் காதில் வாங்கிக்கொள்ளவேயில்லை. இந்த இடப் பிரச்னை சற்று நேரம் நீடித்தது. பிறகு என்ன தோன்றியதோ, புதிய அமைச்சர்களுக்கு இடம் கொடுத்தார்கள் சில எம்.பி.க்கள். இதற்கு என்ன காரணம்? அந்த எம்.பி.க்கள் தாமும் அமைச்சராவோம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது தான்!

●● தனியார்த் துறையில், அதிகாரியாக இருந்த போது, ஓர் அமைச்சக வாசலில் மூத்த செயலர் ஒருவரைப் பார்க்க கால் கடுக்க நின்ற அவரை வெளியே நிற்க வைத்துப் பேசினார்கள். இன்றைக்கு அந்த அதிகாரி, அமைச்சராகப் பதவி ஏற்று, அதே அமைச்சகத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார். வெளியே அன்று நிற்க வைத்துப் பேசிய செயலருக்குத் தர்மசங்கடமாயிருக்கிறது. அமைச்சர் பழசை மறந்திருப்பாரா இல்லை பழி வாங்குவாரா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்!

●● பிரதமரின் முதன்மைச் செயலர் தேஷ்முக்குக்குப் பதவிக் காலம் முடிகிறது. அவருக்கு எக்ஸ்டென்ஷன் கிடைக்காது என்று நினைத்தவர்களுக்கெல்லாம் வியப்பு — அவருக்குப் பதவி நீட்டிப்புக் கொடுத்து விட்டார் வி. பி. சிங். சிறப்புப் பொருளாதார ஆலோசகர் டாக்டர் நிதின் தேசாய், ஐ. நா. பதவி கிடைத்து, ஜெனீவா செல்லவிருக்கிறார். அவருக்குப் பதிலாக அந்தப் பதவி இன்றும் ராஜீவின் அபிமானியாகக் கருதப்படும், பிரதமரின் சிறப்புச் செயலர் அலுவாலியாவுக்குக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

— சித்தார்த்.



பெண்டாட்டி தேவை!

குப்பம்ம கூடி பா. டி. சி. டிரைவர் எம். ஆர். கே. தலைமையில் கண்டக்டர் பார்த்திபனுக்கு விழா எடுக்கிறதாம். எதற்கு? அவர் 'லேடீஸ் ஸ்பெஷல்' பஸ்ஸுக்குக் கண்டக்டராய் நியமிக்கப்பட்டிருப்பதற்காக! அப்படி உசுப்பேற்றி விட்டதில் பாவம் கண்டக்டர் — விதவிதமான பருவக் குமரிகள் அவரைச் சுற்றிப் பவனி வந்து பூச் செண்டுகளாய் மோதி மூச்சுத் திணற வைப்பதாய் மோகன ஸ்லோமோஷன் கனவுகளில் மூழ்கிப் போய், பஸ் ஏறித் திரும்பிப் பார்த்தால் பல்லு போனதும் பருவம் மறந்ததுமாய் நிற்கும் பாட்டியார் கூட்டம். இந் நிலையில்...

பாலைவனத்துச் சோலையாய் அம்சமான 'ஒரு குமரி ஓடோடி வந்து பஸ் ஏறினால் எப்படியிருக்கும்? அதிலும் அது பர்ஸை விட்டு விட்டு வந்து சில்லறை இல்லை என்று கண்ணீர் சிந்த, அதற்கு உதவும் சந்தர்ப்பமும் கிடைத்தால்?' காதல் அரும்பு விடும் கட்டத்தில் அத்தனை ரசிகக் கும்பலையும் சுருட்டிக் கொண்டு விடுகிறார். இளமைக் கட்டுடல் டைரக்டர் கதாநாயகன்!

காதலுக்கு நெய்வார்க்கும் கைங்கர்யம் செய்யும் இரட்டைப் பெண்டாட்டிக்கார எம். ஆர். கே. அமர்க்களம். சுடர் விளக்குக்கும் தேவையான தூண்டுகோல்.

பயணிகளோடு புறப்பட்டுச் செல்ல பல்லவன் பஸ் காத்திருக்கும் போது வெளியே நின்று பேசிக் கொண்டிருந்த டிரைவர் எம்.ஆர்.கே., 'உனக்குத் துணிச்சல் இருந்தா அந்தச் சாந்திகிட்டே போய் ஏன் கல்யாணத்துக்கு வரலேன்னு காரணத்தைக் கேட்டா நீ ஆம்பிளை,' என்று சீண்டி விட, அடுத்த வினாடி சிலிர்த்துக் கொண்டு கண்டக்டர் பார்த்திபன் அந்த பஸ்ஸில் ஏறிக் காட்டுத்தனமாய் ஓட்டிக் கொண்டு போய் அக்கிரகாரத்தையே கிடுகிடுக்க வைத்து அவள் வீட்டு வாசலில் பஸ்ஸை நிறுத்துவது மிகைக்கு ஓர் உதாரணம்.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். என்றோ இளமையில் சிகிச்சை அளித்த போது இதய ஓட்டை கண்டுபிடிக்கப்பட்டு, சாந்தி உடலுறவு கொண்டால் அஸ்தமித்துப் போவாள்; ஆனால் அவளுக்குக் கல்யாணமே பண்ணி வைக்காமலிருந்தால் நல்லது என்று டாக்டர் அறிவித்தது ஒருவேளை விஞ்ஞான ரீதியாய்ச் சரியாய் இருக்கலாம். ஆனால் அதே குறையை வைத்துக் கொண்டு இருபத்தைந்து வயது வரை — அதிலும் இத்தனை வாளிப்பாக ஒரு பெண் விருத்தியாக முடியுமா? கடைசியில் ஓர் ஆந்திரா டாக்டர், 'ஒரு மேஜர் ஆபரேஷன் செய்யணும். செலவு உங்க கட்டுக்கு மீறினதாய் இருந்தாலும் என் கட்டுக்கு அடங்கினது. நீ என் தங்கச்சி மாதிரி,' என்று சொல்லிக் கொண்டு வருகிறாரே — அந்த டாக்டருக்கும் அந்தக் குடும்பத்துக்கும் அப்படி என்ன ஒட்டுறவு?

கண்டக்டர் பார்த்திபன் ட்யூட்டியிலிருக்கும் போது கல்லூரி மாணவர்கள் கலாட்டா செய்து, அப்புறம் அவரை ஆள் வைத்து அடித்ததை எதிர்த்து, பஸ் தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஸ்ட்ரைக் செய்யத் திரளும் போது, பார்த்திபன், 'நமக்கு ட்யூட்டி முக்கியம்; நாம் ஸ்ட்ரைக் செய்தால் பாதிக்கப்படுவது பொது மக்கள்தான்' என்று வலியுறுத்தும் வகையில் ஒரு நீண்ட உபதேசம் செய்து, ஸ்ட்ரைக்கைத் தவிர்க்கிறாரே, அது செயற்கை.

டும்டும் மங்கலத்தை விடவும் மனமில்லாமல் முழுச் சோகத்தை தொடவும் துணிச்சலில்லாமல் முடிவிலே வழிந்திருக்கிறார். இருந்தாலும் 'வெல்கம் பார்த்தி' சொல்லத் தோன்றுகிறது.

— பி. எஸ். எஸ்.

மேனகா காந்தி எழுதிய புராணக் கதைகள்

மன்னனும் தோட்டக்காரனும்

வேட்டைக்குப் போன இடத்தில் வெயிலால் களைத்துப் போன ஒரு மன்னன் மாதுளைத் தோட்டம் ஒன்றில் நுழைந்தான். தோட்டக்காரன் ஒரு பெரிய பழத்தைப் பறித்துக் குடிசைக்குள் கொண்டு போய்க் கொடுக்க, அவனுடைய மகள் கோப்பை நிறைய மாதுளஞ்சாற்றைக் கொண்டு வந்து தந்தாள்.

தாகம் தீர்ந்த மன்னனின் கண்கள் விளைந்து பழுத்த மாதுளந் தோட்டத்தின் மீது வித்தியாசமாகப் படர்ந்தன.

''இந்தப் பழங்களை விற்பதால் உனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?'' என்று மன்னன் கேட்டபோது கபடறியாத தோட்டக்காரன் பதில் சொன்னான் ''முந்நூறு தினார்கள்.''

''வரிவசூல் செய்கிறவருக்கு எவ்வளவு செலுத்துகிறாய்?'' என்று மன்னன் கேட்டான்.

''அப்படி ஏதுமில்லை. விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு மன்னருக்குப் போகிறது. அவ்வளவுதான்!'' என்றான் தோட்டக்காரன்.

நம்மிடம் ஏராளமான மாதுளைத் தோட்டங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு வரி போடத் தொடங்கலாம் என்று எண்ணினான் மன்னன். உடனடியாக நகருக்குத் திரும்ப எண்ணிய அவன், புறப்படும் முன் இன்னும் ஒரு கோப்பை மாதுளைச் சாறு கேட்டான்.

தோட்டக்காரனுக்கு வந்திருப்பது யாரென்று புரிந்தது. வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மீண்டும் குடிசைக்குள் போய் ஒரு கோப்பையில் பழச்சாற்றைக் கொண்டு வந்தான். இப்போது கோப்பையில் சாறு சில துளிகளே இருந்தது!

மன்னன் ஏனென்று கேட்டான்.

''ஐயா முன்பு தாங்கள் பழச்சாறு கேட்ட போது தங்கள் மனம் விசாலமாக இருந்தது. மாதுளை நிறையச் சாறு கொடுத்தது. இப்போது மன்னர் தனக்கு வரிபோட எண்ணுகிறார் என்பதை அறிந்து கொண்ட மாதுளை வறண்டு போய்ச் சாறு தர மறுக்கிறது. ஐந்து பழங்களுக்கு இவ்வளவுதான் கிடைத்தது'' என்றான் தோட்டக்காரன்.



தன்னுடைய பேராசைக்கு வெட்கப்பட்ட மன்னன், வரி எண்ணத்தை விலக்கிக் கொண்டான். அவனுடைய மனமாற்றத்தைப் புரிந்து கொண்ட தோட்டக்காரன் மீண்டும் ஒரு மாதுளம் பழத்தைப் பறித்துக் கொண்டு குடிசைக்குள் போய்க் கோப்பையில் பழச்சாறு கொண்டு வந்தான். இம்முறை விளிம்பு வரை சிவந்த பழச்சாறு மகிழ்ச்சியோடு நிரம்பியிருந்தது.

இந்திரன் செய்த தந்திரம்

அகஸ்திய முனிவர் உபதேசங்களுக்குப் புகழ்பெற்றவர். ஆயினும் வெகு அரிதாகவே அவர் உபதேசங்கள் செய்வார். அதுவும் யாராவது கேட்டால் நிச்சயமாக மறுத்து விடுவார்.

ஒரு முறை சந்நியாசிகளை அழைத்துக் கொண்டு இந்திரன் சுற்றுலாவாக வந்தான். அகஸ்திய முனிவர் இருந்த பிரும்மஸரஸ் பக்கம் வந்த போது, உபதேசம் கேட்க வேண்டும் என்று இந்திரனுக்கு ஓர் ஆசை ஏற்பட்டது.

ஆசிரமத்தைச் சுற்றிலும் தாமரை மலர்களை ஏராளமாக வளர்த்து வைத்திருந்தார் அகஸ்தியர். அவர் பாடுபட்டு வளர்த்திருந்த மலர்கள் அவ்வளவையும் பறித்துச் சாப்பிட்டு விட்டார்கள் இந்திரனும் அவனுடைய கூட்டாளிகளும்.



காட்டிலிருந்து திரும்பிய அகஸ்தியருக்கு இந்த நாசம் தெரிந்தது. திருடியவன் இந்திரன்தான் என்பதும் புரிந்தது.

உடனே, கடமையையும், நன்னெறிகளையும் பற்றி மிக நீண்ட உபதேசம் செய்தார் அகஸ்தியர். இந்திரன் திருப்தியோடு அதைக் கேட்டு விட்டு, ''தங்கள் அருளுரையைக் கேட்க வேண்டும் என்பதால்தான் தாமரை மலர்களைக் கவர்ந்தேன். அப்படிச் செய்திருக்காவிட்டால் கடமையைப் பற்றித் தங்கள் விளக்கத்தைக் கேட்டிருக்க முடியுமா?'' என்று சொல்லி மலர்களை மீண்டும் தோன்றச் செய்தான். அகஸ்தியர் மகிழ்ச்சியோடு அவர்களை வழியனுப்பினார்.



பக்தி இல்லாமல் அருள்

வாரணாசியில் ஒரு வேட்டைக்காரன் இருந்தான். அவன் ஒன்றும் பக்திமான் அல்லன். கோவிலுக்குப் போய் வழிபடுகிறவனும் அல்லன்.

ஒரு நாள் வேட்டைக்குப் போன அவன், ஒரு மானைத் துரத்திக் கொண்டே போக, அது தப்பி விட்டது. இருட்டும் சூழ்ந்து விட்டது. திரும்பிச் செல்ல வழியும் தெரியாமல் களைத்தும் போனான்.

எனவே, பக்கத்திலிருந்த வில்வ மரத்தின் மேல் ஏறி, அதன் இலைகளைப் பரப்பிக் கொண்டு இரவைக் கழிக்க ஆயத்தமானான்.

மரத்தடியில் ஒரு சிறிய சிவலிங்கம் இருந்தது. வில்வ மரத்தின் இலைகளைப் பரப்பிய போது சில இலைகள் உதிர்ந்து லிங்கத்தின் மீது விழுந்தன. அவனுடைய வியர்வைத் துளிகளும் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. அன்று பகல் முழுவதும் அவன் ஏதுமே உண்ணாமல் இருந்திருந்தான்.

அது பல்குண மாதத்தின் தேய் பிறையின் பதினான்காம் இரவு. சிவபிரானுக்கு மிகவும் உகந்த நாள் அது (சதுர்த்தசி.)

வேட்டைக்காரன் தன்னை அறியாமலே, சிவ பூஜைக்குரிய எல்லா நியமங்களையும் நிறைவேற்றியிருந்தான். அவன் பக்திமான் அல்லன் என்றாலும் சிவபிரான் அவன் மீது மகிழ்ச்சியடைந்தார். அதனால் அவன் மரணமடைந்ததும் சுவர்க்கத்துக்குச் சென்றான்!

இறைவன் கேட்ட கோயில்

குஜராத் மாநிலத்தில் பரவாலா என்னுமிடத்தில் பீமநாத மகாதேவருக்கு ஒரு சிறிய கோவில் இருக்கிறது. மிக உயரமான குங்கிலிய மரத்தின் (சால மரம்) அடியில் அது இருக்கிறது.

ஒரு பக்தன் தினமும் மகாதேவரை வழிபட, அவருடைய அருளால் அவன் பெரும் செல்வந்தன் ஆனான். அவன் மிகவும் சந்தோஷமடைந்து, மகாதேவருக்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்பட்டான்.

'இவ்வளவு சக்திவாய்ந்த ஒரு கடவுளுக்கு இவ்வளவு சிறிய அழகில்லாத கோவிலா?' என்று அவன் எண்ணினான். உடனே அந்த இடத்தில் கற்களாலும் செங்கல்லாலும் பிரும்மாண்டமான கோவில் எழுப்பத் திட்டமிட்டான்.

ஆட்களை வரவழைத்து வேலை தொடங்கிய போது, அவர்கள், "இந்தச் சால மரம் இடைஞ்சலாக இருக்கிறது வெட்டி விடலாம்" என்று சொன்னார்கள். "அப்படியே செய்யுங்கள். வெட்டிவிட்டுச் சீக்கிரம் கோவிலைக் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அன்று இரவு முழுவதும் அவனால் தூங்கவே முடியவில்லை. கனவு வந்தது. பீமநாத மகாதேவர் கோபமான முகத்தோடு அவன் கனவில் தோன்றினார்.

"காற்றோட்டமில்லாத புழுங்கிய அறையில் கிடக்க வேண்டும் என்று எனக்கு என்ன அவசியம் வந்தது! அந்தச் சால மரம் தான் என்னுடைய வீடு. மற்ற கடவுள்களும் அதில் குடியிருக்கிறார்கள். முட்டாள்தனமாக அதை வெட்டச் சொல்லியிருக்கிறாயே.... உன்னைப் பணக்காரனாக்கியதற்கு நீ செய்யும் உதவியா இது?" என்று கேட்டார்.

"இல்லை ஸ்வாமி! மன்னித்து விடுங்கள். எனக்குத் தெரியாமல் போயிற்று" என்று நடுங்கினான் அவன். உடனே கோவில் வேலை நிறுத்தப்பட்டது. பீமதேவ மகாதேவரின் சின்னக் கோவில் இன்னும் இருக்கிறது. பக்தர்கள் இப்போது அந்தச் சால மரத்துக்கும் மலர் தூவி வழிபடுகிறார்கள்.

— இப்படி மரம் செடிகளைப் பற்றிய முப்பது புராண இதிகாச ஆதிவாசிக் கதைகள் மட்டுமில்லை; அந்தத் தாவரங்களைப் பற்றிய அறிவியல் மருத்துவக் குறிப்புக்களும் தாவரவியல் விவரங்களும் வரைபடங்களுடன் சொல்லப்பட்டுள்ளன.

ஆசிரியர்: மேனகா காந்தி (யாஸ்மின் சிங் உதவியுடன்) எல்லாத் தாவரங்களும் படைப்புக்கடவுள் பிரும்மாவின் தலை முடியிலிருந்து உருவானவை என்று சொல்லப்படுவதால், நூலுக்கு 'பிரும்மாவின் கேசம்' என்றே தலைப்புத் தந்திருக்கிறார் மேனகா.

— சுப்ரபாலன்

Brahma's Hair — Maneka Gandhi, Rupa. Co வெளியீடு: 188 பக்கங்கள். விலை ரூ. 30.00.

அனாதைப் பெற்றோருக்குப் பிள்ளையாகி...



* ஜபக்

கார்களிலும் பஸ்ஸிலுமாக எத்தனையோ பேர் ஊட்டிக்குப் போகிறார்கள். அவர்களில் எத்தனை பேர் கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் போகிற சாலையில், பதினைந்தாவது மைலில் உள்ள குரு. சரணாலயத்தைக் கவனித்திருக்கப் போகிறார்கள்?

ஆனால் ஒவ்வொருவர் கவனத்துக்கும் உள்ளாக வேண்டிய இருவர் இந்தச் சரணாலயத்தை நடத்துகிறார்கள். அவர்கள், விஜய் சந்த் ஜபக் — நர்ஸி பாய் தம்பதி.

சொந்தப் பிள்ளைகளாலும் பெண்களாலும் கைவிடப்பட்டு அநாதையான ஏராளப் பெற்றோர்களுக்கு இவர்கள் பிள்ளையாகவும் பெண்ணாகவும் விளங்கி ஆதரவளிக்கிறார்கள்!

ஜபக் ஒரு சார்ட்டர்ட் அகவுண்டண்ட்.

''உங்கள் மார்வாரி பிரிவினர் சாதாரணமாக வட்டித் தொழிலில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிக்கத்தான் ஆசைப்படுவார்கள். நீங்கள் மட்டும் எப்படி இந்த மாதிரி வித்தியாசமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டோம்.

''நீங்கள் கேட்பதில் தவறில்லை... நாங்கள் எல்லா சொத்து சுகங்களையும் அனுபவித்து வளர்ந்தவர்கள். அதனால் செல்வத்தின் மீது பிடிப்பு இல்லை. என்னைப் பொறுத்தவரை பணம் அழுக்கு மாதிரி. செலவழித்துத்தான் அந்த அழுக்கைக் களைய வேண்டும்! அதைக் களையக் களையத்தான் ஆத்ம திருப்தி அதிகரிக்கும்...''

''உங்களுக்கு இந்தச் சரணாலயத்தை நடத்தப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது?''

''என் சொந்த நிலத்தில் இந்தச் சரணாலயத்தைக் கட்டியிருக்கிறேன். என் சம்பாத்தியத்தில் ஒரு பங்கைக் கொடுக்கிறேன். ஊட்டியில் எங்கள் நிலத்தைக் கவனித்துக் கொள்ளும் என் சகோதரன் மாதா மாதம் ஒரு தொகையையும் அனுப்பி வைக்கிறான். இங்கே இருக்கிற ஒரு கோடவுன் வாடகையும் உதவுகிறது... முன்பு, தெரிந்தவர்களிடம் நன்கொடை கேட்டதுண்டு. அதில் கசப்பான அனுபவங்கள் நேர்ந்தன. ஒரு மார்வாரி நண்பர் கூடப் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தருவதாகச் சொன்னார். ஐயாயிரம் ரூபாய்க்குச் செக் அனுப்பினார். பிறகு, 'ஜபக் தன் குடும்பத்துக்குச் செலவு செய்யத்தான் இப்படி ரூபாய் வசூலிக்கிறான் போலிருக்கிறது' என்று யாரிடமோ சொன்னதாகக் கேள்விப்பட்டேன். மறுநிமிடமே அந்த ஐயாயிரம் ரூபாயோடு, வட்டியாக முப்பத்தாறு சதவிகிதத்துக்கு ஒரு செக்கும் சேர்த்து நண்பருக்குத் திருப்பி அனுப்பினேன். இரண்டு நாள் கழித்துச் 'சரணாலயத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்த போது ஓடி வந்தார் நண்பர். தாம் சொன்னது தவறு என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பழைய செக்குடன் புதிய செக்கும் தந்து விட்டுப் போனார்!''

''இங்கே வருகிறவர்கள் உண்மையிலேயே அநாதைகள் என்று எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?''

''அவர்களிடம் பேசினால் தன்னாலே தெரிந்து விடுகிறது!''

குளிர் நடுக்குகிற ஒரு டிசம்பர் அதிகாலையில், பழைய கம்பளிப் போர்வையால் உடலைப் போர்த்துக் கொண்டு, நடுநடுங்கியபடி 'சரணாலய' வாசலில் நின்று கொண்டிருந்தாள் ஓர் எண்பது வயதுக் கிழவி. மேட்டுப்பாளையம் அருகே ஒரு கிராமம் அவளுக்கு. 'எனக்கு வேறு போக்கிடம் இல்லையே!' என்ற அவளால் உரக்க அழக் கூட முடியவில்லை. வயதான காலத்தில் தன்னைப் பார்த்துக் கொள்ளுவான் என்று, இருக்கிற சொத்தை எல்லாம் மகனிடம் கொடுத்து விட்டதில், அவளுக்கென்று எதுவுமே இருக்கவில்லை. மருமகள் கொடுமையைப் பொறுத்துக் கொள்ளவும் முடிய



குரு சரணாலயத்தில்...

வில்லை. வீட்டை விட்டுக் கிளம்பி வந்து விட்டாள். யாரோ ஒரு புண்ணியவான் 'சரணாலய'த்தில் கொண்டு வந்து விட்டு விட்டார்....

செட்டியார் விஷயம் இன்னும் பரிதாபம். ரொம்ப தூரத்து உறவு என்று பொய் சொல்லி, கொண்டு வந்து விட்டு விட்டார்கள். பையன்கள் இரண்டு பேரும் பெரிய உத்தியோகஸ்தர்கள். சொத்தை எல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு அப்பாவை அம்போ என்று விட்டு விட்டார்கள்.

இது போல், எத்தனையோ பேர்...

குரு சரணாலயத்தில் இந்த முதிய

வர்களைச் சந்தித்த போது பிரார்த்தனை வேளை. மாலை. அத்தனை பேரும் அமைதியாக உட்கார்ந்து, பாலமலை சுவாமிகளின் சமாதியின் முன்னே, தமிழில் உரக்க, தோத்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சமய வேறுபாடின்றி ஈசனையும், ஏசுவையும், மகாவீரரையும், அல்லாவையும் போற்றித் துதித்துக் கொண்டிருந்தார்கள். காலையும், மாலையும் பிரார்த்தனை உண்டு. காலையுணவு, பகல் உணவு, பிற்பகல் காப்பி, இரவுச் சாப்பாடு எல்லாம் வேளா வேளைக்குக் கொடுக்கிறார், ஜபக். வருடத்தில் மூன்று முறை புதிய உடைகள் வழங்குகிறார்.

தாய்மார்கள் கறிகாய் நறுக்கிக்கொடுத்து, சமையலுக்கு உதவி கூடச் செய்கிறார்கள். ''அந்த அம்மா ஜெயலட்சுமிக்கு இரண்டாயிரம் ஸ்லோகங்கள் மனப்பாடம். நல்லது வாயில் வருகிறதே என்று மருமகள் துரத்திவிட்டாளோ என்னவோ!'' என்றார் ஜபக்.


சுத்தமான ஸ்டோர் ரூம். அழகான டின்களில் லேபிள் ஒட்டி அடுக்கப்பட்டிருக்கும் பொருள்கள். அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அரிசி மூட்டைகள்... நிர்வாகம் செய்வது ஜபக்கின் மனைவி நர்ஸிபாய். முதியவர்களுக்கான ஸ்பெஷல் உணவு வகைகளைத் தாமே இங்கு தயாரித்து வழங்குகிறார்!

அழகான காய்கறித் தோட்டம். பாலுக்கும் மோருக்கும் பசு மாடுகள்.


''நான் வணங்கியவர் பாலமலை சுவாமிகள். அவரைப் பதினைந்து வருடங்கள் தொழுது காப்பாற்றி வந்தேன். அவருக்கு கான்சர் வந்த போது சென்னைக்கு அழைத்துச் சென்று, அவர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சிகிச்சை அளித்தேன். அப்போது ஒரு பெண்மணி, கான்சர் நோயாளியான கணவரைக் காப்பாற்றத் தம் தாலியை 800 ரூபாய்க்கு விற்ற காட்சி என் மனத்தை உருக்கியது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, என்னால் முடிந்த அளவு கான்சர் நோயாளிகளுக்கும் உதவுகிறேன். என்னுடைய கனவு, ஒரு கான்சர் மருத்துவமனை கட்டுவது தான்!'' என்றார் ஜபக், கரகரத்த குரலில்.

— **சாருகேசி**

வண்ணப்படமும், புகைப்படமும்:
யோகா



ஐடிபிஐ-முதலீட்டுப் பத்திரங்கள் முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



- ஆண்டு முழுவதும் சமநிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

Sobhagya-B/89 TAM

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.

மத்யமர்:

அறிவுரை

ராமலிங்கம் திடீர் என்று தீர்மானித்து, சேலத்துக்குப் பஸ் ஏறினான். மனைவியிடம் சொல்லிவிடும்படி தன் நண்பன் முத்துவிடம் தகவல் கொடுத்துவிட்டு, இரவு மாற்று வேஷ்டி கூட எடுத்துக் கொள்ளவில்லை; கண நேரத் தீர்மானத்தில் புறப்பட்டு விட்டான்.

காலையிலிருந்தே அவனுக்கு இருந்த மன உளைச்சலில் அப்பாவைப் பார்க்க வேண்டியது அவசியமாகப் போய்விட்டது. என் எஸ் பஸ்ஸில் சீட்டுக்கிடைத்துக்கிளம்பு முன், தாகமாக இருந்தது. குளிர்பானம் ஆறு ரூபாய் சொல்ல, இளநீர் குடித்தான். ஆறு ரூபாய் செலவழிக்க, கணக்குப் பார்க்க வேண்டியிருக்கிறது. எப்பவும், எப்பவும் பணத்தேவைதான். இருபத்து நாலாம் தேதி தரித்திரம். மனைவி அண்டை அசலில் கடன் வாங்கக் கையில் கிண்ணியும் கன்னத்தில் வெட்கமுமாகச் செல்ல வேண்டும். பேப்பர்காரனையும் பால்காரனையும் பார்த்துப் பதுங்க வேண்டும். வீட்டுக்காரரைப் பார்த்து அசட்டுச் சிரிப்பு!

''இந்த முறை கொஞ்சம் அதிகப்படியாச் செலவு வந்திருச்சய்யா. தங்கை பிரசவத்துக்குப் பணம் அனுப்ப வேண்டியதாயிடுச்சு. அப்புறம்...''

''தங்கை பிரசவம், தம்பி கல்யாணம் ஏதாவது மாசா மாசம் சாக்கு... நானும் நீங்க ஜோடிக்கிற பொய்யையெல்லாம் நம்பிண்டு... ராமலிங்கம் உங்க குடும்பத்தைக் காப்பாத்தறவர் நீங்க ஒருத்தர்தானா...?''

''நல்லாக் கேட்டீங்க'' என்றாள் மீனாட்சி. ''இவருக்கு பிரதர், சிஸ்டர்ங்க நிறையப் பேர் இருக்காங்க. ஒருத்தரும் குடும்பத்தைக் கவனிக்கிறதில்லை. எப்பப் பாரு, எங்களுக்குத் தேவைதாங்க. உருப்படவே மாட்டோம்.''

''அப்படின்னு இல்லை.''

''உங்கப்பாரு சேலத்தில இருக்காரு இல்லை. அவரு ஏதும் உதவி செய்ய மாட்டாரா?''

''அவரு ரிடையர் ஆனவருங்க. அவர்கிட்ட பணம் ஏதும் இல்லை. எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட்டில் இருந்துண்டு லஞ்சம் வாங்காம ரிடையர் ஆனவரு...''

வீட்டுக்காரருக்கு எப்படியாவது மறுதினம் கொடுப்பதாகச் சாக்குச் சொல்லி அனுப்பியதும் மீனாட்சி சிக்கெனப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

''நீங்களும் அஸிஸ்டண்ட் மேனேஜர். மேத்தாவும் அஸிஸ்டண்ட் மேனேஜர்... அவரு மட்டும் எப்படிங்க மாருதி காரு வெச்சிருக்கார்?''

''மேத்தா லஞ்சம் வாங்கறான் மீனாட்சி.''

''நீங்களும் வாங்குங்களேன்...''

அதிர்ந்து போய், ''என்னது... என்ன சொன்னே நீ...?''

''நான் ஏதாவது தப்பாச் சொல்லிட்டேனா? இல்லை. ஊர் உலகமே லஞ்சம் வாங்குது. போலீஸ் வாங்குது. அரசாங்கம் வாங்குது. கார்ப்பரேஷன்லே வாங்கறாங்க. டெலிவிஷன்ல வாங்கறாங்க. ஏன் மந்திரிங்க லெவல்ல கூடப் பேசிக்கிறாங்க. எல்லாச் சனமும் வாங்கறப்ப, லஞ்சம்ங்கறதுக்கு அங்கீகாரம் வந்திருச்சு. இதில ஏதும் தப்பில்லை.''

''மீனாட்சி, நீ இதையெல்லாம் எப்படிப் பேசக் கத்துக்கிட்டே?''

''எல்லாம் சாயம் போற வரைக்கும் புடைவை கட்டி, கிழியற வரைக்கும் உள்பாவாடை கட்டி, இருபதாம் தேதியிலிருந்து சொரணை கெட்டுப் போய் காப்பிப் பொடி, சர்க்கரை ஆழாக்கு, ஆழாக்கா வீடு வீடாக் கடன் வாங்கி, ஒரு சினிமா டிராமா இல்லாம, குழந்தைகளுக்குக் கடைசித் தேதி வந்து ஸ்கூலை விட்டு வெளியே தள்ளற வரைக்கும் ஸ்கூல் பீஸை ஒத்திப் போட்டுப் பிறந்த ஞானோதயம்தாங்க. மேத்தாவைப் பாருங்க... பெண்டாட்டி வேளைக்கு ஒரு ஷிபான் கட்டறா. ஜப்பான் போறா. கோவா போறாங்க. டில்லி போறாங்க. மக கான்வெண்ட்டிலே படிக்குது...''

''ஆனா கேரக்டர் இல்லையே...?''

''கேரக்டர்! கேரக்டரை வெச்சுக்கிட்டு நூறு கிராம் உப்புக் கூட வாங்க முடியாதுங்க.''

''நீ எப்படி இப்படியெல்லாம் பேசறேன்னு நினைச்சுப் பார்க்கக் கூட முடியலை மீனாட்சி.''

''ராத்திரி நிதானமா யோசிச்சுப் பாருங்க. நான் சொல்றதிலே உள்ள நியாயம் புரியும். நான் என்ன சொன்னேன்... ஊரோட ஒத்து வாழுன்னுதான் சொல்றேன். ஊரே லஞ்சம் வாங்குது. நீங்க வாங்கினா என்னவாம்?''

''கன்னத்திலே அறைவேன்.''

''இதுதான் பாக்கி இனிமேலே.''

ஆபீசுக்குப் போன போது, அவன் மனத்தில் அவள் சொன்னது அத்தனையும்

சுஜாதா

உறுத்திக் கொண்டே இருந்தன. ஒரு புறம் வாங்கினால் என்ன என்று தோன்றியது. மறுபுறம் அப்பாவின் சாந்த முகம் தோன்றியது. 'மகனே, முப்பது வருடங்கள் எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட்டில் வேலை பார்த்தேன். ஒரு பைசா வாங்கினதில்லை. ஆபீஸ் பென்சிலைக் கூட வீட்டுக்கு எடுத்து வந்ததில்லை. அவசரமாக இருந்தால் கூட உன் தாய்



ஆபீஸ் ஜீப்பில் ஆஸ்பத்திரி போனதில்லை. அப்படிப்பட்ட வம்சம் நீ. லஞ்சத்தைப் பற்றி நினைக்கலாமா?'

மொத்தம் கணக்குப் பார்த்ததில், ராமலிங்கத்துக்கு இருபதாயிரம் ரூபாய் கடன் இருந்தது. பி. எஃப். அன்யுவல் அட்வான்ஸ், ஃபெஸ்டிவல் அட்வான்ஸ் என்று எடுத்ததற்தெல்லாம் போக, தாழு கல்யாணத்திலிருந்து சேர்ந்து போனது. இவனுக்கு ஆயிரம், அவனுக்கு ஐந்நூறு என்று கொடுக்க வேண்டியதையெல்லாம் கூட்டிப் பார்த்தான். இருபதாயிரம்.

காண்டீனில் மேத்தா அவனைப் பார்த்து, சோப்ரா என்பவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். சாயங்காலம் வீட்டுக்கு நடந்து செல்கையில் அந்த சோப்ரா லிஃப்ட் கொடுத்தான். வழியில் தாஜ் ஓட்டலுக்கு அழைத்துச் சென்று, கேக்கு முந்திரிப் பருப்பு ஆர்டர் செய்துவிட்டு, நேராக விஷயத்துக்கு வந்தான். சோப்ராவின் பில் ஒன்று பாஸ் ஆகாமல் ராமலிங்கத்தின் செக்ஷனில் இருப்பதாகவும் முப்பதாம் தேதிக்குள் அதை பாஸ் செய்தால் பணம் தருவதாகச் சொன்னான்.

''என்ன பில் அது?''

''ஒரு டேட்டா அக்விஸிஷன் ஸிஸ்டம் சப்ளை பண்ணியிருக்கிறோம். அக்ஸெப்டன்ஸ் ஆகியிருக்கிறது. ஒரு ப்ரிண்டர் வரவில்லை. கஸ்டம்ஸில் மாட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு வாரத்தில் அதை விடுவித்து விடுவோம். பார்ஷியல் சப்ளை போட்டுக் கொடுத்தாலும் போதுமானது.''

''அது ரூலில் இல்லை. பர்ச்சேஸ் ஆர்டர்படி எல்லா அயிட்டங்களும் இருக்க வேண்டும்.''

''மற்றபடி 'ஐ நோட்' எல்லாம் சரியாகவே இருக்கிறது. டெக்னிகல் ஆபீஸில் அக்கவுண்ட்ஸில் ராமலிங்கம்ஜி சம்மதித்தால் ஆகும் என்று சொன்னார்கள். ராமலிங்கம்ஜி... வரவேண்டிய பணம் எழுபது லட்சம். அதில் ஒரு பர்ஸெண்ட் தருகிறேன். ஏஜென்ஸி கமிஷனாக எப்படியும் நந்திருப்பேன். மேலே தேவை என்றாலும் தருகிறேன். ராமலிங்கம்ஜி யு மஸ்ட் ஹெல்ப் மீ. இல்லையென்றால் பாங்கில் வட்டி கொடுத்து மாய்ந்து போவேன்!''

''பார்க்கலாம்.''

''அப்படிச் சொல்லாதீர்கள். நாளைக்குப் பத்தரைக்கு வருகிறேன், மேத்தாவுடன். இதில் ஏதும் சிக்கல் இல்லை. பல ஆர்டர்கள் மேத்தாவின் செக்ஷனில் இந்த மாதிரி பாஸ் ஆகியிருக்கின்றன.''

''பார்க்கலாம். இப் தி பேப்பர்ஸ் ஆர் இன் ஆர்டர்.''

''பேப்பர்ஸ் ஆர் நாட் இன் ஆர்டர். அதனால்தானே உங்களிடம் வந்திருக்கிறேன்.''

''லெட் மீ ஸீ.''

வீட்டுக்குத் திரும்புகையில் எழுபதாயிரம்! என் கஷ்டம் எல்லாம் விடிந்துவிடும். ஒரு சதவிகிதம். ஒரே ஒரு சதவிகிதம். என்ன... பாங்குக்கு வட்டியாகக் கொடுப்பதில் எனக்குத் தருகிறார்.

'மகனே என்னடா இது?'

அப்போதுதான் அப்பாவைப் பார்க்க வேண்டும் என்கிற தீவிர இச்சை ஏற்பட்டு, சட்டென்று பஸ் ஏறிவிட்டான்.

சேலம் அஞ்சு ரோடில் இறங்கிக் கொண்டு மெல்ல நடந்தான். களிமண் வரப்பில் ஒதுங்கியிருந்த காலனியில், ஒற்றைத் தென்னைக்கருகில், பெட்டி போல வீடு கட்டியிருந்தார் அப்பா. பணம் போதாமல் அஸ்பஸ்டாஸ் கூரை போட்டு, அதன் மேல் பரங்கி, அவரை, மல்லிகை என்று பரவ விட்டிருந்தார். இவன் போன போது, இருட்டில் உலர்ந்த வேட்டியைக் கொடியிலிருந்து உருவி மடித்துக் கொண்டிருக்க, அம்மா கட்டிலில் பழைய ஆர்த்ரைடிஸ் அவஸ்தையில் முனகிக் கொண்டிருந்தாள்.

''யார் ராமலிங்கமா? வெளிச்சமே தெரியலை.''

''ஆமாப்பா.''

மத்யமர்: வாசகர் விமர்சனம்

'சுஜாதா எழுதி வரும் 'மத்யமர்' வரிசையில் நான்காவது கதை 'அறிவுரை' இக் கதையில் சுஜாதா



கையாண்டுள்ள உத்தி, கரு, நடை பாத்திரப் படைப்பு போன்ற பல அம்சங்களையும் கருத்தில் கொண்டு, அவற்றுள் ஏதேனும் ஓர் அம்சத்தை மட்டும் தேர்ந்தெடுத்து தபால் கார்டில் எழுதியனுப்பப்படும் விமர்சனங்களை வரவேற்கிறோம். சிறுகதையின் பலத்தை மட்டுமின்றிப் பலவீனமிருப்பின் அதையும் தாராளமாக விமர்சிக்கலாம்.

பிரசுரமாகும் விமர்சனங்களுக்கு ரூ 25 சன்மானம். சிறந்த விமர்சனத்துக்கு ரூ. 50 சிறப்புப் பரிசு.

விமர்சனங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 22.5.90.

''எந்திரி, ராமலிங்கம் வந்திருக்கான். பஸ்ல வந்தியா?''
''ஆமாப்பா.''
''சாப்ட்டியா?''
''வழியிலே சாப்ட்டம்பா.''
''எங்கே இப்படித் திடீர்னு?''
''அப்பா, நான் உங்க கூட நிதானமாப் பேசணும்.''
''உக்காரு. எதைப் பத்தி?''
''ஆபீஸ்ல என் வேலையைப் பத்தி.''
''ஏதாவது சிக்கலா?''
''இல்லைப்பா. வெவரமாச் சொல்லணும்.''
''முதல்ல உங்கம்மாவைப் போய் விசாரிச்சுட்டு வா. எழுந்திருக்க மாட்டாம சிரமப்படறா...''
அம்மாவின் அருகில் சென்று, ''ராமலிங்கம் வந்திருக்கிறேன்'' என்று சொன்னதும், அவனைத் தொட்டுப் பார்த்துக் கண்ணீர் விட்டாள். ''எங்கனாச்சியும் சௌக்கியமா இருந்தாச் சரி. பேரப் பிள்ளைங்களை அழைச்சுட்டு வரலியா? லீவு இல்லையா? மருமவ சௌக்கியமா? சாப்ட்டியாப்பா? ரெண்டு நாள் இருப்பியா?''
எல்லாம் முடிந்தபின் வாசலில் கயிற்றுக் கட்டிலில் வந்து அப்பாவுடன் அமர்ந்தான். அப்போதுதான் நிலா புறப்பட்டிருந்தது.
''சொல்லு.''
''அப்பா, நீங்க எப்படி எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட்ல லஞ்சம் வாங்காம இருந்தீங்க?''
அவர் சற்று யோசித்து, ''எனக்கு என்னவோ வாங்கணும்னு நினைப்பே இல்லை. வாங்கலை!'' என்றார்.
''எப்படிச் செலவினங்களைச் சமாளிச்சீங்க? எப்படி எங்களையெல்லாம் படிக்க வைச்சீங்க? எப்படி எல்லாரையும் அரவணைச்சு, எப்படிப்பா முடிஞ்சுது, உங்களால?''
அப்பாவின் கண்கள் நிஷ்டை போல மூடியிருந்தன. ''என்னவோ சமாளிச்சேன்பா... கேட் பாஸ் இல்லாம ஒரு கன்ஸைன்மெண்ட்... ஒரு மாதத்துக்கு ஒரு க்ரேட் அனுப்பினாப் போதும்னு வாலஸ்னு ஒரு இங்கிலீஷ் கம்பெனிக்காரன்தான் கேட்டுக்கிட்டான். ஒரு பண்ணையே தர்றேன்னான். உனக்கு ஒரு மெடிக்கல் சீட்டு தர்றேன்னான். அதுவும் கேட்பாஸ் விவகாரம்தான். எனக்கு என்னவோ தோணலை. எங்கப்பாரு சொன்ன புத்திமதிங்களை ஒருவேளை நெனைச்சுப் பார்த்தேனோ என்னவோ! ஆனா வாங்கலை.''
''இப்ப எனக்கும் அந்தப் பிரச்னை வந்திருக்குதுப்பா.''
''என்னப்பா?''
''ஒரு ஆளு பில்லு பாஸ் பண்ணினா எழுபதாயிரம் தர்றதாச் சொல்றான்.''
''உனக்குப் பணத்தேவை இருக்குது.''



''வரதட்சிணை பத்தாயிரம் கேட்கிறீங்களே! பிள்ளைக்கு என்ன வருமானம்?''
''இலவச வேட்டி வாங்கப் போயிருக்கிறான். வந்ததும் கரெக்டா கேட்டுச் சொல்றேன்...''
— சுதர்ஸன்

''ஆமாப்பா. கடன்லே இருக்கேன். மீனாட்சி வாங்கு வாங்குன்னு போட்டு உலுக்கறா!''
''அந்தப் பணம் உனக்குப் பயன்படும்.''
''பயன்படும்பா. ஆனா லஞ்சம் வாங்க இஷ்டமில்லை. உங்களைப் பத்தி நினைப்பு வர்றது. எங்க எல்லாரையும் படிக்க வெச்சீங்க. ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பீங்க. உங்களுக்கும் நிறையப் பணத்தேவை இருந்திச்சு. எப்படிப்பா சமாளிச்சீங்க?''
''எல்லாரையும் போலத்தான்... நகையை வித்து, வீட்டை வித்து, லோன் எடுத்து...''
''அதில்லைப்பா. எப்படி உங்களுக்கு அத்தனை மனபலம் இருந்திச்சு? அந்த ரகசியத்தைச் சொல்லுங்கப்பா...''
அப்பா சற்று நேரம் மௌனமாக இருந்தார்.
''சொல்றேன், கிட்ட வா,'' என்றார்.
மெல்லக் குரலைத் தாழ்த்தி, ''லஞ்சம் வருதுன்னா வாங்கிடு,'' என்றார்.
''என்னப்பா சொல்றீங்க?'' என்றான் அதிர்ச்சியடைந்து.
''ஆமாடா. நான் வாழ்நாள் முழுதும் லஞ்சம் வாங்காம என்னத்தைக் கண்டேன்? பரம்பரை வீட்டை வித்துட்டுப் புதுசா வீடு கட்டி முடிக்காம, ஒழுகுது. உங்கம்மாவுக்கு வைத்தியம் பார்க்க முடியலை. இத்தனை பேர் இருக்கீங்க மகனுக, மகளுக. யாரும் என்னைத் தீண்டறதில்லை. நீயே கடைசியா எங்களைப் பார்க்க எப்ப வந்தே? யோசிச்சுப் பாரு! மூணு வருசம்! எங்கிட்ட மட்டும் லஞ்சம் வாங்கிப் பணம் காசு இருந்தா இப்படி மகன்களும் மகள்களும் என்னை உதாசீனம் பண்ணுவீங்களா? சொல்லுப்பா... அந்தக் கதி உனக்கு வராம இருக்க, வாங்குப்பா. தாராளமா வாங்கு. உன் பொண்டாட்டி சொல்றதுதான் சரி. வாங்கு...'' என்று சொல்லிவிட்டுக் கிழவர் தூங்கப் போனார்.



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 77

நெடுமரம் சாய்ந்தது!

அஸ்தான மண்டபத்துக்குள் அந்தப்புரப் பெண்கள் வருவதற்கென்று ஏற்பட்ட வாசல் வழியாக வந்தியத்தேவன் புகுந்தான். அதனால் அவன் முதலில் அங்கிருந்த பெண்மணிகளைப் பார்க்கும் படி நேர்ந்தது. அவர்களில் எல்லாருக்கும், பின்னால் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்த போது, வந்தியத்தேவன் ஈரத் துணிகளுடன் அலங்கோலமாக உட்புகுந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். அவளைப் பார்த்தவுடனே தான் வந்தியத்தேவனும் மணிமேகலைக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிக் கூறினான். அது அவளுடைய காதில் விழுந்தது; அவள் அருகில் இருந்த இளைய பிராட்டி குந்தவை, வானதி இவர்கள் காதிலும் விழுந்தது. அவர்கள் மூவரும் வந்தியத்தேவன் புகுந்த வாசல் வழியாக விரைந்து சென்றார்கள். தண்ணீர் சொட்டியிருந்த அடையாளத்தைக் கொண்டே அவன் வந்த வழியைக் கண்டு பிடித்துக் கொண்டு சென்றார்கள்.

வந்தியத் தேவனுடைய வார்த்தைகள் அந்த மண்டபத்திலிருந்த மற்றவர்களின் காதில் தெளிவாக விழவில்லை. ''காப்பாற்றுங்கள்!'' என்ற வார்த்தை மாத்திரம் சிலர் காதில் கேட்டது. கந்தமாறன் — பார்த்திபேந்திரன் இவர்கள் காதில் அந்த வார்த்தை கூட விழவில்லை. ஏதோ உருத் தெரியாத அலறல் சத்தம் மட்டுமே அவர்களுக்குக் கேட்டது.

முதலில் அவ்விருவரும், அப்படி அந்தப்புர வழியில் புகுந்து வந்த உருவத்தை, இறந்துபோன வந்தியத் தேவனின் ஆவி வடிவமோ என்று நினைத்தார்கள். அகால மரணமடைந்தவர்களின் ஆவிகள் இந்த உலகை விட்டுப் போகாமல் இங்கேயே சுற்றி அலையும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் பலர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ''வடவாறு திரும்பினாலும் திரும்பும்!'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கூறி வாய் மூடுவதற்குள் வந்தியத் தேவன் சொட்ட நனைந்த ஈரத் துணிகளுடன் அங்கே வந்து தோன்றியதும், அவர்களுக்கு அத்தகைய பிரமை ஏற்படக் காரணமாயிருந்தது.

ஆனால் வந்தியத் தேவனைத் தொடர்ந்து வந்த சேவகர்கள் பரபரப்புடன் உள்ளே புகுந்து அவனைப் பற்றிக் கொண்டதும், மேற்கூறிய பிரமை நீங்கியது.

''சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும்! இந்தப் பைத்தியக்காரன் அரண்மனைப் படித்துறைக் கதவு வழியாகப் புகுந்து ஓடி வந்தான். நாங்கள் தடுத்தும் கேட்கவில்லை!'' என்று அச்சேவகர்கள் சொல்லி விட்டு, வந்தியத் தேவனைத் தங்களுடன் இழுத்துச் செல்ல முயன்றார்கள்.

அமரர் கல்கி

அம்மம்மா! இந்த வந்தியத் தேவனுடைய உயிர்தான் எவ்வளவு கெட்டியானது? எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் எப்படியோ தப்பித்து வந்து விடுகிறானே? — இந்த வியப்பு பார்த்திபேந்திரன் உள்ளத்தில் எழுந்தது. அத்துடன் குரோதமும் கொழுந்து விட்டெரிந்தது.

எங்கே போகிறோம் என்பது தெரியாமல் அவன் ஓடிவந்து இங்கே சிக்கிக் கொண்டிருக்கிறான்! இனி ஒரு முறை அவன் தப்பித்துச் செல்வதற்கு இடந்தரலாகாது. இவ்வாறு ஒரு கணத்தில் முடிவு செய்து கொண்ட பார்த்திபேந்திரன், சக்கரவர்த்தியின் சந்நிதானம் என்பதையும் மறந்து பாய்ந்து சென்று வந்தியத் தேவனுடைய தோள்களில் ஒன்றைப் பலமாகப் பற்றிக் கொண்டான்.

"இவன் பைத்தியக்காரன் அல்ல; கொலைகாரன்! ஆதித்த கரிகாலரைக் கொன்ற வஞ்சகத் துரோகி!" என்று கூவிக் கொண்டே, அவனைப் பிடித்து இழுக்க முயன்ற சேவகர்களை ஜாடையினால் அப்புறப்படுத்தினான்.

பார்த்திபேந்திரனைப் பின் தொடர்ந்து கந்தமாறனும் ஓடிச் சென்று வந்தியத் தேவனுடைய இன்னொரு தோளையும் இறுகப் பிடித்துக் கொண்டான்.

இருவருமாக அவனை இழுத்துக் கொண்டு வந்து சுந்தர சோழ சக்கரவர்த்தி அமர்ந்திருந்த தர்ம பீடத்துக்கு எதிரில் நிறுத்தினார்கள்.

சக்கரவர்த்தி வந்தியத் தேவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, "பால் வடியும் முகமுள்ள இந்தப் பிள்ளையா என் மகனைக் கொன்றதாகச் சொல்கிறீர்கள்? என்னால் நம்ப முடியவில்லையே? இவன்தானே ஆதித்த கரிகாலனிடமிருந்து எனக்கு ஓலை கொண்டு வந்தான்?" என்றார்.

"ஆம், ஐயா! இவன்தான் ஓலை கொண்டு வந்தான்! இவன்தான் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே மூடு பல்லக்கில் வந்த நந்தினி தேவியைச் சந்தித்து இரகசியம் பேசினான். இவனேதான் இக்கோட்டையிலிருந்து முன்னொரு தடவை தப்பி ஓடினான். இப்போதும் பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து ஓடினான்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"என் முதுகிலே குத்திக் காயப்படுத்தி விட்டுத் தப்பி ஓடியவன் இவன்தான்!" என்று சொன்னான் கந்தமாறன்.

முதன் மந்திரி அநிருத்தர், "ஏன், அப்பா! இவனைத்தானே நீ முதுகில் வேலெறிந்து கொன்றதாகச் சற்று முன் சொன்னாய்?" என்று கேட்டார்.

"ஆம்; சொன்னேன்! தாங்கள் இக் கொலைகாரனுக்கு ஒத்தாசை செய்து இவனை உயிர்ப்பித்துக் கொண்டு வந்து சேர்ப்பீர்கள் என்று நான் கண்டேனா?" என்றான் கந்தமாறன்.

பொன்னியின் செல்வர் இத்தனை நேரமும் செயலற்று நின்றார். வந்தியத்தேவன் மறுபடியும் தப்பி ஓடப் பார்த்து நதியில் குதித்திருக்கிறான் என்றும், நீச்சல் பயிற்சி போதிய அளவு பெறாத படியால் திரும்பக் கரையேறி இப்படித் தெறிகெட்டு வந்து சபையில் புகுந்திருக்கிறான் என்றும் அவர் எண்ணிக் கொண்டார். இதனால் அவருக்கு வந்தியத் தேவன் மீது பிறந்த கோபம் தணிவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று.

கந்தமாறனுடைய கடைசி வார்த்தைகளைக் கேட்டதும், பொன்னியின் செல்வர் கம்பீரமாக நடந்து முன்னால் வந்து வந்தியத் தேவன் அருகில் நின்றார்.

"தந்தையே! இந்த வல்லத்து இளவரசர் என் உயிருக்குயிரான நண்பர். இலங்கையிலும் நடுக் கடலிலும் எனக்கு நேர்ந்த அபாயங்களில் என்னைக் காப்பாற்றிவர். இவர் உயிர் பிழைத்து வந்தது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவர் மீது குற்றம் சுமத்துவது என் மீது குற்றம் சுமத்துவது போலாகும்!" என்றார்.

அவருடைய குரலில் தொனித்த அதிகார தோரணை எல்லாரையும் சிறிது நேரம் மௌனமாக இருக்கச் செய்தது.

பின்னர் முதன் மந்திரி அநிருத்தர், "பொன்னியின் செல்வ! சிறிது யோசித்துப் பாருங்கள்! இளம் சம்புவரையரின் வேலுக்கு இரையாகி மாண்டதாகச் சொல்லப் பட்டவர் எப்படியோ உயிரோடு வந்து குதித்திருக்கிறார். அவர் மீது குற்றம் என்னமோ ஏற்கெனவே சாட்டி விட்டார்கள். ஆகையால் விசாரித்து உண்மையைத் தெளிவாக்கி விடுவது நல்லதல்லவா?" என்றார்.

பார்த்திபேந்திரன், "ஆம், ஐயா! தாங்கள் நாளைச் சோழ சிங்காதனத்தில் ஏறப் போகிறவர்கள். எப்பேர்ப்பட்ட குற்றவாளியானாலும் தண்டிக்கவோ மன்னிக்கவோ தங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் விசாரணையே வேண்டாம் என்று சொல்வது உசிதமா? வீண் சந்தேகங்களுக்கு இடம் தருமல்லவா?" என்றான்.

"அத்துடன் நம் இளங்கோ இன்னொரு

விஷயத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளவரசர் தாம் சிங்காதனம் ஏறுவதற்காக இந்த வந்தியத் தேவனை அனுப்பித் தம் தமையனைக் கொல்லச் சதி செய்ததாக ஒரு வதந்தி பரவி வருகிறது. அதற்கு இடந் தரக் கூடாது அல்லவா?'' என்றான் கந்தமாறன்.

இதைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் பயங்கரமடைந்து நின்றார்கள். சம்புவரையர் மட்டும் முன் வந்து கந்தமாறனைக் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்து, ''அடே மூடா! உன்னால் நமது பழமையான வம்சமே நிர்மூலம் ஆகி விடும் போலிருக்கிறதே! சமய சந்தர்ப்பம் தெரியாமல் உளறுவதில் உனக்கு நிகர் வேறு யாரும் இல்லை!'' என்று கோபமாகச் சொன்னார்.

கந்தமாறன் அவனுடைய தந்தையை வெறித்து நோக்கினான். அவனுடைய உதடுகள் துடித்தன. அடுத்த நிமிஷம் அவன் என்ன செய்திருப்பானோ, என்ன சொல்லியிருப்பானோ, தெரியாது! நல்லவேளையாக அச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையர் ஓர் அடி முன் வந்து சம்புவரையரைப் பிடித்துக் கொண்டார். தொண்டையை முன் போல் கனைத்துக் கொண்டு, ''சம்புவரையரே, உமது மகன் செய்த மூடத்தனமான காரியங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து விட்டான். சோழ சாம்ராஜ்யத்துக்கு ஒரு பெருந் தொண்டு செய்திருக்கிறான். அதைத் தெரிந்து கொள்ளும் போது தாங்களே அவனைப் பெற்றது குறித்துப் பெருமை அடைவீர்கள். கொஞ்சம் பொறுங்கள்! அவன் மீது சீற்றங் கொள்ள வேண்டாம்!'' என்று சொல்லிக் கொண்டே சம்புவரையரைப் பிடித்து இழுத்துச் சிறிது அப்பால் கொண்டு போய் நிறுத்தினார். பின்னர் இளஞ் சம்புவரையனைப் பார்த்து, ''நீ இந்த வந்தியத் தேவன் மீது வேல் எறிந்து கொன்றதாகச் சொன்னாய் அல்லவா? இவன்தான் அப்போது குதிரை மேல் நதியைக் கடந்தவன் என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

முதன் மந்திரி, ''ஐயா! இது பற்றி என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல அநுமதிக்க வேண்டும்!'' என்றார்.

ஆழ்வார்க்கடியான் முன்னால் வந்து, ''பிரபுக்களே! என் குற்றத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்த வல்லத்து இளவரசர் குதிரை மேலேறி ஓடவே இல்லை. இவர் நமது உண்மை மதுராந்தகத் தேவரைக் கொலைகாரனிடமிருந்து காப்பாற்றி விட்டுக் காயம் பட்டு விழுந்தார். இவரை நானே மூடு பல்லக்கில் ஏற்றிக் கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்தேன். நாலு நாளாக இங்கே தான் இவர் இருந்து வருகிறார். ஆகையால் இளஞ் சம்புவரையர் இவர் முதுகில் வேலெறிந்திருக்க முடியாது!'' என்றான்.

பெரிய பழுவேட்டரையர், ''நானும் அப்படித்தான் ஊகித்தேன். சம்புவரையரே! உமது மகனுடைய தவறுகளையெல்லாம் மன்னித்து விடுங்கள்! சோழ சாம்ராஜ்யத்துக்கு அவன் மகத்தான சேவை செய்திருக்கிறான்! அவன் வேலெறிந்து கொன்றவன் வீர பாண்டியனுடைய மகனாகவே இருக்க வேண்டும். அன்று மாலை முதல் பழைய மதுராந்தகனைக் காணவில்லையல்லவா? ஓடிப் போக முயன்றவன் அவனாகவே இருக்க வேண்டும்; கடவுள் எத்தனை பெரிய விபத்திலிருந்து இந்த இராஜ்யத்தைக் காப்பாற்றினார்!'' என்று கூறி நிறுத்தினார்.

இந்த வார்த்தைகளினால் ஏற்பட்ட வியப்பும் திகைப்பும் தீர்வதற்குள் அந்த முது பெருங் கிழவர் மேலும் கூறினார்:—

''சக்கரவர்த்தி! அடியேனுடைய கடைசி வார்த்தைகளைச் சிறிது செவி கொடுத்துக் கேளுங்கள்! தூமகேது தன்னுடைய தீய காரியத்தைச் செய்துவிட்டு மறைந்துவிட்டது. தங்கள் தீரப் புதல்வர் ஆதித்த கரிகாலரும் மறைந்து விட்டார். ஆனாலும் தங்கள் குலத்து முன்னோர்களும் என் குலத்து முன்னோர்களும் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்து ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்யத்துக்கு நல்ல காலம் இருக்கிறது; இன்னும் நெடு நாள் இந்தச் சாம்ராஜ்யம் நிலைத்திருக்கப் போகிறது; விரிந்து பரவி மகோந்நத நிலையை அடையப் போகிறது. ஆகையினாலேயே, கதைகளிலே கூடக் கேட்டறியாத பெரிய விபத்திலிருந்து இந்தச் சோழ குலமும் சாம்ராஜ்யமும் தப்பியது. அவ்விதம் தப்புவதற்கு முக்கிய காரணமாயிருந்தவன், இந்த வாணர் குல வீரன் வந்தியத் தேவன்தான்! இவன் மூலமாகவே மோகத் திரையினால் மூடப் பட்டிருந்த என் கண்கள் திறந்தன. சம்புவரையர் மாளிகையில் நாங்கள் நள்ளிரவுக் கூட்டம் நடத்திய அன்று இவன் தற்செயலாக அங்கு வந்து சேர்ந்தான். அன்றைய தினம் இந்தச் சிறு பையனுக்குத் தெரியக் கூடாதென்று மூடி மறைத்து ஒரு காரியத்தை நாம் செய்ய வேண்டியிருக்கிறதேயென்ற அவமான உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. பிறகு இவன் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே நந்தினியைச் சந்தித்துப் பேசியதாக என் சகோதரன் கூறினான். நந்தினியின் உதவியினாலேயே இவன் கோட்டையை விட்டுத்

தப்பிச் சென்றதாகவும் கூறினான். அதிலிருந்து என் உள்ளத்தில் சந்தேகத்தின் முளை தோன்றி வளர்ந்து வந்தது. என்னைச் சுற்றிலும் நடப்பவற்றையும் அவற்றின் காரணங்களையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். அடிக்கடி மாயை இருள் வந்து என் அறிவை மூடினாலும் மீண்டும் மீண்டும் உண்மை ஒளியின் கிரணங்கள் உட்புகுந்து இருளைப் போக்க முயன்றன. கடைசியில், துர்க்கா பரமேசுவரியின் கிருபையினால் மதுரை ஆபத்துதவிகளின் சதியாலோசனையைப் பற்றி அறிந்தேன். நானே மறைந்திருந்து அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டிரா விட்டால், நம்பியே இருக்க மாட்டேன். அதற்குப் பிறகும், தங்கள் செல்வக் குமாரி இளையபிராட்டி என் உள்ளத்தை வேறு விதத்தில் குழப்பி விட்டார். நந்தினி அவருடைய சகோதரி என்றும், அவளுக்கு நான் தீங்கு இழைக்கக் கூடாது என்றும் கூறினார். அவரும் ஒரு வேளை ஏமாந்திருக்க முடியுமோ என்று ஐயமுற்றேன். எனினும், மாறு வேடம் பூண்டு கடம்பூர் சென்று உண்மையை அறிய விரும்பினேன். காளாமுகச் சைவ வேடம் தரித்தேன். புலித்தோல் ஆடையும் மண்டையோட்டு மாலையும் அணிந்து சென்றேன். பிரபு! காளாமுகச் சைவர்கள் என்னை அவர்களுடைய தலைவனாகக் கொண்டிருந்தார்கள். என் அவமானத்தைக் கேளுங்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு நானே சக்கரவர்த்தியாக வேண்டுமென்ற துரோகமான துராசையின் விதையை என் மனத்தில் நந்தினி விதைத்தாள். காளாமுகக் கூட்டத்தார் அந்தத் துராசைக்குத் தூபம் போட்டு வந்தார்கள். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவது போல் கட்டி விட்டுப் பிறகு அவரையும் துரத்தி விட்டு நானே சக்கரவர்த்தியாகிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அந்தக் காளாமுகர்களிலே ஒருவனான இடும்பன்காரி சம்புவரையர் அரண்மனையில் சேவகனாயிருந்தான். மதுரை ஆபத்து உதவிகளுக்கும் அவன் ஒற்றனாக உதவி வந்தான். அவனைப் பயமுறுத்தி, அச்சமயம் கடம்பூர் அரண்மனையின் வேட்டை அறையில் மதுரை ஆபத்துதவிகள் இருப்பதை அறிந்தேன். ஆதித்த கரிகாலர் நந்தினியின் அறைக்குச் சென்றிருப்பதையும், மணிமேகலையும் வந்தியத் தேவனும் அங்கேயே ஒளிந்து கொண்டிருப்பதையும் அறிந்தேன். நந்தினிக்கும் கரிகாலருக்கும் நடக்கும் சம்பாஷணையைஒட்டுக்கேட்டு அவர்களுடைய இரகசியத்தை அறியும் ஆசை என் உறுதியைக் குலைத்து விட்டது. நந்தினியைப் பற்றிய உண்மையையும் அறிந்து கொள்ளலாம் என்ற ஆசை எழுந்தது. நந்தினியின் அறைக்குப் போக யாழ்க் களஞ்சியத்தின் மூலம் ஓர் இரகசிய வழி இருக்கிறதென்பதை அறிந்து அங்கே போய்ச் சேர்ந்தேன். நல்ல சமயத்திலேதான் போய்ச் சேர்ந்தேன். நந்தினியைப் பற்றிய உண்மையை அவள் வாயாலேயே சொல்லக் கேட்டு அறிந்தேன். ஆதித்த கரிகாலர் நடத்தையில் களங்கமற்றவர் என்றும் தெரிந்து கொண்டேன். நந்தினியும் அவளைச் சேர்ந்தவர்களும் வீரபாண்டியனுடைய சாவுக்குப் பழி வாங்குவதற்கு எவ்வளவு பயங்கரமான திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். அந்தச் சதி வெற்றி பெறாமல் தடுக்க முயன்றேன். ஆனால் விதியை என்னால் வெல்ல முடியவில்லை. கரிகாலர் என் கண் முன்னாலேயே உயிரற்றுக் கீழே விழுந்ததைப் பார்க்கும் துர்ப்பாக்கியம் பெற்றேன்.....'

இவ்விதம் கூறிவிட்டுப் பெரிய பழுவேட்டரையர் தம் முகத்தைக் கையால் மூடிக் கொண்டு விம்மினார். அந்த விம்மலின் ஒலி, புயல் அடிக்கும்போது அலை கடலில் எழும் பேரோசையை ஒத்திருந்தது. யாரும் அச்சமயம் வாய் திறந்து பேசத் துணியவில்லை. அனைவருடைய உள்ளமும் அந்த வீரப் பெருங் கிழவரின் மாபெரும் துயரத்தைக் கண்டு இளகிப் போயிருந்தன.

பெரிய பழுவேட்டரையர் மேலும் மேலும் பொங்கி வந்த விம்மலைத் தமது வைரம் பாய்ந்த இரும்பு நெஞ்சின் உதவியால் அடக்கிக் கொண்டார். முகத்திலிருந்து கையை எடுத்து விட்டுச் சுற்று முற்றும் பார்த்தார்.

''விதி வசத்தினால் ஆதித்த கரிகாலர் இறந்து விட்டார். ஆனால் துர்க்காபரமேசுவரியின் கருணையினால், அதே சமயத்தில் பேராபத்துக் குள்ளான பொன்னியின் செல்வர், விதியையும் மதியினால் வென்று உயிர் தப்பினார். பிரபு! சக்கரவர்த்தி! பிரம்மராயரே! என் அருமைத் தோழர்களான சிற்றரசர்களே! சோழ சிங்காதனத்தில் அருள்மொழி வர்மரை ஏற்றி வைத்து முடிசூட்டுங்கள்! அவர் மூலமாக இந்தச் சாம்ராஜ்யம் மகோந்நதத்தை அடையப் போகிறது!'' என்றார்.

முதன் மந்திரி அநிருத்தர், ''ஐயா! தங்கள் விருப்பம் நிறைவேறத்தான் போகிறது. பொன்னியின் செல்வர்தான் அதற்குத் தடையாயிருப்பார் என்று பயந்தோம். சோழ நாட்டின் அதிர்ஷ்டத்தினால் அவரே முடிசூட்டிக் கொள்ள இசைந்து விட்டார்!

ஆனால், ஆதித்த கரிகாலர் எப்படி இறந்தார் என்று தாங்கள் கூறவில்லையே?'' என்றார்.

''அதைப் பற்றி ஏன் கேட்கிறீர்கள்? கொன்ற கை யார் கையாயிருந்தால் என்ன? உண்மையில் அவருடைய மரணம் விதியினால் நேர்ந்தது!'' என்றார் அந்த வீரக் கிழவர் நடுங்கிய குரலில்.

''அது தெரியா விட்டால், இதோ குற்றம் சுமத்தப்பட்டு நிற்கும் வாலிபன் மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகம் நீங்காது. கரிகாலரின் மரணத்துக்காக இவனைத் தண்டிக்கும்படி நேரிடும்!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

''ஆகா! இவன் மீது குற்றம் சுமத்துவதா? யார் சுமத்துகிறார்கள்?''

''கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் சுமத்துகிறார்கள்!''

''ஆகா! முழு மூடர்கள்! கந்தமாறா!



பார்த்திபேந்திரா! நீங்கள் இந்த வாலிபன் மீது குற்றம் சுமத்தக் காரணம் என்ன? எதைக் கொண்டு இவன் ஆதித்த கரிகாலரைக் கொன்றதாகச் சொல்லுகிறீர்கள்?'

இதற்கும் அநிருத்தரே பதில் கூறினார்:– ''இவன் அச்சமயம் நந்தினி தேவியின் அந்தப் புரத்தில் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறான். மணிமேகலையும் அங்கே இருந்திருக்கிறாள். மணிமேகலை தான் கொன்றதாகச் சொல்லுகிறாள். அவ்விதம் இருகக முடியாது. அவள் காட்டிய கத்தியில் இரத்தக் கறையே இல்லை. வந்தியத் தேவனைக் காப்பாற்றுவதற்காகவே அவள் அவ்விதம் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? வந்தியத் தேவன் மறைவிடத்திலிருந்து கரிகாலரைக் கொன்றதை அவள் பார்த்திருக்கலாம் அல்லவா?''

''மணிமேகலை கொல்ல வில்லை என்றால், வந்தியத் தேவன் மட்டும் எப்படிக் கொன்றிருப்பான்? எந்த ஆயுதத்தைக் கொண்டு?''

''இந்த ஆயுதத்தைக் கொண்டு! இரத்தம் தோய்ந்து காய்ந்திருக்கும் இந்தக் கூரிய திருகுக் கத்தியைக் கொண்டு!'' என்று கூறிப் பார்த்திபேந்திரன் நாம் முன்னமே பார்த்திருக்கும் திருகுக் கத்தியைக் காட்டினான்.

வந்தியத் தேவன் கரிகாலருடைய உடலைத் தீப்பிடித்த மாளிகையிலிருந்து எடுத்து வந்து போட்டு விட்டுத் தானும் மூர்ச்சையடைந்து விழுந்த போது, அவனிடமிருந்த திருகுக் கத்தியைப் பார்த்திபேந்திரன் எடுத்துப் பத்திரமாக வைத்திருந்தான். அதை இப்போது எடுத்துக் காட்டினான்.

பெரிய பழுவேட்டரையர் அவனை நோக்கி, ''எங்கே, இப்படி அந்தக் கத்தியைக் கொடு!'' என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டார்.

அதை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு ''ஆகா! இது இடும்பன்காரியின் கத்திதான்!'' என்று முணுமுணுத்தார்.

''கந்தமாறா! பார்த்திபேந்திரா! நீங்களும் நானும் இந்த வந்தியத் தேவனை மூன்று தரம் வலம் வந்து கும்பிட வேண்டும்! நந்தினியின் மோக வலையில் இந்தக் கிழவனைப் போலவே நீங்களும் விழுந்திருந்தீர்கள். ஆனால் இவன் ஒருவன்தான் அந்த மாய வலையில் சிக்கவில்லை. இவன் இந்தக் கத்தியை எறியவும் இல்லை; ஆதித்த கரிகாலரைக் கொல்லவும் இல்லை!''

''எதனால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள்?'' என்று முதன் மந்திரி அநிருத்தர் கேட்டார்.

''ஆம்; நிச்சயமாகத்தான் சொல்லுகிறேன். இந்தக் கத்தியை எறிந்து கரிகாலரைக் கொன்றவன் எவன் என்பது எனக்கு

நன்றாய்த் தெரியும்!''

''யார்? யார்?''

''ஆம்; ஆம்! அதைச் சொல்லிவிட வேண்டியதுதான். சொல்லாவிட்டால் உங்கள் சந்தேகம் தீராது. எல்லாரும் கேளுங்கள். இந்த வாலிபன் யாழ்க் களஞ்சியத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். நான் அதன் வழியாக இறங்கி வந்தேன். இவன் என்னைப் பார்த்துச் சத்தமிடக் கூடாது என்பதற்காகப் பின்னாலிருந்து இவன் கழுத்தைப் பிடித்து நெருக்கினேன். இவன் விழி பிதுங்கி, உணர்விழந்து கீழே விழுந்து விட்டான். ஆதித்த கரிகாலரைக் கொன்றது யார் என்பது இவனுக்கு அச்சமயம் தெரிந்து கூட இருக்க முடியாது.''

''யார்! யார்! கொன்றது யார்?''

''இந்தத் திருகுக் கத்தியை நான்தான் இடும்பன்காரியிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன். இதை வீசி எறிந்தவன் நானேதான்! இந்த என்னுடைய வலது கரந்தான்! சோழச் சக்கரவர்த்திகளுக்கு முடி சூட்டிய பரம்பரையில் வந்த இந்தக் கரந்தான் கத்தியை எறிந்தது. ஆனால் இளவரசர் கரிகாலர் மீது எறியவில்லை. நந்தினியின் பேரில் எறிந்தேன். என்னை பொய்க வலையில் ஆழ்த்தித் துரோகப் படுகுழியில் வீழ்த்திய அந்த மாயப் பிசாசைக் கொன்றுவிட எண்ணி எறிந்தேன். அது குறி தவறிக் கரிகாலர் மீது விழுந்தது!......''

''ஐயையோ!'' ஆஹாஹா!'' என்ற குரல்கள் பல அச்சபையில் எழுந்தன.

''நூறு ஆண்டு காலமாகப் பழுவூர்க் குலம் சோழ குலத்துக்குச் செய்திருக்கும் தொண்டுகளுக்கெல்லாம் களங்கம் உண்டு பண்ணி விட்டேன். அந்தக் களங்கத்தை எப்படி நீக்கப் போகிறேனோ, தெரியவில்லை!''

''அண்ணா! இதோ அந்தக் களங்கத்தை நான் போக்குகிறேன்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கர்ஜித்து விட்டுத் தமது கத்தியை உருவிக் கொண்டு அண்ணன் அருகில் விரைந்து வந்தார்.

''சோழ குலத்துக்குத் துரோகம் செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைப் பழிவாங்குவதாக நீயும் நானும் சபதம் ஏற்றிருக்கிறோம். அந்தச் சபதத்தை இப்போது நானே நிறைவேற்றுவேன். உன்னை இந்தக் கணமே கொன்று நம் குலத்துக்கு நேர்ந்த பழியைத் துடைப்பேன்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கத்தியை ஓங்கினார்.

''வேண்டாம்! வேண்டாம்! இங்கே இரத்தம் சிந்த வேண்டாம்!'' என்றார்



சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

இளவரசர் அருள்மொழி வர்மரும் முதன் மந்திரி அநிருத்தரும் பாய்ந்து சென்று சின்னப்பழுவேட்டரையரின் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

அச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையர் கூறினார்: — "தம்பி! நம் குலத்துக்கு என்னால் நேர்ந்த பழியைத் துடைக்கும் வேலையை உனக்கு வைக்க மாட்டேன். அத்துடன் 'தமையனைக் கொன்ற தம்பி' என்ற பழியை உனக்கும் ஏற்படுத்த மாட்டேன். இதோ துர்க்கா பரமேசுவரிக்கு என் சபதத்தை நிறைவேற்றுவேன்!" என்று கூறிக் கொண்டே தம் கையிலிருந்த சிறிய திருகுக் கத்தியைத் தமது மார்பை நோக்கி ஓங்கினார்.

முன்னொரு தடவை அவர் ஓங்கிய பெரிய வாளை மறுபடியும் உறையில் போட்டிருந்தபடியால், அவர் தமது பழைய உத்தேசத்தை விட்டு விட்டதாக மற்றவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். பார்த்திபேந்திரனிடமிருந்து வாங்கிக் கொண்டிருந்த திருகுக் கத்தியை அவர் உபயோகிப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

"ஐயோ! வேண்டாம்!" என்று அருள்மொழி வர்மர் கூவிக் கொண்டு அவர் அருகில் பாய்ந்து வருவதற்குள் பெரிய பழுவேட்டரையர் தம் உத்தேசத்தை நிறைவேற்றி விட்டார்.

நெடுங்காலம் வேர் விட்டு நெடிது வளர்ந்திருந்த தேவதாரு மரம் வேருடன் பெயர்ந்து கப்பும் கிளையுமாகக் கீழே விழுவதுபோலத் தரையில் சாய்ந்தார்.

"ஹா ஹா!" "அடடா!" "அந்தோ!" என்பவை போன்ற குரல்கள் அச்சபையில் ஒலிக்கத் தொடங்கின.

விழுந்த பெரிய பழுவேட்டரையரை நோக்கிச் சிலர் ஓடி வந்தார்கள்.

அதே சமயத்தில் கண்களை மூடிக் கொண்டு சிங்காதனத்தில் சாய்ந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியை நோக்கி இன்னும் சிலர் ஓடினார்கள்.

மந்திராலோசனை சபை கலைந்தது.

அன்றிரவு பெரிய பழுவேட்டரையர் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த போது பலர் வந்து அவரைப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

சக்கரவர்த்தியும், அருள்மொழி வர்மரும், அநிருத்தரும், இளையபிராட்டி குந்தவையும் கூட வந்திருந்தார்கள்.

சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் பெரிய பழுவேட்டரையர் செய்திருக்கும் சேவைகளைப் பற்றிச் சக்கரவர்த்தியும் மற்றவர்களும் பாராட்டிப் பேசினார்கள். அவர் இளம் பிராயத்தில் எத்தனையோ போர்க்களங்களில் செய்த தீரச் செயல்களைப் பற்றிக் கூறினார்கள். தக்கோலத்தில் தோல்வியடைந்து சிதறி ஓடிய சோழ சைன்யத்தை அவர் திரட்டி அமைத்துத் தோல்வியை வெற்றியாக மாற்றிய செயலை வியந்து பாராட்டினார்கள். சோழ நாட்டின் தனாதிகாரியாக இருந்து திறமையாக நிர்வாகம் நடத்தியதைப் புகழ்ந்தார்கள்.

சென்ற மூன்று வருஷத்துச் சம்பவங்களைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாமலே விடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

பின்னர் அவர்கள் நால்வரும் பெரிய பழுவேட்டரையர் படுத்திருந்த அறைக்குள்ளேயே அவர் பார்க்க முடியாத இடங்களில் மறைந்து நின்று கொண்டார்கள்.

அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானை அழைத்துக் கொண்டு வந்தார். பெரிய பழுவேட்டரையருக்கு எதிரில் கொண்டு வந்து அவனை உட்கார வைத்துவிட்டுத் தாமும் அருகில் அமர்ந்தார்.

பார்வை விரைவாக மங்கி வந்த கண்களினால் பெரிய பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து விட்டு, "ஆகா! இந்த வைஷ்ணவன் இங்கு எதற்காக வந்தான்? நான் வைகுண்டத்துக்குப் போக விரும்பவில்லை, தம்பி! சிவபதம் அடைய விரும்புகிறேன்!" என்றார்.

"ஐயா! நாளை உதயத்தில் வைகுண்ட ஏகாதசி புண்ணிய நாள்! தாங்கள் கைலாசத்துக்குப் போக விரும்பினாலும் வைகுண்டத்தின் வழியாகவே போக வேண்டும்!" என்றான் திருமலை.

"வேண்டாம்! வேண்டாம்! நீ உன் மகா விஷ்ணுவிடம் திரும்பிச் சென்று....."

"ஐயா! நான் மகாவிஷ்ணுவின் தூதனாக இப்போது வரவில்லை. என் சகோதரியிடமிருந்து செய்தி கொண்டு வந்தேன்!"

"அது யார் உன் சகோதரி?"

"என்னுடன் பல நாள் வளர்ந்த சகோதரி — நந்தினியைச் சொல்லுகிறேன். ஐயா! நந்தினி தங்களுக்கு அவளுடைய நன்றியைத் தெரியப்படுத்தும்படி என்னை அனுப்பினாள். கரிகாலரைக் கொன்ற பழி அவள் பேரில் விழாதிருக்கும் பொருட்டுத் தாங்கள் அதை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவிக்கச் சொன்னாள். எத்தனை ஜன்மம் எடுத்தாலும் தங்கள் அன்பை மறக்க முடியாது என்றும் தெரிவிக்கும்படி சொன்னாள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அன்பளிப்பாக ஒரு விசிட்டிங் கார்டு!

ஜப்பானில் மிக லேசான தங்கத் தகட்டிலான 'விசிட்டிங்' கார்டுகள் உபயோகத்துக்கு வந்து விட்டன. பிரதிநிதியின் விசிட்டிங் கார்டுகளை வைத்துத்தான் கம்பெனியின் தரத்தை எடை போடுகிறார்கள். ஒவ்வொன்றும் சுமார் எழுநூறு ரூபாய் பெறுமானமுள்ள இத் தங்கக் கார்டுகள், கார்டைப் பெறுபவருக்கு அன்பளிப்பாக ஆகி விடுவதால்,



இம்மாதிரி கார்டுகளுக்கு இப்பொழுது ஏக கிராக்கி!

(ஆதாரம்: பிஸினஸ் இந்தியா).

தகவல்: எஸ். ராமன்.

"ஆகா! அவள் இன்னும் அப்படி நினைக்கிறாளா? நினைத்துக் கொண்டு சந்தோஷப் படட்டும். எவ்வளவுதான் அவள் வஞ்சகம் செய்து எனக்குத் தீங்கு புரிந்திருந்தாலும் அவளை என்னால் மறக்க முடியவில்லை. அவள்பேரில் கோபித்துக் கொள்ளவும் முடியவில்லை. தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தியைக் காப்பாற்றிய உத்தமியின் புதல்வி அல்லவா அவள்? உண்மையாகவே அடுத்த பிறவிகளிலும் அவள் என்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவாளோ, என்னமோ?" என்றார் பழுவேட்டரையர்.

ஏற்கெனவே மரணத்தின் சாயை படர்ந்திருந்த அவருடைய முகத்தில் இப்போது இலேசான புன்னகை தோன்றியது.

"வைஷ்ணவனே! யாரிடமாவது ஒருவரிடம் என் என் உண்மையைச் சொல்ல வேண்டும். உன்னிடமே சொல்கிறேன். நான் எறிந்த கத்தி இளவரசர் பேரில் விழவில்லை. அதற்கு முன்பே அவர் விழுந்து விட்டார். நானே இளவரசரைக் கொன்றதாக ஒப்புக் கொண்டதற்குக் காரணம் நந்தினியின் பேரில் பழி விழாமல் தடுப்பதற்காக மட்டு மல்ல; அதைவிட நூறு மடங்கு முக்கியமான காரணம் உண்டு. அருகில் வா! சொல்லுகிறேன்! உன் சிநேகிதன் வந்தியத் தேவன் இருக்கிறானே, அவன் அருமையான பிள்ளை! அவனுக்குச் சோழ குலம் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறது. இளைய பிராட்டியின் உள்ளத்தை அவன் கவர்ந்து விட்டான். இளையபிராட்டியிடம் நான் அநாவசியமாகக் குரோதம் பாராட்டினேன். அதற்கெல்லாம் பரிகாரமாகக் குற்றத்தை நான் ஒப்புக் கொண்டேன். நான் அப்படிப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு என்னையும் பலி கொடுத்திரா விட்டால், வந்தியத் தேவன் பேரில் யாராவது களங்கம் கற்பித்துக் கொண்டே இருப்பார்கள். இனி ஒருவரும் அவ்வாறு பேசத் துணிய மாட்டார்கள். வைஷ்ணவனே! என்றாவது ஒரு நாள் இளையபிராட்டியிடம் இதை நான் கூறியதாகச் சொல்லு! நந்தினியின் பேச்சைக் கேட்டு அவரை நான் துவேஷித்ததற்காக என்னைத் தயை கூர்ந்து மன்னிக்கும்படி சொல்லு!"

நெடு நேரம் பேசியதால் அந்தத் தீரக் கிழவருக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது. அவர் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானின் உள்ளமே உருகி விட்டது என்றால், பின்னால் மறைவிடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த குந்தவை தேவியின் கண்களிலிருந்து கண்ணீர் கலகலவென்று பொழிந்ததில் வியப்பில்லை அல்லவா?

"வைஷ்ணவனே! இன்னும் ஒரு விஷயம் முதன் மந்திரி பிரம்மராயரிடம் சொல்லு! இலங்கையிலிருந்து பாண்டியன் கிரீடத்தையும் இந்திர ஹாரத்தையும் எப்படியாவது கொண்டு வர வேண்டும். அதற்குத் தகுந்தவன் வல்லத்து இளவரசன்தான்! அவனும் நீயும் போய்க் கொண்டு வாருங்கள். பிறகு மதுரைக்குச் சென்று அங்கே ஒரு தடவை பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடத்த வேண்டும். தெரிகிறதா? அருள்மொழியிடம் எனக்காக ஒன்று வேண்டிக் கொள்! என்பேரில் ஏற்படும் பழியை என் சகோதரன் மீது சுமத்த வேண்டாம்! அவனைப் போல் சோழ குலத்துக்கு உற்ற துணைவன் வேறு யாரும் இல்லை என்று சொல்லு! தேவி! துர்க்கா பரமேசுவரி! என் சபதத்தை நிறைவேற்றி விட்டேன்! இதோ வருகிறேன்! சோழ குலத்தைக் காப்பாற்று!"

வரவர மெலிந்து கொண்டு வந்த பெரிய பழுவேட்டரையரின் குரல் அடியோடு மங்கி நின்றது. அந்தத் தீரப் பெருங்கிழவரின் உயிர்ச் சுடரும் அணைந்தது.

(தொடரும்)



* ஊர்க்குளம் தூர் எடுக்கப்பட்டுச் சுத்தமாக்கப் பட்டுள்ளது...



* "என்னுடன் அனைவரும் ஒத்துழைப்பதுதான் காரணம்..." என்கிறார், மாவடியான்.

நாட்டுக்கே வழி காட்டுகிறது ஒரு கிராமம்

மாரிமுத்து கூலி வேலை செய்து தினமும் சம்பாதிப்பது இருபது ரூபாய். அதில் எட்டு ரூபாய் கள்ளச்சாராயம் குடிப் பதற்கே செலவாகும். சில சமயங்களில் நண்பர்கள் சேர்ந்தால், கூலிப்பணம் முழுதுமே கூடக் காலியாகி விடும். குடித்து விட்டு, கிராமத் தெருக்களில் கத்திக் கலாட்டா செய்வது வாடிக்கையாகி விட்டது. மாரிமுத்துவின் மனைவிக்கும் மகனுக்கும் என்ன செய்வதென்றே தெரிய வில்லை. கடைசியில் 'தலைவரி'டம் சென் றார்கள். அவர் சொன்னபடி நடந்து கொள்ள ஆரம்பித்தார்கள்.

மறுநாள் முதற்கொண்டு வீட்டில் மாரி முத்துவைக் கவனிக்க ஆள் இல்லை. சாப் பிட்டாரா, தூங்கினாரா என்று யாரும் கேட்கவில்லை. மனைவியும் மகனும் மாரி முத்துவைப் பார்த்தாலே ஒதுங்கிக் கொண் டனர். ஆம்... மாரிமுத்து வீட்டிலிருந்தே தனிமைப்படுத்தப்பட்டார்!

தலைவரும் அவர் தோழர்களும் வீட் டுக்கு வந்தனர். 'உனக்கு ஏன் இந்த நிலை? குடியினால் உன் உடம்பு கெட்டுப் போவது ஒரு பக்கம் இருக்க, உன் குடும்பம் வறுமை யில் தள்ளாடுவது தெரியவில்லையா?' என்று குடியினால் ஏற்படும் பல்வேறு விதமான பாதிப்புகளை விவரிக்க விவரிக்க, மாரிமுத்துவுக்கு மனத்தில் தெளிவு ஏற் பட்டது. 'விட்டுட்டேன் தலைவரே' என்று கையைப் பிடித்துக் கொண்டார். இன்று சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார் மாரிமுத்து.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு வரின் இடத்தில் குத்தகைக்கு வந்தார் ஒருவர். பல வருடங்களுக்குப் பிறகு, 'நிலம் திரும்ப வேண்டும்' என்று நில உரிமை யாளர் சொன்ன போது, குத்தகைக்காரர் கொடுப்பதாக இல்லை. கோர்ட்டுக்குப் போன போது, 'குத்தகைக்காரர் காலி செய்ய வேண்டும்' என்று தீர்ப்பு வந்தது. ஆனால் அதை அமுல்படுத்தவே முடிய வில்லை. அப்போதுதான் ஊரில் இருந்த நீதி பரிபாலன கமிட்டிக்குச் சென்று, தலைவரிடம் விஷயத்தைக் கூறினார்கள்.

உடனே நீதிபரிபாலன கமிட்டியைக் கூட்டி விவாதித்து ஒரு தீர்ப்பு வழங்கினார் தலைவர். அதை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டார்கள்!

காமாட்சி வீட்டில் கல்யாணம். வசதி இல்லை. இருப்பினும் பந்தல், மைக்செட் என்றாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா? தவித்துக் கொண்டிருந்த போது, நாலு இளைஞர்கள் வந்தார்கள். 'தலைவர் சொல்லி அனுப்பினார். கவலைப்படாதீர்கள். எல்லாம் சுலபமாக நடந்து விடும்' என்று சொல்லி விட்டுப் போனார்கள். காமாட்சி சொல்கிறார், "திருமணத்துக்கு முதல் நாள் வந்து கிடுகிடுவென்று, வாழை மரம், பந்தல் அலங்காரம் என்று தடபுடல் படுத்தி விட்டார்கள். மைக்செட் வைத்ததற்கு மட்டும் இருபது ரூபாய் பணம் வாங்கிக் கொண்டார்கள். எல்லாம் நல்லபடி முடிந்தது!"

இந்தச் சம்பவங்களெல்லாம் எங்கே நடந்தன? யார் அந்தத் தலைவர்? கிளம்புங்கள் தஞ்சை மாவட்டம் கருப்பூருக்கு.

வறண்ட காவிரிக் கரையில் — திருக்காட்டுப் பள்ளிக்கருகில் அமைந்துள்ளது கருப்பூர் கிராமம். பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் எதிர்ப்பட்ட இளைஞர் ஒருவரிடம், "மாவடியான் வீடு எங்கே இருக்கு?" என்று கேட்டதும், "நம்ம தலைவரைத் தேடி வந்தீங்களா?" என்று துள்ளிக் குதித்து நமக்கு வழிகாட்டினார் அவர்.

"வாங்க... வாங்க..." என்று நம்மை வரவேற்றார் மாவடியான். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், பி.எஸ்.ஸி. படித்து விட்டுத் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வேலை பார்க்கிறார்.

"உங்கள் தலைமையில் ஊரே புது எழுச்சி பெற்றிருக்கிறது போலிருக்கிறதே?"

"அதுக்கு நான் மட்டும் காரணம் அல்ல. பல பொதுக் காரியங்களுக்கு என்னுடன் உழைக்கும் இளைஞர்களும், எனக்கு ஆலோசனை கொடுத்துக் கொண்டிருக்கும் முதியோர்களும்தான் காரணம்."

பல வருடங்களாகவே கருப்பூர் கிராம மக்கள், வருடா வருடம் சுற்றுலாச் செல்வதுண்டு. அப்படிச் செல்லுகையில், பல சமயங்களில் கிராமத்தின் பிரச்னைகள் விவாதிக்கப்படும். அத்தகைய ஒரு விவாதத்தின் போது, சில பிரச்னைகளை அரசையோ அதிகாரிகளையோ எதிர்பார்க்காமல் கிராம மக்கள் தாங்களாகவே தீர்த்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் உண்டாயிற்று. மாவடியான் பிள்ளையார் சுழி போட்டார். முத்தமிழ் நற்பணி மன்றம் உதயமாயிற்று! இன்று 331 பேர் இந்த மன்றத்தில் உள்ளனர். இதிலேயே மகளிர் பிரிவு, சிறுவர் பிரிவு, இளைஞர்கள் பிரிவு என்றெல்லாம் உண்டு. ஒவ்வொருவருக்கும் தனித்தனியான வேலைத் திட்டமும் உண்டு.

உதாரணமாக, 18 வயது முதல் 25 வயது வரை இருப்பவர்களை உறுப்பினராகக் கொண்ட பைந் தமிழ் மன்றம், ஊரிலுள்ள குளம் குட்டைகளைத் தூர் எடுப்பது, கோயில்களைச் சுத்தம் செய்து விழாக்களை நடத்தி வைப்பது என்று பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் ஊர்க் குளத்தைச் சுத்தமாகத் தூர் எடுத்திருக்கிறார்கள். "பொங்கல் சமயத்தில் இந்தக் குளத்தில் நீச்சல் போட்டி நடத்தும் அளவுக்குக் குளம் சீர்படுத்தப்பட்டுள்ளது. அதிலுள்ள மீன்கள் மக்களுக்கு இலவசமாய்த் தரப்படுகின்றன" என்று கூறினார் மாவடியான்.

இது மட்டுமல்ல; பக்கத்து ஊர்களில் உள்ள குளங்களையும் சுத்தப்படுத்த ஆரம்பித்துள்ளார்கள் இவர்கள்! புன்னைநல்லூர் மாரியம்மன் குளத்தைத் தூர் எடுக்க இவர்கள் சென்ற போது, 'நீங்கள் யார் எங்கள் ஊர்க் குளத்தைத் தூர் எடுக்க?' என்று அந்த கிராம மக்கள் கேட்க, 'எங்களுக்கு வேண்டுதல்... அதனால்தான் செய்ய வந்தோம்...' என்று சமயோசிதமாகப் பதில் சொல்லிக் குளத்தைத் தூர் எடுத்து வந்திருக்கிறார்கள்.

"**எ**ங்கள் கிராமத்தில் கள்ளச் சாராயக் கடை கிடையாது. மக்கள் யாரும் குடிப்பதில்லை. அன்பும், அரவணைப்பும், சில சமயங்களில் கண்டிப்பும் காட்டித் தான் இந்த நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். கிராமத்துத் தாய்மார்களும், சிறுவர்களும் எங்களுக்கு இந்த விஷயத்தில் கொடுக்கும் ஆதரவுதான் இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படை. அவர்கள் ஆதரவு இல்லாவிட்டால் நாங்கள் குடிகாரர்களைத் திருத்தவே முடியாது.

"திருத்தவே முடியாத கேஸ் என்று தீர்மானிக்கப்பட்டால், நாங்கள் இருபது பேர் சம்பந்தப்பட்டவரின் வீட்டுக்குப் போவோம். முக்காடு போட்டுக் கொண்டு அவர் வீட்டு முன்னால் உட்கார்ந்து கொண்டு ஒப்பாரி பாடுவோம். 'செத்த பிறகு அழுவதைக் காட்டிலும், சாக இருப்ப



* மாவடியான்



* காமாட்சி: "என் வீட்டுத் திருமணத்தில் தடபுடல் படுத்திவிட்டார்கள்!"

**அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டி — 1990**

முடிவு தேதி: ஜூன் 15

**விவரங்களுக்குச் சென்ற வாரக் கல்கி இதழைப் பாருங்கள்.
அல்லது
அடுத்த வாரக் கல்கி இதழை எதிர்பாருங்கள்.**

— ஆசிரியர்.

வனுக்கு அழுகிறோம்' என்று சொல்லுவோம். இந்த அணுகுமுறை நிச்சயம் பலனளித்து விடும்! கருப்பூர் வழியாகச் செல்லும் பஸ்களில் குடித்து விட்டு யாராவது கலாட்டா செய்தால், 'கருப்பூரில் இறக்கி விட்டு விடவா?' என்று நடத்துனர் கேட்பார். குடித்திருப்பவர் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் விடுவார். அந்த அளவுக்கு நாங்கள் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம்.

''இருப்பினும் கூட பக்கத்துக் கிராமத்தில் ஒரு பெண்மணி நடத்தும் கள்ளச் சாராயக் கடையை எங்களால் மூட வைக்க முடியவில்லை. அந்தப் பெண்மணி போலீஸ்காரர்கள் எல்லோரையும் கைக்குள் போட்டு வைத்திருக்கிறார். எஸ். பி. வரை போய்ச் சொல்லி விட்டோம். அதனாலேயே போலீஸ்காரர்களுக்கு எங்கள் மீது கோபம். இதனால் பொய்ப் புகார் பேரில் எங்கள் கிராம இளைஞர்கள் இருவரைப் போலீஸ் கைது செய்தது. ஊரே திரண்டு போய்த்தான் அவர்களை வெளியே கொண்டு வந்தோம்...'' என்ற மாவடியான் மற்ற பணிகளையும் விளக்கினார்.

''வருடம்தோறும் டூர் செல்ல, மாதத் தவணையில், மக்களிடம் பணம் வாங்குவது மன்றத்தின் நடைமுறை. அப்படி வாங்கப்படும் பணம் வட்டிக்கு விடப்பட்டு, அந்த வட்டியும் கிராம மக்களின் நலனுக்காகச் செலவிடப்படுகிறது.

''முன்பெல்லாம் கிராமத்தில் விளையும், காய்கறிகள், வாழை, கீரை, தேங்காய் போன்றவற்றை ஏலம் எடுக்க கமிஷன் வியாபாரிகள் வருவார்கள். நம்முடைய மக்களுக்கு கிடைக்க வேண்டிய லாபம் கமிஷன் வியாபாரிகளுக்குப் போகிறதே என்று யோசனை செய்தோம். வாரா வாரம் காய்கறி ஏலத்தை நாங்களே நடத்துவது என்று தீர்மானித்தோம். பிரமாதமான சக்ஸஸ் ஆகி விட்டது!'' என்கிறார் மாவடியான்.

பிரச்னைகளைத் தீர்த்து வைக்க 35 பேர் கொண்ட நீதிபரிபாலன கமிட்டி இருக்கிறது. ஒவ்வொரு வழக்குக்கும் ஐந்து பேர் கொண்ட பெஞ்ச் நியமிக்கப்படுகிறது. சனிக்கிழமை தோறும் கூடும் இந்த நீதி பரிபாலன கமிட்டிக்கு வேறு கிராமங்களிலிருந்தும் வழக்குகள் வர ஆரம்பித்திருக்கின்றனவாம்! திருட்டு என்பதே கிராமத்தில் இல்லை. ''போட்டது போட்டபடியே கிடக்கும். ஊரைப் பாதுகாக்கப் போடப்பட்ட எங்கள் மன்றக் குழுவுக்கு வேலையே இல்லை'' என்று கூறிச் சிரிக்கிறார் மாவடியான்!

ஆதரவில்லாமல் இறந்து போகிறவர்களை அடக்கம் செய்யும் காரியத்தை மன்றமே ஏற்கிறது. திருமணத்துக்குப் புகைப்படம் எடுக்கும் காரியத்தை இலவசமாகச் செய்கிறார்கள் மன்றத்தினர். மகளிர் பிரிவைச் சார்ந்தவர்கள் தையல் வகுப்பு. பிள்ளைகளுக்கு கல்விப் பயிற்சி என்று செயல்படுகிறார்கள். சிறுவர்களுக்குப் பேப்பர், நோட்டுப் புத்தகம் என்று இலவசமாக விநியோகிப்பதுடன் நீதிக் கதைகள். சொல்கிறார்கள், தேசத்துக்காகப் பாடுபட்ட தியாகிகள் பற்றித் தவறாமல் எடுத்துரைக்கிறார்கள். தீபாவளியின் போது மொத்தமாக இனிப்புச் செய்து கிராமம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது. பொங்கலின் போது விளையாட்டு விழா கலை நிகழ்ச்சிகள் என்று ஊரே அமர்க்களப்படும். மருந்துகள், வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. மனவளமேம்பாட்டு நாள் என்ற ஒரு நாளைக் குறிப்பிட்டு, அன்று பல ஆன்மிகப் பெரியோர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்கிறது மன்றம்.

இப்படிப் பல்வேறு பொதுநலப் பணிகளையும் செய்யும் முத்தமிழ் மன்றத்தின் தலைவர் பதவிக்கும் மற்ற பதவிகளுக்கும் தேர்தல் நடக்கும் முறையே அலாதி. தேர்தல் தேதியை அறிவித்து விடுவார்கள். யாரும் தன்னை வேட்பாளராக அறிவித்துக் கொள்ள முடியாது. உறுப்பினர்களே ஒரு வெள்ளைத் தாளில் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிக்கு அவரவரும் யார் யாரை விரும்புகிறார்கள் என்று எழுதித் தருவார்கள். பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றவர்கள் அந்தந்தப் பொறுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

நாடு முழுவதும் கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரு கருப்பூராக மாறுவது எப்போது?

— ப்ரியன்

படங்கள்: **ராஜன்**

மணல்வெளி மான்கள்

19

வீடு திரும்பும் போது மணி மூன்று. குழாயில் தண்ணீர் பிடித்து முடித்திருந்தாள் சவுந்தரம்மாள். கடைசிக் குடத்தைத் திண்ணை மீது வைத்து விட்டுத் தெரு நடையில் சிரம பரிகாரமாய் உட்கார்ந்திருந்தாள்.

கௌதமை கண்டதும் பட்டென்று அவள் முகம் மலர்ந்தது. கௌதமுக்கு அந்த முக மலர்ச்சி மிகவும் பிடிக்கும்.

''என்ன கௌது, புல்மேடு போயிருந்தியா?''

''போனேன் பெரியம்மா.''

''அப்பா நல்லாருக்காரா?''

''ம்ம்ம்...''

''என்ன சொன்னாரு?''

''ஜாக்கிரதையா இருக்கச் சொன்னாரு.''

அவன் எழுந்து குடத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். அவன் கதவோரமாகச் செருப்பைக் கழற்றி விட்டான்.

அவள் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து நீட்டினாள்.

வாங்கிக் குடித்தான்.

''எல்லாம் சொன்னியா?''

''ஹூ ஊஹும்.''

அவள் முகம் மாறியது.

''நான் இங்கே கிளிப்பிள்ளை மாதிரி சொல்லி அனுப்பிச்சேன் இல்லே.''

''இல்லே பெரியம்மா... அப்பா மொகத்தைப் பார்த்தா எனக்கு ஒண்ணுமே பேசத் தோணறதில்லை!''

''அதுக்கு ஏன் ஊருக்குப் போனே?'' சவுந்தரம்மா இடுப்பின் மீது இரண்டு கைகளையும் வைத்தாள்.

''அடிச்சிருவீங்களோன்னு பயம்மாயிருக்கு பெரியம்மா.''

அவளுக்குக் குபுக்கென்று சிரிப்பு வந்து விட்டது.

''இப்படி ஏதாவது எங்கிட்டே கோமாளித்தனம் பண்ணுவியே தவிர பொளைக்கற புள்ளையாத் தெரியலே.''

''எப்படிப் பிழைக்கறது பெரியம்மா?''

''ஆமா, நான் சொல்லி அப்படியே கேட்டுடப் போறே!''

''எதையாவது கேக்காம விட்டிருக்கனா சொல்லுங்க?''

''அடுத்த வெள்ளிக் கௌமை பொண்ணை நிச்சயதார்த்தம் பண்ண வர்றாங்கன்னு தானே ஒன்னை அனுப்பிச்சேன்.''

''இல்லே பெரியம்மா, அப்பா வரச் சொன்னாருன்னு அனுப்பீங்க.''

''ஒன்னை...'' என்று என்ன செய்வதென்று புரியாமல் நாக்கைக் கடித்துக் கொண்டாள் சவுந்தரம்மாள். ''சரி போகட்டும். விடு. நான் ஒன்னை அனுப்பிச்சது தப்பு! நாளைக்குக் காலம்பற வண்டியிலே நானே புல் மேட்டுக்குப் போயிட்டு வர்றேன்.''

இப்போது விஷயம் சிக்கலான கட்டத்துக்குப் போகிறது. என்ன சொல்வது? வேலூரில் நித்யாவைச் சந்தித்ததையா... தலை கீழாக நின்றாலும் அந்த நிச்சயதார்த்தம் வரும் வெள்ளிக் கிழமை நடக்காது என்றா.

''நான் குளிக்கறேன் பெரியம்மா! ஒடம்பெல்லாம் வேர்வையிலே கசகசன்னு இருக்கு'' என்று சட்டையைக் கழற்றப் போனான் கௌதம்.

''சார்... சார்'' என்று வெளியே யாரோ கதவுக் கைப்பிடியைத் தட்டிக் கொண்டே கூப்பிட்டனர்.

''யாரது?'' கழற்றிய சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே போனான் கௌதம்.

வெளியே அன்னவாசல்காரன் ஒருவன் நின்றிருந்தான்.

''இடீர்னு மோட்டார் தண்ணி எடுக்கலே! காத்தாலயே வந்தேன். நீங்க இல்லேன்னுட்டாங்க. சைக்கிள்ளே உட்காருங்க.''

''நாளைக்குக் காலையிலே வர்றேனே.''

''ஐயையோ.. நெல்லு கதிரு வெளியே வர்ற நேரம். நேத்தே களனியிலே தண்ணி பாச்சலே. இன்னிக்கும் இல்லேன்னா...''

அவன் இழுத்தான். பயிரைக் குழந்தையாகப் பாவிக்கும் விவசாயப் பதைப்பு ஓடிய முகம்.

''இதோ வர்றேன்... நீங்க போயிட்டே இருங்க!''

''எடம் தெரியுமில்லே.. தொளசிங்கம் கரும்பாலை கட்டியிருக்காரே, அதுக்குப் பக்கத்துக் கெணறு. நான் கெணத்தாண்டயே காத்துக்கிட்டிருக்கேன்.''

சவுந்தரம்மாள் கௌதமுக்குப் பின்னால் வந்து நின்றாள். அவன் சைக்கிள் மிதித்துச் செல்வதையே பார்த்து விட்டு, ''இப்பவே போகப் போறியா கௌது?'' என்றாள்.

''நெல்லுப் பயிர்ங்கறாரே.''

அவள் அவன் முகத்தையே பார்த்தாள். காரணமறியா பயம் அவள் கண்ணில் தெரிந்

ஜெயபாலன்

து. இவள் துளசிங்கத்துக்குப் பயப்படுகிறாள்.

"கை கால் மொகம் கழுவு கௌது! ரெண்டு தோசை வார்க்கறேன். சாப்பிட்டுட்டுப் போவே!" என்று உள்ளே போனாள்.

"வேண்டாம் பெரியம்மா, நேரம் ஆய்டும்."

"குளிக்கறேன்னி யேப்பா" அவள் சமையலறை வாசற்படியில் கால் வைத்துத் திரும்பினாள்.

"வந்து பார்த்துக்கறேன். கரண்ட் போயிடும்."

"காப்பியாவது குடிச்சுட்டுப் போ..." என்று விறுவிறுவென்று உள்ளே போனாள்.

அதை மீற முடியாது. ஏற்கெனவே பயப்படத் தொடங்கி விட்டாள். காப்பி குடித்து விட்டுப் போனால்தான் அவளுக்கு ஆறுதல்.

அவன் வாசலில் இறங்கி முகம் அலம்பினான். தொழிலுக்கேற்ற உடை மாற்றினான். காக்கிப் பேண்ட், சாம்பல் வண்ணச் சட்டை வெளியூராயிருந்தால் இதுதான். தலைவாரினான்.

ஆவி பறக்கும் காப்பியோடு சவுந்தரம்மாள் வந்து நின்றாள்.

"எதுனா தகராறு வந்தா நீ ஒண்ணும் பேசாதே" என்று மெதுவாகச் சொன்னாள்.

அவனுக்கு எரிச்சல் வந்தது. அடக்கினான். பாவம் பெரியம்மா. பயந்து பயந்து வாழ்ந்து விட்டவள். பாசம் வேறு கண்ணை மறைக்கிறது.

"கவலைப்படாதீங்க."

அவன் காப்பி குடித்து விட்டுச் சைக்கிள் எடுத்தான்.

அன்னவாசல் கிணற்றில் சக்ஷன் பைப் துருப்பிடித்துப் போயிருந்தது. சல்லி சல்லியாக ஓட்டைகள். பைப் உதவாது. இந்த நீளத்துக்கு இரும்புக் குழாயென்றால் முந்நூறு நானூறு ஆகும். டவுனுக்குப் போய் வாங்கி வர வேண்டும்.

"தற்சமயத்துக்கு ஓட்ட முடியாதா சார்?" கிணற்றுக்காரன் கேட்டான்.

கௌதம் சிரித்தான்.

"இன்னிக்கும் நாளைக்கும் ஓடினாப் போதும்."

இதற்கும் சிரிக்கலாம். ஆனால் அது குடியானவன் தவிப்புக்குப் பரிகாசமாய் விடும். யோசித்தான்.



''தற்சமயம் இந்த பாட்டம் லெவலுக்கு வேற பைப் இருந்தா முயற்சி பண்ணிப் பாக்கறேன்.''

கிணற்றுக்காரன் ஆவலோடு குறுக்கிட்டான்.

''இந்தடி பைப் போதுமா?''

''ஏன்... வச்சிருக்கீங்களா?''

''இல்லே.. பக்கத்து வீட்டுக்காரு வச்சிருக்காரு. கைமாத்தாக் கேட்டு வாங்கியாந்துடுவேன்.''

கௌதம் குனிந்து கிணற்றைப் பார்த்தான். போதுமென்று தோன்றியது.

''சரி எடுத்தாங்க... வர நேரமாவுமா?''

''இதோ அஞ்சு நிமிசம்.''

கிணற்றுக்காரன் இரண்டிரண்டு படியாகத் தாவி மேலேறினான்.

இதுதான் விவசாயம். பயிருக்கும் நீருக்கும் இடை நடுவே மின்சார வெட்டுக்குமான ஓட்டப்பந்தயம். அறுவடைக்குப் பின் அரசாங்க லெவிக்கும், கடன் கொடுத்த நெல் மண்டிக்காரர்களுக்கும் ஒரு பந்தயம்.

இப்படியே இவன் காலம் கழியும். கௌதம் சட்டென்று அப்பாவை நினைத்தான். புல்மேட்டு விவசாயம் இதை விட மோசம். ஒரு கிணறு வெட்டினால் ஒரு தலைமுறை தீர்ந்து விடும். நல்லவேளையாக அப்பா வெட்டிய கிணற்றில் நாலு மெட்டில் தண்ணீர் வந்து விட்டது. கழனிப் பயிராக வேர்க்கடலை போடுமளவு கிணற்றில் தண்ணீர். அப்பா இன்று விவசாயி.

சவுந்தரம்மாள் சொன்னதை நினைத்துக் கொண்டான்.

அவரிடம் போய் இப்படி நித்யா நித்யா என்று ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளுக்கு வருகிற வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வேறு யாரோ வருகிறார்களாம். உங்கள் தலையீடு அவசியம் என்று சொல்லவா முடியும்?


சவுந்தரம்மாள் அதெல்லாம் தெரியாத வெகுளியல்ல. என்ன நோக்கத்தில் சொன்னாள்?

நித்யாவின் மீது எனக்கிருக்கும் காதல் தெரிந்த இரண்டாவது நாளில் அவள் கை நழுவி விடக் கூடாது என்று என்ன கரிசனம் இது!

மறைத்தே வைத்திருந்தானே என்ற கோபம் இல்லை. இது என்னமோ தப்பு வழி, என் வீட்டில் இருந்து, என் சோற்றைத் தின்று வீட்டுப் பேருக்குக் களங்கம் கற்பித்து விடுவானோ என்ற விகல்பமில்லை. சொந்தப் பிள்ளை இப்படி ஒரு பெண்ணை விரும்பியிருந்தால் கூட இவள் இவ்வளவு மும்முரப்படுவாளா?

''கொகக்... கொக்கொக்... கொகக் கொக் கொக்'' என்று கிணற்றின் மேலே கிட்டத்தட்ட அலறியவாறே ஒரு கோழி ஓசை கேட்டது.

அவன் நிமிர்ந்து பார்ப்பதற்குள் அந்தக்



''என்ன சார்... நடு ரோட்டில் நின்னுட்டீங்க?''

''கால்ல செருப்பு இல்லை... அதான் இடது பக்கம் இருக்கிற கடைக்குப் போவோமா அல்லது வலது பக்கம் இருக்கும் கல்யாண மண்டபத்துக்குப் போவோமான்னு யோசனை பண்ணிட்டிருக்கேன்!''

— கமுதி. எஸ். சேதுராமன்.

கோழி கிணற்றின் எல்லைத் தாண்டிக் கீழே தொபீரென்று விழுந்தது. விழுந்த வேகத்தில் கிணறு என்று புரியுமுன் ஒரு பீதியில் இறக்கை விரித்துப் பறக்க முயன்றது. சற்று பறந்தது.

அடுத்து இறக்கை களைத்தோ, வாகு தப்பியோ மீண்டும் ஒரு படிக்கட்டில் இறங்கி அதன் மீது குடுகுடுவென்று ஓடி நீரில் விழுந்து கொக்கரித்துக்கொண்டு எம்பி நீந்தியது. உந்தி எழுந்து அடுத்துப் பறந்தது.

அதன் பீதியில் உதிர்ந்த கோழி இறகுகள் கிணற்றில் சிதறின.

யாரோ இதைத் துரத்தி வந்திருக்க வேண்டும்.

''கோழி.. கோழி'' என்று கிணற்றின் மேலே இருந்து ஒரு பெண் குரல் கேட்டது. நிமிர்ந்தான். ரஞ்சிதம். மாசிலாவின் மனைவி.

கௌதம் கிணற்றினுள் இருப்பான் என்று அவள் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டாள். அவன் முகத்தைப் பார்த்ததும் ஓடி பின்வாங்குவது போல் அவள் கால்கள் தடுமாறின.

கௌதமின் பார்வை அவளைத் தகித்திருக்க வேண்டும். தலை கவிழ்ந்து நின்றாள். பீச்சிக் கொண்டு மேலெழுந்த ஒரு வெறுப்பைத் தன்னுள்ளிருந்து தானே விலக்கி, கௌதம் கவனித்தான்.

உயர்ந்த புடைவை. கழுத்தில் இரண்டு தங்கச் சங்கிலிகள். மேனி நிழல் வாசத்தில் ஒரு புது மெருகேறியிருந்தது. பவுடர். கண் மை. இதற்கெல்லாம்தான் இவள் ஏங்கினாளோ! மாசிலா எங்கே போவான்?

நாள் ஒன்று வரும். கதறிக் கதறித் தீர்த்தாலும் தீராத துக்கம் ஒன்று அன்று இவளைச் சந்திக்கும். அன்று இவள் எப்படித் தாங்குவாள்?

கோழியின் களேபரம் இன்னும் கிணற்றில் அடங்கியபாடில்லை.

அவள் கேட்கப் பயந்து கோழிக்காகத் தான் காத்திருக்கிறாள்.

கௌதம் மோட்டார் பெட்டியின் மீது பறந்து கொண்டு வந்த கோழியைத் தாவிப்



காதலி: ''வாழ்க்கைப் பயணத்தில் கடைசி வரை வருவீங்களா?''

காதலன்: ''என்ன அப்படிக் கேட்டுட்டே? நீ டிக்கெட் எடுக்கிறதா இருந்தால் நான் எங்கே வேணும்னாலும் வருவேன்!'' — ஓமை. அ. கதிர்வேல்.

பிடித்தான். சொரேலென்று புறங்கையில் வலி. கோழியின் விரல் நகம் கீறி விட்டது.

கையிலிருந்து படபடத்துப் பிய்த்துக் கொண்டு கிளம்பி விடத் துடித்தது கோழி. இரண்டு கால்களையும் ஒரு சேரப் பிடித்து அதன் இறக்கைகளை மற்றொரு கையால் அமுக்கிப் பிடித்தான்.

படியேறினான். மெல்ல நடந்தான். அவளை நெருங்கினான். கோழியை நீட்டினான்.

அவள் தலைகுனிந்தவாறே வாங்கிக் கொண்டாள். அத்துடன் விட்டுத் திரும்பியிருக்கலாம். எவ்வளவு பெருந்தன்மை போதித்தாலும், அடக்கி வைத்தாலும் நீதி கோரும் மனம் ஒரு நிமிஷம் நிதானம் இழந்து விடுகிறது. பக்குவம் வரவில்லை.

''திருப்திதானா?'' என்று கேட்டான்.

அது கோழியைக் குறித்ததல்ல. சவுக்கடி வாங்கியவள் போல் நிமிர்ந்த ரஞ்சிதத்திற்கு அது சுரீரென்று உறைத்தது.

''இப்ப மாசிலா இல்லே. போய்ட்டான்.''

அவள் வெலவெலத்து நின்றாள்.

''அவன் போனதுக்கு 'ஆதிதான் காரணம்னு அவனைக் குறி வச்சாச்சு..''

அவள் சரேலென்று திரும்பிப் போய் விடுவாள் என்று கௌதமின் உள்ளுணர்வு கூறிற்று. ஆனால் அப்படி நடக்கவில்லை. அவள் இன்னும் நின்றாள். கொடுக்க வேண்டிய கசையடியைப் பாக்கியில்லாமல் கொடு என்று காத்து நிற்பவள் போல் நின்றாள்.

இன்னும் சற்று மனிதத் தன்மையோடு நடந்து கொள் நடந்து கொள் என்று உள்ளே ஒலித்த உணர்வின் உபத்திரவத்தை மீறி கௌதம் அவள் மனசைத் துளைக்கிற வெறியின் வேகத்தில் தொடர்ந்தான்.

''ஆதியும் போயிட்டான்னா அப்புறமா எப்பவும் நிம்மதி.''

ரஞ்சிதம் உதடும் கன்னமும் துடிக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள். பின்பு கையில் கொக்கரித்த கோழியைக் குனிந்து பார்த்தாள். அடுத்து என்ன செய்யப் போகிறாள் என்று ஒரு தவிதவிப்பை ஏற்படுத்திய நூதன மௌனம் ஒரு கணம் நிலவியது.

அவள் திரும்பி மெதுவாய் நடந்தாள். இரண்டு மூன்று அடி எடுத்து வைத்திருப்பாள். திடீரென்று அவளிடமிருந்து ஒரு விம்மல் வெடித்தது. ''ஹோ'' வென்று ஒரு கதறல் புறப்பட்டு, அதை அவள் கோழி பிடித்த ஒரு கையை விட்டு மறு கையால் தன் வாயைத் தானே பொத்தி அடக்கினாள். அந்த நடை இப்போது சிறு ஓட்டமாயிற்று.

கௌதம் மிரண்டு விட்டான். நிசப்தமாக நின்றான்.

'இவள் மகிழ்ச்சியாக இல்லை; அட கடவுளே! நான் எப்பேர்ப்பட்ட மடையன்!

கௌதம் தன் நாக்கைச் சபித்துக் கொண்டான்.

''இவள் வாழ்வில் குறுக்கிட எனக்கு என்ன உரிமை? ஆதிக்குத்தான் என்ன உரிமை?

அவரவர் வாழ்க்கை அவரவருடையது. அதனதன் போக்கும் அதனதன் விதியும் அவரவருடையது.

எந்த உரிமையின் பேரால் நான் குறுக்கிட்டு விட்டேன்? நீதி கேட்கவோ தண்டிக்கவோ நான் யார்? எனக்கென்ன தகுதி?

கௌதம் இரண்டு நிமிஷம் யோசித்துக் கொண்டு நின்றான்.

இதையே நான் துளசிங்கத்திடம் கேட்டிருக்க முடியுமா? முடியும் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், கேட்டிருப்பேனா?

மாட்டேன். இவளிடம் ஏன் கேட்டேன்? இவள் பெண், பலவீனமானவள் என்றா? அதெப்படி அவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வருவது? நான் கேட்ட கேள்விக்கு எதிர்வினை இல்லாமலா போகும்? இது இத்துடன் முடியாது. இதற்குத் தொடர்ச்சி உண்டு. அதை நான் சந்திக்கத்தான் வேண்டும்.

சரி.. சந்திக்கிறேன். ஆனால் துளசிங்கத்திடம் கேட்க முடியாத கேள்வியை இவளிடம் ஏன் கேட்டேன்?

தூரத்தில் தோள் மீது பைப்பை வைத்துக் கொண்டு ஒற்றைக் கையால் சைக்கிள் ஓட்டி வரும் கிணற்றுக்காரன் தெரிந்தான்.

கௌதம் நிதானமாக நடந்து படிப்படியாய்க் கடந்து கிணற்றில் இறங்கினான்.

ரஞ்சிதத்திடம் தான் ஏன் கேள்வி கேட்டோம் என்ற சலனம் நின்றது. பதில் வந்தது. அவள் கௌதமை மதிக்கிறாள். அது அவள் மருள்வதிலிருந்து புலப்பட்டது. அந்த மதிப்பை ஒரு பயமாக, தண்டனை தருகின்ற பீடமாக ஏற்று நடந்து கொண்டாள். அது தான் தன்னைக் கேள்வி கேட்கத் தூண்டியது என்று உணர்ந்தான்.

கிணற்றுக்காரன் தோளில் பைப்புடன் கிணற்றினுள் இறங்கி வந்தான்.

(தொடரும்)

திடீர் அக்கறை

அகிலாவிற்குத் தன் கண்களையே தன்னால் நம்பமுடியவில்லை. நனவுதானா என்று கிள்ளிப் பார்த்துக் கொள்ளத் தோன்றியது. எல்லை மீறிய சந்தோஷத்தில் உடல் முழுவதும் படபடத்தது.

கையிலிருந்த கடிதத்தை மீண்டும் பிரித்துப் படித்தாள். நிதானமாக, ஒவ்வொரு வார்த்தையாகப் படித்தாள்.

இந்த அண்ணாவிற்கு எங்கிருந்து வந்தது இப்படியொரு அக்கறை? என்மீது.... என் கல்யாணத்தின் மீது....

'இருபத்து நான்காம் தேதி புதன்கிழமை மாலை பெண் பார்க்க வருகிறார்கள். எல்லா விவரமும் சொல்லியிருக்கிறேன். அனேகமாக அமைந்து விடும். புதன்கிழமை மதியம் போல நான் வந்து விடுகிறேன். ரெங்கநாதர் துணையிருப்பார். எல்லாம் நல்லபடி முடியும்'.....

கடைசி நான்கு வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்தாள். இன்றைக்குத் தேதி என்ன? இருபத்து மூன்று. அப்படியானால் நாளைக்குத் தான்....!

சந்தோஷச் செய்தியை அம்மாவுக்குத் தெரிவிக்க அவள் மனம் துடித்தது.

அம்மா இந்நேரம் வக்கீல் வீட்டிலே இருப்பாள், பாத்திரம் தேய்த்துக் கொண்டு. சிங்கப் பெருமாள் கோவிலைத் தாண்டிப் போக வேண்டும். ஒரு மைல் இருக்கும். சரி அம்மா வந்துடட்டும். சின்னவன் எங்கே போனான்?.... அவன்கிட்டே சொல்லி என்னாகப் போகிறது?

ஆவலைக் கட்டுப் படுத்திக் கொண்டு நடுக் கூடத்துக்குப் போனாள். கடிதத்தைச் சுவாமி படத்தின் முன் வைத்துக் கை கூப்பினாள். கண்கள் கலங்கின. மனசு விம்மியது.

''இப்பவாவது எங்கண்ணாவுக்கு மனசைக் குடுத்தியே ரெங்கா.., நாலு வருஷமா ஒரு லெட்டர் கூடப் போடாத வரை, எனக்கு வரன் பார்க்கிற அளவுக்குத் தூண்டி விட்டிருக்கியே... ரொம்ப நன்றிப்பா.....'' அவள் உதடுகள் முணு முணுத்தன.

''என்ன விசாலம்?... உம்பொண்ணு அகிலாவுக்கு என்ன வயசு?''

''அவளுக்கென்ன!... வைகாசி வந்தா முப்பத்து மூணு முடியும்...'' குரலில் அலுப்பு நிறையவே வெளிப்பட்டது.

''உன் பெரிய மகன் ஏதாவது லெட்டர் கிட்டர் போடறானா இல்லையா? கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாம இருக்கானே?''

''ஹூம்!... அவனைச் சொல்லி என்ன செய்ய? அவனுக்கு வாய்ச்சவ அப்படி. இழுத்துக் கட்டிப் போட்டுட்டா!''

''லோகத்திலே இப்படியும் இருப்பாளோ?''

''இருக்காளே.... எனக்கு வந்து வாய்ச்சிருக்காளே மாட்டுப் பொண்.... என்னத்தைச் சொல்ல? எல்லாம் இந்த அகிலாவோட தலையெழுத்து. அதிர்ஷ்டம் கெட்டவள்....''

''சின்னவன் என்ன பண்றான்?''

''ம்... பண்றான் சட்டியும், பானையும்! ஊரைச் சுத்திச் சுத்தி வரான். ஊரு பூராக் கடன் வாங்கியிருக்கான். வேறென்ன செய்யறான். அவனைக் குற்றம் சொல்லி என்ன செய்ய? பி.ஏ. பாஸ் பண்ணி முழுசா எட்டு வருஷமாச்சு. வேலை கிடைச்ச பாடில்லே... பெரியவனைக் கேட்டா சின்னவனைக் கை காட்டுறான். 'நான் தான் பத்து வருஷம் இந்தக் குடும்பத்தை வைச்சுக் காப்பாத்தினேனே? அப்புறம் தானே கல்யாணம் பண்ணிட்டேன்? சின்னவன் கொஞ்ச நாளைக்கு உழைச்சுக் காப்பாத்தட்டுமே, தங்கைக்குக் கல்யாண ஏற்பாடு செய்யட்டுமே'ங்கிறான். 'எனக்கும் ரெண்டு பொண்ணாச்சு. அதைக் கரையேத்த வேண்டாமா'ன்னு என்னையே எதிர்க் கேள்வி கேட்கிறான்...'' விசாலம் ஒரு மூச்சு அழுது முடித்தாள்.


''சரி மாமி. அரிசியும் உளுந்தும் எடுத்துக் குடுங்க. ஊற வைச்சுட்டுப் போறேன். மதியம் வந்து அரைச்சுடறேன்...''

அகிலாவுக்கு ஐந்து வயது இருக்கும் போதே அப்பா பரமபதம் அடைந்து விட்டார். அப்போது பெரியவனுக்குப் பதினெட்டு வயதிருக்கும். வேலை கிடைத்து ரெண்டு மாதமே ஆகியிருந்த சமயம். சின்னவனோ மூன்று வயதுக் குழந்தை.

அடுத்த பத்து வருடத்துக்குப் பெரியவனின் வருமானம்தான் குடும்பத்துக்குச் சோறு போட்டது. அவனுக்குக் கல்யாணம் ஆகும் போது அகிலாவுக்குப் பதினைந்து வயது.

'அவளுக்கென்ன அவசரம்? இன்னும் நாலு வருஷம் போகட்டும். அப்புறம் வரன் பார்க்கலாம்...' என்று தள்ளிப் போட்டார்கள். அதற்குள் பெரியவனுக்கு அடுத்தடுத்து

'ராஜ்கோகுல்'



இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து விட்டன. கோயமுத்தூருக்கு மாற்றலும் வந்து விட்டது. அம்மாவையும் தம்பி, தங்கையையும் ஸ்ரீரங்கத்திலேயே விட்டு விட்டு, தனிக் குடித்தனம் போனான்.

தூரம் உறவையும் தூரமாக்கியது. ஆரம்பத்தில் கொஞ்ச வருஷம் அங்கே, இங்கேயென்று தங்கைக்கு வரன் தேடத்தான் செய்தான். பிள்ளை விட்டார் கேட்ட சீரும், வரதட்சிணையும் அவனை அயரச் செய்தன. வாழ்க்கைத் துணையாய் வந்தவள் வெட்டிப் பிரித்தாள். 'நமக்கும் ரெண்டு பொண்ணுங்க இருக்கு. அதைப் பத்திக் கவலைப் படுங்க. உங்க தங்கையை உங்க தம்பி காப்பாத்துவாரு....' என்று தூபம் போட்டான்.

போக்கு வரத்து குறைந்தது. கடித வரத்தும் குறைந்தது.

ஒரு முறை இவர்கள் மூவரும் கோயமுத்தூர் சென்ற போது, மருமகள் அடிக்காத குறையாகப் பேசித் திருப்பியனுப்பி விட்டாள்.

இன்றைய கணக்குப் படி விசாலம் பெரியவனைப் பார்த்தே மூன்று வருஷத்துக்கு மேலாகி விட்டது. பேத்திகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலைக் கூட மருமகளின் குணம் நினைத்து அடக்கிக் கொண்டாள்.

'பேத்திகளைப் பார்க்கணும் போலிருக்கு அகிலா....'

'ஓஹோ? அதான் குறையாக்கும் இப்போ?.... பேத்திகளாம்' பேத்திகள்! எல்லாம் எனக்கு எமன்களாய் வந்தவை. அதுக மட்டும் இல்லேன்னா அண்ணா எனக்கு எப்பவோ கல்யாணத்தை முடிச்சிருக்கும்.... நந்திகள்... அதுகளைப் போய் பார்க்கணுமாக்கும்?' இப்படி எத்தனையோ முறை சொல்லியிருக்கிறாள் கோபமாக.

பெரியவன் கடிதம் போடுவதைக் கூட நிறுத்தி விட்டான். பெற்ற கடனுக்கு மாதா மாதம் இருநூறு ரூபா மணியார்டர் அனுப்புவான். மணியார்டர் பாரத்தில் எப்போதும் மெஷின் தனமாக 'அம்மா சௌக்கியமா? தங்கை சௌக்கியமா? சின்னவன் ஏதாவது வேலைக்குப் போகிறானா?' என்று ரப்பர் ஸ்டாம்ப் அடித்தது போல எழுதுவான்.

'இந்தப் பணத்தை எம்மா வாங்கறே? பேசாம திருப்பியனுப்பு அவங்களுக்கே. அங்கே பிறந்திருக்கே ரெண்டு சனியன்கள் அதுகளே அனுபவிக்கட்டும்...' என்று எத்தனையோ முறை கத்தியிருக்கிறாள் அகிலா.

விசாலம் வீட்டிற்குள் நுழைந்தும் நுழையாததுமாக எதிர் கொண்டாள் அகிலா.

"அண்ணா லெட்டர் போட்டிருக்கும்மா..." என்றாள் உற்சாகமாக.

"அஞ்சாம் தேதி தானே வரும் மணியார்டர்?" — புரியாமல் கேட்டாள்.

"அதில்லேம்மா. லெட்டர் போட்டிருக்கு. எனக்கு ஒரு வரன் பார்த்திருக்காம். நாளைக்குப் பெண் பார்க்க வர்றாங்களாம்...'

கடிதத்தைப் பிரித்து வேகமாகப் படித்துக் காண்பித்தாள் மகள். அம்மாவாலும் விஷயத்தை நம்ப முடியவில்லை. கண்ணீர் பெருகியது. சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள். நின்ற இடத்திலேயே கை கூப்பி ரெங்கநாதனுக்கு நன்றி சொன்னாள்.

கொஞ்ச நேரம் கழித்து உள்ளே நுழைந்த சின்னவன், தடாலென்று அம்மாவின் காலில் விழுந்தான்.

"எனக்குச் செங்கிப்பட்டி செக் போஸ்டிலே டெம்ப்ரவரியா வேலை கிடைச்சிருக்கும்மா...." சந்தோஷம் பீறிட்டது வார்த்

தைகளில்.

''சந்தோஷம்டா சின்னவனே! நடந்தா எல்லாம் நல்லதா நடக்கும்கிறது சரியாகத் தான் இருக்கு....'' — அண்ணாவின் கடிதத்தைப் பற்றி கூறினார்கள்.

அவர்கள் சந்தோஷம் இருமடங்காகியது.

அடுத்த நாள் —

பெண் பார்க்கும் படலம் முடிந்து, பிள்ளை வீட்டார் சென்று விட்டார்கள்.

அவர்கள் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

''எப்படியோப்பா! வந்தவாளுக்கு அகிலாவை ரொம்பப் புடிச்சுப் போச்சு. எல்லாம் நல்லபடியா முடிஞ்சாச் சரிதான்...''

''அது சரிண்ணா. இத்தனை வருஷமா அக்கறையே இல்லாத மாதிரி இருந்தே. இப்ப எப்படி திடீர்ன்னு அக்காவோட கல்யாண ஏற்பாட்டிலே இறங்கினே?....'' சந்தேகம் கேட்பது போலக் கேட்டான் சின்னவன்.

பெரியவன் பதில் சொல்ல வில்லை. அவனது முகம் கொஞ்சம் சிறுத்தது. சுவரோரம் சாய்ந்து நின்றிருந்த தன் மனைவியை, 'சொல்லட்டுமா?' என்பது போலப் பார்த்தான்.

''நானே சொல்லிடறேங்க...'' என்று ஆரம்பித்தாள் மருமகள்.

''எங்களை மன்னிச்சுடுங்க அத்தை. சொல்லப்போனா இதுவும் எங்க சுயநலத்துக்காகச் செய்யிறோம்னு தான் சொல்லணும். முதல்லே என் பெண் குழந்தைகளைக் காரணம் காட்டித் தான் அகிலாவோட கல்யாணத்துக்கு உதவுவதைத் தடுத்தேன். இப்ப அதே பெண்களுக்காகத் தான், அகிலாவுக்கு வரன் பார்க்க வேண்டியதாயிடுச்சு....''

மற்ற மூவரும் புரியாமல் பார்த்தார்கள்.

''ஆமா அத்தை.... எங்க மூத்த பொண்ணுக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சோம். பார்த்த மூணு வரனும் தட்டிக் கழிஞ்சது. சொல்லி வைச்சாற் போல எல்லோருமே, 'உங்களுக்கு ஒரு தங்கை இருக்காளாமே, கல்யாணமாகாமே. அவளுக்குக் கல்யாணம் முடிங்க முதல்லே. அந்தப் பாவத்துக்கு நாங்களும் துணைக்கு வந்ததா ஆயிடும்'னு சொல்லிட்டாங்க... இப்போ அகிலா கல்யாணம் முடிஞ்சாத்தான் எங்க பொண்ணு கல்யாணம் நடக்கும்கிற மாதிரி சூழ்நிலை ஏற்பட்டிருச்சு... அதனாலே தான்....''

கேட்டுக் கொண்டிருந்த அகிலாவுக்கு வியப்பாக இருந்தது. இத்தனை நாள் தனக்குத் தடையாக நினைத்து, 'சனியன் நந்தி' என்றெல்லாம் திட்டிக் கொண்டிருந்த குழந்தைகள் தான் நடக்கப் போகும் தன் இரு மணத்திற்கே காரணம் என்று தெரிந்து ஆச்சரியப்பட்டாள். மனத்துக்குள் அக் குழந்தைகளை ஆசீர்வதித்தாள்!

அதிர்ஷ்ட தேவதை

6

தனத்தைப் பார்த்த உடனேயே ரங்கன் இடிந்து போனான். அவனுடைய மனைவி தனமா இவள்? இரண்டே நாளில் அவள் எப்படி இளைத்துப் போய் விட்டாள்? ஏன் முகம் இப்படி வெளுத்துப் போய் விட்டது! வயிற்றுக் கட்டியை வெளியே எடுக்கும் போது உடம்பின் ரத்தமெல்லாமே வெளியேறி விட்டதா?

சைக்கிள் ரிக்ஷா நின்றது. தனம் மெதுவாக இறங்கினாள். அவள் மிகவும் சோர்ந்து போயிருக்கிறாள் என்பதை எளிதில் உணர்ந்த ரங்கன், அவளுக்கு உதவி செய்ய நெருங்கினான். அவள், ரங்கன் நீட்டிய கையை உதாசீனம் செய்து விட்டு, "அந்த ஆள் கையிலே அஞ்சு ரூபா குடுய்யா" என்று கூறி விட்டினுள் சென்றாள்.

ரங்கன் வீட்டினுள் பிரவேசித்த போது, தனம் படுத்திருந்தாள்.

"தனம்..."

"........"

"தனம், என்ன செய்யறது இப்ப?"

"ஒண்ணும் செய்யலே... நீ தொண தொணக்காம இரு."

"டீ வாங்கியாரட்டுமா?"

"ரெண்டு நாளுக்கு டீ, காப்பி எதுவும் குடிக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிச்சு."

"அப்ப?"

"ஆர்லிக்ஸ் குடிக்கச் சொல்லிச்சு."

"வாங்கியாரேன்."

"சொல்லிட்டு நிக்காதே!"

இரண்டு நாட்கள் ரங்கன் ஆபீசுக்குச் செல்லவில்லை. மூன்றாம் நாள், "நான் இன்னிக்கு ஆபீஸ் போலாம்னு இருக்கேன், தனம்..." என்றான்.

ம.வி.ஆர்.

"யார் வேணாம்னு சொன்னாங்க?"

"ரெண்டு நாள்ளே ஒன் ஒடம்பு நல்லாத் தேறிட்டது."

"அதுக்கு இன்னா செய்யணுங்கறே?"

"ரொம்ப வலிக்குதா?"

"யோவ், இன்னா கேள்விய்யா கேக்கிறே... செத்துப் பொழைச்சு வந்திருக்கேன்யா...."

"எங்கே கத்தி வைச்சாங்க, அந்த டாக்டரம்மா? இங்கேயா...?" ரங்கன் அவளுடைய வயிற்றைத் தொடப் போனான்.

"கையை எடுய்யா...."

"என்ன தனம் இது, நான் ஒன் புருசன் இல்லே...."

"யார் இல்லேன்னா? அதான் கழுத்திலே தாலி கட்டியிருக்கியே... இதுக்குள்ளே இன்னா அவசரம் ஒனக்கு... நீ ஆபீசுக்குப் போ..."

அருகே உட்கார்ந்திருந்தவன் எழுந்தான்.

"யோவ்."

"என்ன, தனம்?"

"இன்னும் ரெண்டு மாசத்துக்கு நீ எங்கிட்ட நெருங்கக் கூடாதுன்னு டாக்டர் அம்மா சொல்லிச்சு. அதனாலே..."

"அதனாலே?"

"நீ வேணும்னா ஆபீஸ்லேயே தங்கிக்க."

"ஒன்னை யாரு கவனிச்சுப்பா தனம்?"

"ஏன்யா கலியாணத்துக்கு முன்னாடி நீயா கவனிச்சுட்டிருந்தே?"

"அப்ப ஒன் அப்பார் இருந்தாரு."

"இன்னாய்யா பினாத்தறே? அது எங்கேய்யா இங்கே இருந்திச்சு? மில்லில் அடிச்சுட்டு ஆபீஸ்லே அல்ல தூங்கிச்சு?"

என்ன பதில் சொல்லுவது என்று ரங்கனுக்குப் புரியவில்லை. அவன் மௌனமாய் நகர்ந்தான்.

"யோவ்!"

திரும்பிப் பார்த்தான்.

"என் அப்பன் கையிலே இதைப் பத்திச் சொல்லாதே..."

"சொல்லக் கூடாதா?"

"சொல்ல வேணாம்.. அது ஒரு மாதிரி... மறுபடியும் வூட்டுக்கே வந்துடும்."

"சரி, சொல்லலே."

"சாயங்காலம் வருவே இல்லே?"

"நீதான் வர வேணாம்னியே..."

"யார்யா அப்படிச் சொன்னாங்க? ரெண்டு மாசம் நீ பொறுத்துக்கணும். அவ்வளவுதான்."

"சரி."

"ஆபீஸ்லேர்ந்து வரும் போது ஒரு நூறு ரூபா பணம் எடுத்தா!"

"பணமா... இப்ப பாங்க்ல பணம் நூறோ இருநூறோதான் இருக்கும்."

"அப்ப கடன் வாங்கு."

"யார்ட்டே வாங்கறது, தனம்?"

"அதான் ஒரு அய்யரு நம்ப கலியாணத்துக்கு வந்து என்னைப் பார்த்து பல்லைக்

கூடிச்சுதே... அது கையிலே கேளு."

"அவர் பேரு ரமணி, தனம்!"

"என்ன எளவானா எனக்கு இன்னா?"

"அவர் ரொம்ப நல்லவரு, தனம். அவரு தான் என்னை ஒரு ஆளா மாத்தினவரு.. அவரு இல்லாட்டி நான் என்னிக்கோ..."

"சரித்தான் நிறுத்துய்யா, பொலம்பாதே... எனக்குப் பணம் வோணும்... ஹங் ஹாங், சொல்லிட்டேன், ஆமாம்."

ரங்கன் பதில் சொல்லாமல் வெளியேறினான்.

தனத்தை, அவன் தன் மனைவியாக நினைத்துப் பார்க்க அவனால் முடியவில்லை. ரமணி கூறிய அறிவுரைகள் இப்போது காலதாமதமாக மண்டையில் அடித்தன.

அவன் ஆபீசை அடைந்தான். நரகத்திலிருந்து சொர்க்கத்துக்கு வந்து விட்டதான பிரமை ஏனோ அவனுள் பிறந்தது.

தன்னை நோக்கிப் புன்முறுவலுடன் வரும் மாலுவைக் கண்ட போது ரமணிக்கு, அவன் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இரண்டாவது நல்ல செய்தியை அவள் கூறிய நாளிலிருந்து அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறாள். விரைவில் அவனை மணம் செய்து கொண்டு வாழ்க்கையை ஆரம்பிக்கத் துடிக்கிறாள். ஆனால் அவன் தயாரில்லையே? அவனுடைய தாத்தா இன்னும் மண்டையைப் போடவில்லையே? அவர் தாமதம் செய்யச் செய்ய நிலத்தின் விலை ஏறிக் கொண்டே போகும். மூன்று பிள்ளைகளுக்கும் மூன்று பெண்களுக்கும் அவருடைய சொத்து பிரிக்கப்படும். வீட்டுக்கும் நிலத்துக்கும் ஒரு விலையை ரமணி நிர்ணயித்து, பணமாக அள்ளி விட்டால், அதன் பிறகு ஒரு பிரச்னையும் இராது. ஆனால் பணத்துக்கு அவன் எங்கே போவான்? நிறுவன அதிபர் ரமேஷ் சாண்டில்யாவிடம் லட்சம் லட்சமாகக் கொட்டிக் கிடக்கிறது - ஒரு வியாபார பிரேரணையாக அவன் ரமேஷிடம் பேசினால் பணம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. யோசிக்க வேண்டிய விஷயம். ஆனால் இப்போதே சிந்தித்துச் சிந்தித்து மண்டையைப் புண்ணாக்கிக் கொள்ளுவதில் என்ன புண்ணியம்? தாத்தாவுக்கு, அவன் நெய்ப் பந்தம் பிடித்த பிறகுதானே அவன் எதையும் சாதித்துக் கொள்ள முடியும்? எப்போது நெய் வாங்குவான், எப்போது பந்தம் பிடிப்பான்?

"என்ன, ஐயா ரொம்ப ஆழமா எதையோ நினைச்சுட்டிருக்கார் போலிருக்கு!"

"வா, மாலு. உட்கார்."



''என்ன ரமணி, எது பத்தி யோசனை செஞ்சுட்டிருந்தீங்க?''

''நம்ப கலியாணம் பத்தி....''

''நிஜமாவா, ரமணி?''

''இதிலே கூடவா நான் பொய் சொல்லணும், மாலு?''

''அப்ப, என் அக்கா கலியாணத் தன்னிக்கே....''

''நோ, நோ.. அது முடியாது, மாலு. ரெண்டு பெண்களோட கலியாணமும் ஒரே நாளில் நடக்கணும்னு உன் அம்மா ஆசைப் படறதுக்காக, என்னால் அவசரப்பட முடியாது. கொஞ்சம் வெயிட் பண்ணு...''

''கொஞ்சம்னா?''

''நேத்து ராத்திரி கூட தாத்தா ரொம்ப இருமினார்...''

''புரியறது, ரமணி.''

''காப்பி சாப்பிடறியா... அதோ ரங்கன் வர்றான். வாங்கிட்டு வரச் சொல்லப் போறேன்.''

''ஆமாம், ஏன் ரெண்டு நாளா ரங்கன் வரலை? கலியாணமானதும் ஹனிமூன் போகலே... இப்பப் போயிட்டு வந்தானா?''

ரங்கன் எதிரே வந்து நின்றான்.

மாலு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏம்மா சிரிக்கிறீங்க?'' என்று ரங்கன் கேட்டான்.

''ஏன் சிரிக்கப்படாதா, ரங்கா? அது சரி, உன் மனைவி எப்படி இருக்கா? உன் வாய்க்குப் பிடிச்சதை ஆக்கிப் போடறாளா?''

''ரமணி சார், காப்பி வாங்கியாரட்டுமா?''

''ரெண்டு கப்... ஸ்ட்ராங்.''

அவன் வெளியேறியதும், ''மாலு, இனிமே ரங்கன்கிட்ட அவன் பெண்டாட்டியைப் பத்தி எதுவுமே கேட்காதே!'' என்றான் ரமணி.

''ஏனாம்?''

''அவன் சோகமா இருக்கான்.''

''ஏனாம்?''

''மனைவி அமைவதெல்லாம்....''

''தெரியும். கடவுள் கொடுத்த வரம். ரங்கன் ஏன் சந்தோஷமா இல்லை?''

''சமயம் வர்றப்ப சொல்றேன்.''

காப்பி வந்தது.

ரமணியும் மாலுவும் குடித்தபின், ''மாலு ரெண்டு முக்கியமான லெட்டர் வந்திருக்கு. அது சம்பந்தமான ஃபைல்களை எடுத்து வை. நான் ஒரு பத்து நிமிஷத்திலே வந்துடறேன்,'' என்று சொல்லி ரமணி எழுந்தான்.

''எங்கே போறீங்க?''

அவன் பதில் கூறாமல் ஹாலை விட்டு வெளியேறினான். ரங்கன் உட்கார்ந்திருக்கும் இடத்தைக் கடக்கையில், ''ரங்கா, வெளியே வா!'' என்றான்.

இருவரும், ஆபீஸ் கட்டடத்துக்கு அடுத்தாற்போலுள்ள வெட்ட வெளியில் சந்தித்துக் கொண்டார்கள்.

''தனம் எப்படி இருக்கா?''

''ஆபரேஷன் முடிஞ்சு வீட்டுக்கு வந்தாச்சு.''

''தெரியும். இப்ப எப்படி இருக்கா?''

''தெம்பா இருக்கா. ஐநூறு ரூபா பணம் வேணும்னா.''

''எதுக்கு?''

''சொல்லலே.''

''கொடுக்கப் போறியா?''

''என் கணக்கிலே எவ்வளவு மிச்சம் இருக்குன்னு கூட எனக்குத் தெரியாது, ரமணி சார்.''

''அந்தக் கவலை உனக்கு எதுக்கு, ரங்கா? கொடுக்கப் போறியா?''

''வீண் செலவு செய்யறா, ரமணி சார். அடாவடித்தனமாப் பேசறா... என்னை மதிக்க மாட்டேங்கறா...''

''ஏன் தெரியுமா, ரங்கா?''

''தெரியாது சார்... ஒருவேளை நான் குள்ளமா, வழுக்கைத் தலையோட இருக்கிறது அவளுக்குப் பிடிக்கலையோ என்னமோ! ஆனா அப்படியும் படலே. பிடிக்காம இருந்தா என்னை ஏன் அவ கலியாணம் பண்ணிட்டிருக்கணும்?''

''நான் சொன்னப்ப உன் மண்டையிலே ஏறலே... பிடிவாதமா அவ கழுத்திலே தாலியைக் கட்டினே. அவ உன் பணத்துக்காகத் தாண்டா கட்டிக்கிட்டா.''

''இப்ப பணமும் இல்லே.''

''யார் சொன்னா...? உன் ஃபிக்சட் டெபாசிட்லே ஆறாயிரம் இருக்கு!''

''அதிலேர்ந்து கொஞ்சம் எடுக்க முடியுமா, ரமணி சார்?''

''ஓ முடியும். கடனா வாங்கிக்கலாம்... என்ன சொல்றே? பணம் வாங்கித் தரட்டுமா! அவகிட்ட கொண்டு போய்க் கொடுக்கறியா?''

ரங்கன் யோசித்தான். உண்மையாகவே வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிச் சேர்த்து வைத்த பணம். இது இருப்பது இதுவரையில் தனத்துக்குத் தெரியாது.

''ரங்கா.''

''என்ன ரமணி சார்?''

''உன் பெண்டாட்டி பணம் கேட்கறதை நிறுத்த மாட்டா. ஆனா உன்னாலே நிறுத்தாம கொடுத்துட்டே இருக்க முடியுமா? நல்லா யோசிச்சுப் பாரு!''

''ஒரே குழப்பமா இருக்கு, ரமணி சார்.''

''அப்ப நான் சொல்றதைக் கேளு.''

''சொல்லுங்க.''

''பணம் கொடுக்கிறதை நிறுத்து. வீட்டு வாடகை, மளிகை சாமான் இதுகளுக்கெல்லாம் நீயே மாசா மாசம் கொடு. அவ கைச் செலவுக்கு பத்தோ இருபதோ கொடு. நீ கண்டிப்பா இருந்தா நாளடைவிலே உன்னை அவ புரிஞ்சுப்பா.''

''அப்புறம்?''

''உன்னை விட்டே போயிடுவா!''

''சார், ரமணி சார், என்ன சொல்றீங்க?''

"எங்க கடைத் துணிக்கு ஒரு வருஷம் நாங்கள் 'காரண்டி' தருவோம்!"

"அதுக்கப்புறம்?"

"பாத்திரக்காரர்கிட்டே கொடுங்க. சரண்டி தருவார்."

— எஸ். கணேஷ்.



"யார்ட்டே பணம் கறக்கலாமனு அவ பறப்பான்னு சொல்ல வரேன்."

"சார், ரமணி சார்... என் பெண்டாட்டி தனத்தைப் பத்தி இப்படிக் கேவலமாப் பேசறீங்களே. இது உங்களுக்கே அடுக்குமா?"

"அடுக்கும் ரங்கா, நல்லாவே அடுக்கும். சரி. இப்ப நீ ஆபீசுக்குப் போ. நான் ஒரு வேலையா ஒருத்தரைப் பார்க்கணும். நீ போ."

சொல்லி விட்டு ரமணி நகர்ந்தான். ரங்கனுக்கு வாய் விட்டு அழ வேண்டும் போல இருந்தது. கால்கள் பின்ன, அவன் ஆபீசை நோக்கி மெதுவாக நடந்தான்.

அவனைக் கண்டதும் சுகந்தியின் வாய் சும்மா இருக்கவில்லை.

"என்ன ரங்கா, அழுதியா?" என்று கேட்டாள்.

அவன் பதில் கூறவில்லை.

"எங்கிட்ட கூடச் சொல்லக் கூடாதா, ரங்கா?"

"நான் மனசு நொந்து போயிருக்கேன், சுகந்தி அம்மா."

"அதான் உன் மொகமே சொல்றதே? என்ன பிரச்னை? சொல்லு. என்னால் முடிஞ்சா தீர்த்து வைக்கிறேன்."

"தீரப் போற பிரச்னை இல்லே, சுகந்தி அம்மா."

"அப்படீன்னா?"

"ரமணி சாருக்கு எம்பேர்ல கோவம். நான் செய்யறதெல்லாம் தப்புன்னு மண்டையிலே அடிக்கிறாரு."

"ஏன் என்ன சொன்னார்? அவர்தானே உனக்கு எல்லாம்? உனக்குக் கஷ்டம்னா அவர் பொலபொலன்னு கண்ணீர் கொட்டுவாரே!"

"அது உண்மைதான். ஆனா என் பெண்டாட்டியைப் பத்திப் பேசினாலே அவருக்குப் பத்திக்கிட்டு வர்றது."

"ஏன் என்னாச்சு?"

"என் பணமெல்லாம் கரைஞ்சு போச்சு. சுகந்தி அம்மா... இப்ப ஐநூறு ரூபா கொண்டான்னு அவ சொல்றா."

"எதுக்கு ஐநூறு ரூபா?"

"தெரியலே... நாலு நாள் முன்னாடிதான் ஆபரேஷனுக்குன்னு ஆயிரத்து இருநூறு ரூபா கொடுத்தேன்."

"ஆபரேஷன். என்ன ஆபரேஷன்?"

"வைத்திலே கட்டியாம்."

"வயித்திலே கட்டியா?"

"ஆமாம்மா."

"இந்த வயசிலேயா?"

"ஆமாம். கலியாணமாகி முழுசா மூப்பது நாள் ஆவுலே. அதுக்குள்ளே ஆபரேஷன்."

"வயித்து வலின்னு துடிச்சிருப்பாளே?"

"வலியிலே துடிச்சாளோ என்னமோ தெரியலே... ஆனா அடிக்கடி வாந்தி எடுத்தா... சோத்து ருசி கூட இல்லாமல் போச்சு."

"ஓ அதான் ஆபரேஷனா?"

"ஆமாம்மா."

"இனிமே நீ கவலைப்படவேண்டாம். ரங்கன்... அவளுக்கு வாந்தி நின்னு போயிருக்கும். நீயே பாரேன். கொஞ்ச நாள்ளே சோத்தையும் குழம்பையும் ஒரு பிடி பிடிப்பா!"

"அவ வயத்திலே கட்டி வந்தா. அது அவ தப்பா, சுகந்தி அம்மா?"

"யார் சொன்னா?"

"ரமணி சார் சொல்லலே.. ஆனா அவர் பேச்சிலே அப்படிப் படுது."

"நீ கவலைப்படாதே ரங்கா. நீ இப்ப சொன்ன வயித்துக் கட்டி என்னன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. இது பொம்பளைங்க சமாச்சாரம்... நீ கவலையை விடு."

அவனுடைய புண்பட்ட நெஞ்சுக்குத் தேன் தடவுவது போல இருந்தன, சுகந்தியின் வார்த்தைகள். மனசும் ஒருவாறு தேறிற்று.

ஆனால் அன்று வீட்டை நோக்கிச் செல்லும் போது திடீரென்று பயம் கவ்விக் கொண்டது. ஐநூறு ரூபாய் பணத்துடன் அவன் செல்லவில்லையே?

தனம் சும்மா இருப்பாளா?

சீறி விழுவாளே?

கூதறி எடுப்பாளே?

அவனுடைய அதிர்ஷ்டம், அவன் வீட்டை அடைந்த போது தனம் அங்கே இல்லை. தாற்காலிகமாக அவன் மனம் சமாதானம் அடைந்தது.

(தொடரும்)

"முத்துவேலு... டேஏஏஏய்... முத்து வேலு..."

பக்கிங்ஹாம் பிரபுவின் பெயர் வழங்கப் பட்ட கால்வாயைக் கடந்த சிறு பாலத்தின் மதில் சுவர் மேல் உட்கார்ந்து, பிடி பழகிக் கொண்டிருந்த முத்துவேலு, குரல் கேட்டுத் திரும்பினான்.

கல்லெறி தூரத்தில் டெல்லிபாபு ஓடி வந்து கொண்டிருந்தான். குட்டிகளோடு மேய்ந்து கொண்டிருந்த தாய்ப்பன்றி ஒன்று, டெல்லிபாபுவின் ஓடுபாதையில் தானும் தன் குழந்தைகளும் இருப்பது கண்டு, 'இர்ரக்' 'இர்ரக்' என அவசரமாக விலகிக் கொள்ள, பெட்டையைத் துரத்திக் கொண்டிருந்த சேவல் ஒன்று, டெல்லிபாபுவின் வேகத்தில், இடறிப் பறந்த கல்பட்டு, சட்டென்று இறக் கைகளை விரித்து 'கெக், கெக், கெக்' என்று பூமியிலிருந்து மேல் நோக்கிப் பறந்தது.

"என்னடா?" என்று கேட்டான் முத்து வேலு, கையிலிருந்த பிடியைக் கால்வாயில் எறிந்து விட்டு.

"முத்துவேலு.... முத்துவேலு" – டெல்லி பாபு நுரையீரல்களைக் காலி செய்து நிறைத் தான்.

"என்னடா ஆச்சி?"

"உங்கப்பா... உங்கப்பா..."

"எங்கப்பா... எங்கப்பா....?"

"உங்கப்பா சாக்கடையில எறங் குனப்போ...."


"டேய்... என்னடா ஆச்சி... சொல்லிட்டு அழுடா... எங்கப்பா வுக்கு என்னடா ஆச்சி... டில்லி பாபு... தப்பாச் சொல்லிடாதடா... டேய்.... டேய்...."

"ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்கடா...."

"ஒண்ணும் ஆவலியே?"

"வெஷவாயுவைச் சுவாசிச்சிட் டாருடா...."

"பெரியபாளையத்தா... கைவுட்டு டாதே.... எங்கம்மா கிட்டச் சொல்லி, உனக்குப் பொங்க வெக்கச் சொல்றேன்... கோழியடிக்கச் சொல்றேன்... வேப்பெலை கட்டிக்கறேன்.... காப்பாத்தும்மா... டேய்...



எந்த ஆஸ்பத்திரிடா?''
''ஜிஎச்தான்...''

ஆட்டோ 'ட்ர்ர்' என்று அதன் உச்ச பட்ச வேகத்தில் கதறிச் சென்றது.

''மூத்து, பயப்படாதே... ஒண்ணும் ஆயிடாது....''

''அம்மா எங்கடா டெல்லி?''

''ஆஸ்பத்திரிக்குத்தான்.''

''வள்ளி?''

''வள்ளி, காவேரி அல்லாரும் அங்க தாண்டா போயிருக்காங்க... பெரிய பாளையத்தா மேல பாரத்தைப் போட்டுக் கினேல்ல... கம்னுவா.''

''எப்படிரா கம்னு வரது? எங்கப்பண்டா.. ஒரு குடி இல்ல, கூத்தி இல்ல, தம்மு கூட வெலிக்கத் தெரியாதுடா அந்த ஆளுக்கு...''

''தெரியும். பொட்டச்சி மாதிரி அயு வாதே....''

''இந்த மாதிரிப் பண்ணிட்டியேடா பாவி....''

''யாரைடா சொல்றே...?''

''எங்கப்பனைத்தான். வேணா நைனா, இந்தத் தொழிலே வேணாம்... கண்டவன் கஸ்மாலமும், கலந்துகட்டி, ஒரே கலீஜா இருக்கும். 'கப்'படிக்கும். இதுல போயா எறங்கறேன்னு ஒரைக்கிறா மாதிரி சொன் னேனே. கேட்டியா நீ... கேட்டியா நீ...?''

டெல்லிபாபு திரும்பி உட்கார்ந்து கொண்டு, சாலையை வெறிக்கத் தொடங் கினான். முத்துவேலுவின் வாய் மூடும் என்று தோன்றவில்லை. அடக்க அடக்க ஆறாகும். கமுக்கக் கமுக்கக் கடலாகும்.

முத்துவேலு கன்னத்தில் வழிந்த நீரைத்துடைக்கத் தோன்றாமல் சாலையைப் பார்த்தான். ஆஸ்பத்திரியில் நல்ல செய்தி காத்திருக்கும் என்று அவனுக்குத் தோன்ற வில்லை. பெரிய இடிதான் தலையில் விழப் போகிறது. அம்மாவும், தங்கைகளும் சிவந்த கண்களும், நிறைந்த மூக்குகளுமாய்த்தான் அவனை எதிர் கொள்ளப் போகிறார்கள். பாலத்தின் இறக்கத்தில் ஒரு பல்லவன் படு வேகமாய் இறங்கிக் கொண்டிருந்தது. 'தெய்வமே. அந்த பஸ்ஸை அப்படியே இந்த ஆட்டோவின் மீது மோத விடு. வலி தெரி யாமல் போய்விடுகிறேன். சோகம் புரியாமல் செத்துவிடுகிறேன்....'

தெய்வம் அவன் வேண்டுகோளுக்கு செவி சாய்க்கவில்லை. பல்லவன் பஸ் படு வேகமாகக் கடந்து அதன் வழியில் மிக ஜாக் கிரதையாகப் போய்விட்டது.

கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. உயிர் பிழைத்து இருந்ததில் கொஞ்சம் சந்தோஷ மாக இருந்தது. நிறைய திகிலாக இருந்தது. இருபத்திரண்டு வயது தடிமாடு. இதற்குள் ஒரு நல்ல வேலை சம்பாதித்துக் கொண் டிருக்க வேண்டாமா? அதற்காவது அந்த



''சார் நாளைக்கு லீவு வேணும்.''

''எதுக்கு?''

''நாளைக்கு ஈட்டிக்காரனை வரச் சொல்லிட்டேன்...''

— ஜி. வாசுதேவன்.

நாளில் நன்றாகப் படித்திருக்க வேண்டாமா? படிக்க வேண்டிய நேரத்தில் துட்டு வைத்து கோலி, டப்—டிப், மங்காத்தா, வாத்தியார் படம்... பொறம் போக்குப் பன்னாடை. இன்றைக்கு, இந்த வினாடி வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? நல்ல வேலை வைத் துக் கொண்டு எவனாவது காத்திருப்பானா என்ன? 'முத்துவேலு, முத்துவேலு... குப் பைக் காயிதம் பொறுக்கற கோணியைக் கடா சிட்டு வந்துடு, நான் தரேன் ஒனக்கு வேலை' என்று சொல்லுவானா என்ன? கை நிறையச் சம்பளம் வருகிற ஒரு நல்ல வேலை மட்டும் இருந்திருந்தால், அப்பா இப்படி பாதாள சாக்கடையில் இறங்கி முக்குளித்து அடைப்பு எடுக்கிற தொழிலில் அவதிப் பட்டிருக்க வேண்டியதில்லையே!

முத்துவேலு தலையில் அறைந்து கொண் டான்.

''எம்ப்பா... அந்தாளைக் கொஞ்சம் புடிச் சிக்கப்பா... ஆட்டோலேர்ந்து குதிச்சிட, கிதிச்சிடப் போறான்'' என்றான் ஆட்டோ டிரைவர், பின்னால் திரும்பிப் பார்த்து.

''இன்னாடா... மூத்து... ரோதனையா இருக்குடா.... சொன்னாக்கேளு... நீ கெடந்து அல்லாட்னா எல்லாம் சரியாப் பூடுமா?''

முத்துவேலு டெல்லிபாபுவின் தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.

'யப்பா....'

'........'

'யப்போவ்.'

'இன்னாடா?'

'இந்தத் தொழிலு வேணாம்பா. நேத்திக் கூட சிந்தாரிப்பேட்டையில ஒருத்தன் உள்ள எறங்கி மண்டையைப் போட்டான்னு சொல்லலை....?'

'அதுக்கின்னா இப்போ?'

'வேற தொழிலு தேடிக்கயேன்.'

'அக்காங். பெரிய கவுனர் ஊட்டுப் புள்ள. மாசமானா ஆயிர ரூவ கொணாந்து நீட்டி, 'கறிக்கொயம்பு வைம்மே'ன்னு உங்கம்

இப்படியும் ஓர் அதிசயம்!



திருவனந்தபுரத்தில் சப் இன்ஸ்பெக்டர் தேர்வுக்கான இண்டர்வியூ. அதில் ராஜ கோபாலன் நாயர் என்பவரும் வந்து கலந்து கொண்டார். இண்டர்வியூ முடிந்து வெளியே வந்த போது அவரைப் போலீசார் வந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்! அதைக் கண்ட அதிகாரிகள் திடுக்கிட்டு விசாரிக்க, ராஜகோபாலன் நாயர் ஒரு கொலைக் கைதி எனத் தெரிய வந்தது.

இண்டர்வியூவிற்கும் பரீட்சைகள் எழுதுவதற்கும் போலீஸ் காவலில் கைதிகளை அழைத்துப் போவதுண்டு எனச் சிறை அதிகாரிகள் கூறுகிறார்கள். இருந்தாலும் ஒரு சப்—இன்ஸ்பெக்டர் வேலை இண்டர்வியூவிற்கு ஜெயிலில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ஒரு கைதி வருவதும் அவரைக் கைதி எனத் தெரியாமல் பெரிய அதிகாரிகள் இண்டர்வியூ செய்வதும் இதுவே முதல் தடவையாகும்!

— எஸ். எஸ். மணி.

மானை அதட்றே பாரு... அந்த ஜோரு... ஏண்டா... ஆட்டு மூளையாக்கீது ஒனக்கு... இல்ல கேக்கறேன்... ரெண்டு தங்கச்சிங்க வயசுக்கு வந்தே அஞ்சாறு வருசம் ஆவப் போவுது. கட்டிக் கொடுக்கறதுக்கு ஒரு ரெண்டு பவுனு, மூணுபவுனு போட்டாத்தானடா அந்தஸ்தா இருக்கும். நம்ம மான, மருவாதி தாராந்து போவாம இருக்கும்? என்னைப் போயி சாக்கட்ல இறங்காதே. எறங்காதேன்னு சொன்னா... இன்னா அர்த்தம்? இன்னா கைமேல வேற வேலையா வெச்சினுகிறேன், இந்த வேலை வேணாங்கறதுக்கு..... இதுல வர்ரதே பத்துமா, பத்தாதான்னுருக்குது. இவ்ளோ தூரம் ஒங்கொப்பன் மேல அக்கறை கீறவன் ஒரு நல்ல உத்யோகம் தேடிக்கோ. அப்பால பேசு. குப்பை பொறுக்கப் போவாத. இவரு உத்யோகம் பெரிய கவுருமெண்ட்டு உத்யோகம். நம்பளை சொல்ல வந்துட்டாரு.... நால்ணாவும், எட்ணாவும் கொணாந்து குடுத்துட்டு.... மெக்கானிக்கு வரச் சொன்னானாமே... போய்ப்பாத்தியா?'

'ம்.'

''இன்னா சொன்னான்?''

'வேற ஆளைப் போட்டானாம்.'

'அதான் பாத்தேன். போடா... எதிர்ல நிக்காதே... சம்பாரிச்சிக்னு வந்து எங்கைல சொல்லு உத்யோகத்துக்குப் போவாதேன்னு. ரைட்டுன்னு மூலைல குந்திக்கினு துன்றேன்...! இப்பப் பேசின எனக்குக் கெட்ட கோவம் வரும்.'

ஆட்டோ ஜி. எச். காம்பவுண்டில் நுழைவதற்கு முன்னால் முத்துவேலு குதித்து இறங்கினான்.

''யப்பா... யப்பா'' என்று கதறிக் கொண்டு புலியால் துரத்தப்படும் காட்டு மான் போல ஓடினான். டெல்லிபாபு அவன் பின்னாலேயே தொடர்ந்தான். ஜி. எச். எத்தனையோ உணர்ச்சி நெருப்புகளைக் கண்டிருந்ததால் முத்துவேலுவின் குமுறலை அலட்சியப் படுத்திவிட்டு, அதன் வேலைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது. ஃபினாயில் நீர்த் துடைப்பு, ட்ராலியில் ரொட்டியும் பாலும், சக்கர நாற்காலியின் உருளல். முத்துவேலு முட்டியும், முட்டாமலும் போய்ச் சேர்ந்தபோது.....

''முத்து... முத்து... போட்டாண்டா... அந்த மனுஷன் நம்ம தலையில கல்லைத் தூக்கிப் போட்டுப் போய்ட்டாண்டா...''

'டண் டணக்கு, டண் டணக்கு' என்று மேளம் கொட்ட, பூப்பல்லக்கில் உட்கார்ந்திருந்த அப்பாவின் சடலம் தன் கடைசி பயணத்தைத் தொடங்கியது.

அம்மா சேற்றுத் தரையில் மயங்கி வீழ்ந்தாள். கல்யாணமாகாத கன்னித் தங்கைகள் மார்பில் அறைந்து கொண்டு தங்கள் துக்கத்தை இறைத்தார்கள்.

முத்துவேலு பல்லக்கிற்கு முன்னால் நடந்தான்.

''டேய்.... யாராண்டடா டப்பாசு... கொளுத்துங்களேண்டா...''


''ஆடுங்கடா... ஆடுங்கடா... போற மன்சன் சந்தோசமாப் போவட்டும். கருமாதிக்குக் கறிசோறு போடச் சொல்றேன்... ஆடுங்கடா.''

''ஐய.... முத்து, இதான உங்கூட. சும்மா இப்படியே குந்திக்கினுருந்தா ஒங்கொப்பன் எழுந்து வந்துடவாப் போவுது! இந்தா இந்த பன்னை சாப்ட்டு, மகுடி ராஜா....

''எனக்கு வோணாத்தை.''

''யப்பா... நீதான் ஒங்கம்மாளுக்கு, தங்கச்சிங்களுக்கு எல்லாம் சம்பாரிச்சிக் கொணாந்து குடுக்கனும்... இப்படி மரமாட்டம் சாய்ஞ்சி குந்திக்கினுருந்தா பொயப்பு என்னா ஆவுறது? ஐய.... வயசுக்கு வந்ததுங்களைக் கட்டிக்குடுத்துக் கன்னி கழிக்கத்தாவலை... அதுங்களைப் பாரு. சரியா சாப்புடாம நெத்திலி மீனுங்க

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



ஒரு போஸ்ட் கார்டு உங்களது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாங்கள் சொன்னால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அது தான்!.

★ ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி சரளமாகப் பேச...

★ இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற...

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

மேலும் தகவல் அறிய ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதி எங்களுக்கு அனுப்பினால் போதும்!

பயிற்சி பற்றிய தகவல் புத்தகத்தையும், விண்ணப்ப மனுவையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி இன்றே துவங்கட்டும்!

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986, 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-17.

மாதிரி ஆயிடிச்சிங்க பாரு... வஞ்சிரம் கணக்கா இருந்ததுங்க...! டில்லி... சொல் வேண்டா....''

''முத்து....''

''.......''

''முத்து டேய்.''

''இன்னா?''

''எழுந்துரு... சொல்றேன். வள்ளியை கஜபதிலூட்ல கேட்டுக்கினுதானே இருக்கறாங்க. சட்டு புட்டுன்னு அத்தை முடிச்சிப் போடு. அதான் உங்கொப்பன் போனதுக்குப் பத்தாயிரம் வந்துருக்குதே. அந்தத் துட்டை வெச்சி வேலையை முடி.... இப்ப பன்னு சாப்ட்டு வேலைக்குப் போ.''

''......''

''ஏய்... நான் பாட்டுக்குச் சொல்லிக்கினே இருக்கேன். நீ சிக்குக் கோழி மாதிரி தலையைத் தொங்கப் போட்டுக்கினு இருந்தா இன்னா அர்த்தம்? ஒன்னை இன்னா காயிதம் பொறுக்கற வேலைக்காப் போவச் சொல்றாங்க. உங்கப்பன் பூட்டான். அதால கண்டி ஒனக்கு உங்கப்பன் உத்யோகம் வந்திருக்கிறது. போடா. எல்லாம் சேத்து சம்பளம் கிட்டக்கிட்ட ஆயிரம் பக்கமா வரும். இன்னொரு தங்கச்சி இருக்குதுல்ல? எழுந்துருப்பா... பன்னு புடிக்கலைன்னா சொல்லு. நாயர் கடைக்குப் போலாம். ஆப்பம் பாயா அடிச்சிட்டுப் போலாம்...''

''ஏன் டில்லி?''

''இன்னாடா?''

''நான் செத்தாக்கூட பத்தாயிரம் கெடைக்குமல்லவா?''

''வேலைக்குப் போவச் சொல்லயே பேசற பேச்சடா இது. ஏண்டா கஸ்மாலம்? ஊர்ல எத்தினி பேர் சாக்கட்ல எறங்கறான். அத்தினி பேருமா பூட்றான்? நீ இருப்படா. ஒனக்கு ஒண்ணியும் ஆவாது. தங்கச்சிங்களைக் கட்டிக் குடுத்து, நீ கட்டிக்கினு, உங்கம்மாளுக்கு பிரியாணி வாங்கித் தரல்லாம். நீ போ மாட்டேடா...! பாரேன்... கொஞ்ச நாள்ல வேற நல்ல வேலை கட்ச்சா பூடலாம்... இன்னா சொல்றே?''

''இல்ல கேக்கறேன்.... நான் செத்தா இன்னொரு பத்தாயிரம் கெடைக்குமாடா?''

''கெடைக்குண்டா. கெடைக்கும். பெரிய பேஜாருப்பா இவங்கூட! பீடி வலிக்கிறியா?''

''இப்ப ஒணாம். நாயர் கடைக்குப் போய்ட்டு வந்து தம்மடிச்சிக்கலாம்.''

அப்பா செத்த இருபதாம் நாள், முத்துவேலு, பெரியபாளையத்தாளை வேண்டிக் கொண்டு, திறந்திருந்த பாதாள சாக்கடையில், ஒரே ஒரு ஜட்டி மட்டும் அணிந்து கொண்டு இறங்கினான்.




அருள்வாக்கு

"பத்யம்'' என்றால் ஒரு வழியில் போகப் பண்ணுவது. பாதை path என்பதெல்லாம் 'பத்' யிலிருந்து வந்ததுதான். ஆரோக்கியப் பாதையில் செலுத்துவதற்காக ஏற்பட்டதே பத்தியம். மருந்து சாப்பிட்டால் மட்டும் போதாது. உடம்பு ஸரியாவதற்கு இன்ன ஆஹாரங்களை நீக்கி விட்டு இன்ன மட்டுமே இன்ன அளவில் சாப்பிட வேண்டுமென்பது முக்கியம். இதுதான் பத்தியமாயிருப்பது. இந்தப் பத்தியங்களில் ஒன்றாக ஸகல ஜனங்களுமே பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை உபவாஸம் இருக்கவேண்டுமென்று வைத்திருக்கிறது. ஸகல ஜனங்களுமே அவ்வப்போது ஒருவேளை லங்கனம் போடுவது நல்லது. பக்ஷத்துக்கு ஒரு நாள் பூராவும் பட்டினியிருப்பது விசேஷம் என்று வைத்திய சாஸ்திரம் கருதுகிறது. இதையே ஏகாதசி என்று வ்ரதாநுஷ்டானமாகவும் பெற்றிருக்கிறோம். தர்ம சாஸ்திரமும், நம் பூர்வீக வைத்திய சாஸ்திரமும் கைகோத்துக் கொண்டு போகின்றன என்பதற்கு இதுவும் உதாரணம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கவிதைக்குள் ஒரு கவிதை:

வெடித்தது இரவி; பிறந்தது பூமி!



பட்டங்களும், அரசின் விருதுகளும் பல பெற்றிருந்தாலும் 'நல்ல மனிதர்' என்ற அடையாளம்தான் கவிஞர் புத்தனேரியை வெகுவாய் உயர்த்திக்காட்டுவது. முப்பத்தைந்து ஆண்டுகள் அரசுப் பணியில் இருந்து, உயர் அதிகாரியாகப் பாசனத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற போது,

'கையிலே கறைபடாமல்
கருத்திலே குறைபடாமல்...''

நிறை மனத்தில் பொங்கும் வீறுடன் ஓய்வு கொண்டதாக, அவர் நண்பர்களுக்குத் தந்த விடைபெறு கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

'இனி கவிப் பணியில் மேலும் சுறு சுறுப்பாவேன்' என்று உறுதியெடுத்த அவர், பன்னிரண்டு ஆண்டுகள் அந்தக் கவிப் பணியைத் தொடர்ந்து பின்னர் அமைதியானார்.



இசை நாடகங்களைப் படைத்தளித்ததில் புத்தனேரி, நாட்டிய நாடகங்கள் பல அரங்கேற உதவியிருக்கிறார். அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாடகவடிவம் பெற்றதும் நாட்டிய நாடகமானதும் புத்தனேரியின் கைவண்ணத்தால்தான்.

எந்தப் பொருளையும் புத்தனேரி பார்க்கும் கோணம் முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கும்.

அறிவியலில், பிரபஞ்சம் தோன்றியதற்கான தத்துவங்களுள் ஒன்றாகப் 'பெரும் வெடிப்பு' (Big Bang) என்று குறிப்பிடுவார்கள். இதை ஒரு தமிழ்க் கவிதையில் தருகிறார் புத்தனேரி.

''எண்ணிலாக் கோடிப் பேரொளி கூடி
'இரவி' எனும் பெயர் சூடி,
விண்ணெலாம் நடுங்க ஆணவ வெறியால்
விம்மினான் விங்கினான் வெய்யோன்!
தண்ணளி மறந்தான்! தணல் வெறி வடிவம்
தருக்கினால் வெடித்திடக் கண்டான்.
விண்வெளி நீங்கி வெங்கதிர்த் துண்டு
விழுந்ததும் பிறந்தது பூமி!''

அழகைப் பாடுவதும் கவிதைதான். இப்படி அறிவியலை அழகுறப் பாடுவதும் கவிதைதான். ஆணவ வெறியால் விம்மி வெடித்தான் கதிரவன். அதில் ஒரு துண்டு பூமியாய்ப் பிறப்பெடுத்தது என்பது எவ்வளவு சிறப்பான கவி நயம் பாருங்கள்!

— சுப்ரபாலன்.

ராமராஜனுக்கு

மந்திரி பதவி கிடைக்குமா?



* மந்திரி பதவி?

* வி. ரேவதி, சீர்காழி.

? டி. ராஜேந்தர் வீட்டு மாடிகள் இடிக்கப் பட்டதற்கு அரசியல் பின்னணிதானே காரணம்?

! அனுமதி பெறாமல் சட்டத்துக்கு விரோதமாகக் கட்டப்படுகிற வீட்டு மாடிகள் இடிக்கப்படாமல் விடப்பட்டால், அதற்கும் அரசியல் பின்னணிதானே காரணமாக இருக்க முடியும்!

* எம். கே. சக்திவேல், சேலம்.

? காவேரிப் பிரச்னையை நடுவர் மன்றத்திடம் ஒப்படைப்பதால் தமிழக அரசுக்குச் சாதகமான முடிவு வருமா?

! சாதகமோ இல்லையோ, முடிவு வரும் என்பது நிச்சயம்! இப்போது உள்ள நிலைமையை விடப் பாதகமாக இராது என்றும் நம்பலாம்!

* ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'என் வீட்டை இடித்து சிமெண்ட்டைத் தகர்த்து விடலாம்; ஆனால் எனது சித்தாந்தத்தைத் தகர்த்துவிட முடியாது' என்று டி. ராஜேந்தர் தாடியை உருவுகிறாரே?

! சிமெண்ட் கட்டடத்துக்கு எம். எம். டி. ஏ. அனுமதி வேண்டும். அரசியல் சித்தாந்தத்துக்கு மக்களின் ஆதரவு வேண்டும்.

* சி. இளஞ்செழியன், பெரியார் மின் திட்டம்.

? பி. எச். பாண்டியன் தனிப்பட்ட முறையில் செயல்படுகிறாரே, இது ஜனநாயகத்துக்கு ஆதரவானதா? எதிரானதா?

! தேர்தலில் சுயேச்சையாக நின்று வென்று வருகிறவர்கள் இல்லையா என்ன? பாண்டியன் தனித்துச் செயல்படுவதில் ஒரு தவறும் இல்லை. ஜனநாயகத்துக்கு ஆதரவானதா எதிரானதா என்பது அவர் செயல்படும் விதத்தைப் பொருத்தது.

* என். சுப்பிரமணியம், சென்னை. *

? புத்தி(Intellect) சிந்திக்கிறதா? அல்லது மனம் (Mind) சிந்திக்கிறதா?

! புத்தி சரியானபடி சிந்திக்கிறது; மனம் அதைத் தப்பான பாதையில் திருப்புகிறது. குங்குமத்தில் கலைஞர் 'கல்கி'யைக் குறை கூறி எழுதியிருப்பதைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது!

* பி. நடராஜன், அன்னூர்.

? அ. இ. மு. க. வுக்காக இப்படி உழைக்கிறாரே, ராமராஜன், அவருக்கு மந்திரி பதவி கிடைக்குமா?

! தன்னைப் பெண் பார்க்க வந்த வரனுக்குக் காப்பி எடுத்து வர சமையலறைக்குள் நுழைந்தவள், அங்கேயே அமர்ந்து விம்மிக் கொண்டிருந்தாளாம். நேரமாகவே, அம்மாக்காரி போய்ப் பார்த்துத் திடுக்கிட்டு, 'என்ன' வென்று விசாரிக்கப் பெண் சொன்னாள்: 'இவருக்கும் எனக்கும் கல்யாணமாகி, எங்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்து, நாங்கள் மூவரும் இந்த வீட்டுக்கு ஒரு முறை வரும்போது, என் மூன்று வயது மகன் பாட்டியாகிய உன்னைத் தேடிக் கொண்டு இந்தச் சமையலறைக்குள் நுழைய, அப்போது பரணில் பெருச்சாளி ஓட, அது காரணமாய் ஒரு செம்பு கவிழ, அது என் மகன் தலையில் விழ, அவன் உடனே இறந்து விட்டால் என்ன செய்வது?' இப்படி கேட்டு விட்டுத் தொடர்ந்து அழுதாளாம்! ராமராஜனுக்கு மந்திரி பதவி ஒருவேளை கிடைத்து விடுமோ என்று இப்போதே கவலைப்பட்டு என்னை அழச் சொல்கிறீரா?


* பணியரசன் மேதாவி, பூங்குளம்.

? 'தமிழ்ப் புத்தாண்டு தை மாதம் முதல் தொடங்க வேண்டும்' என்ற வீரமணியின் கோரிக்கை குறித்து...?

! அப்பாடா! போராட்டத்துக்கு அதி



* முற்றிலும் தவறு!



* அரசியல் இடி!

முக்கியமான அடுத்த பிரச்னை கிடைத்து விட்டது!

* ஏ. ஜஹ்பர் காதர், சென்னை.

? சேர்ந்து விட்ட கல்யாணப் பத்திரிகைகளைக் கிழித்துப் போட மனமில்லை. என்ன செய்வது?

! சேர்த்து வையுங்கள். யார் கண்டது. கின்னஸ் புத்தகத்தில் இல்லா விட்டால், லிம்கா புத்தகத்திலாவது இடம் கிடைக்கலாம்!


* வி. வேங்கடராமன், சீர்காழி.

? இந்தியா அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்ற அத்வானியின் கருத்து சரிதானா?

! முற்றிலும் தவறு.

* இரா. இலட்சுமி மணிதேவி, குருசாமி பாளையம்.

? உங்களுக்குப் பிடித்த கேரக்டர் புருஷோத்தமனா, அல்லது பவானியா?



* தனித்துச் செயல்பட்டு...



* அடுத்த பிரச்னை...

! அர்த்தமுள்ளதாக கிளைமாக்ஸ் அமைத்த கே. பி.

* ஜி. ராஜப்ரியா, வலங்கைமான்.

? திடீரென்று தி. மு. க. வை ஏன் தாக்க ஆரம்பித்து விட்டீர்கள்?

! காங்கிரஸுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காக தி.மு.க.வை ஆதரித்தார் ராஜாஜி. தி.மு.க. பதவிக்கு வந்து தவறுகள் செய்ய ஆரம்பித்ததும் **The honey moon is over** என்று கூறித் தாக்கத் தொடங்கினார். தவறுகளைச் சுட்டிக் காட்டுவதும் நல்லனவற்றைப் பாராட்டுவதுமே நட்பு. அதுதான் பத்திரிகை தர்மம். மே, முதல் இதழில் ஸ்டாலினைப் பாராட்டிய தலையங்கம் உங்கள் கண்களில் படவில்லையா?

* மஞ்சுதேவன், கல்கத்தா.

? நியூஸிலாந்தைத் தொடர்ந்து ஷார்ஜாவிலும் தோல்வி, இங்கிலாந்தில் எப்படியோ?

! ஸ்ரீகாந்தைக் கழற்றி விட்டு, ரவி சாஸ்திரியைத் துணைக் காப்டனாக்கி, வெங்சர்க்கார், ஹிர்வானி ஆகியோரைத் திரும்ப அழைத்து விட்டால் எல்லாம் சரியாகப் போய் விடும் என்று தேர்வுக் குழு எண்ணுகிறது. தொண்ணூறாம் ஆண்டுகளின் உமைத் தொண்ணூறு முறை மாற்றி அமைத்து விடுவார்கள் போலிருக்கிறது! தோல்விக்கு ஒரு முக்கிய காரணமே, விளையாட்டு வீரர்களிடம் இதனால் ஏற்படும் ஒரு நிச்சயமற்ற நிலைமையும் அதன் விளைவான சோர்வு மனப்பான்மையும்தான் என்பதைப் புரிந்து கொண்டால் நல்லது.



* அர்த்தமுள்ள கிளைமாக்ஸ்!

* எம். உஷாராணி, போடிநாயக்கனூர்.

? சமீபத்தில் படித்த 'பளிச்'' வரிகள் ஏதாவது?

! பஞ்சாப் — ஹரியானா உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் ராமசுவாமி, (இன்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி) அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கு அதிகமாக இரு ஆண்டுகளில் 37 லட்சம் ரூபாய் மக்களின் வரிப்பணத்தை ஆடம்பரங்களுக்குச் செலவிட்டிருக்கிறார் என்று சண்டிகர் நிர்வாகத்தின் கணக்குத் தணிக்கை அறிக்கை கூறுகிறது. இது குறித்து வருத்தப்பட்டுத் தலையங்கம் எழுதும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எச்சரிக்கிறது: ''ஜனநாயகத்தின் பல்வேறு பிரிவுகளும் பல்வேறு நிர்பந்தங்களால்வாடி வதங்கிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், நீதித் துறை ஒன்று மட்டுமே பொது மக்களின் கடைசி நம்பிக்கையாக இருந்து வருகிறது. எனவே, அங்கேயும் அதிகார துஷ்பிரயோகமும் சுயநலமும் புகுந்து செல்லரிப்பதை மக்களால் சகித்துக் கொள்ள முடியாது!''

* **ரூ. 20 பரிசு பெறுபவர்:**

என். சுப்பிரமணியன்,
82, திருவள்ளுவர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை — 59.

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி.

வெட்டுக்கிளி போல் துள்ள...!

6

'நாம் என்ன வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் சாப்பிடலாம். ஆசனம் செய்து வருவதினால் எல்லாம் சரியாய்ப் போய் விடும்' என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படும். இது தவறு. எதிலுமே ஒரு கட்டுப்பாடு அவ சியம். இது ஆசனம் பழகுகிறவர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் பொருந்தும். ஆசனம் செய்பவர்கள் நிச்சயமாகக் கடைப் பிடிக்க வேண்டும்.

மிதமாகச் சாப்பிட வேண்டும். இன்னும் கொஞ்சம் வயிற்றில் இடமிருக்கிறது என்று தோன்றும் போது நிறுத்திவிட மனோதிடம் வேண்டும். சாப்பிடும் போது நன்றாக மென்று, சுவைத்துச் சாப்பிட வேண்டும். அப்படி மென்று சாப்பிட்டால், உணவு, உமிழ்நீருடன் கலந்து, நல்ல ஜீரண சக்தி உண்டாகும். பற்களும் தாடைகளும் பலம் பெறும். அவசரம் அவசரமாக விழுங்கக் கூடாது.

காரத்தைக் குறைக்க வேண்டும். 'அதை அடியோடு விட்டுவிட வேண்டும்' என்றால், 'ஆசனத்தை விட்டுவிடுகிறேனே' என்பார் கள். நமது சாப்பாட்டில் மிளகாய் அவ்வளவு முக்கியமாய்ப் போய்விட்டது! ஆகவே அதை விட வேண்டாம். படிப்படியாகக் குறைத்து வரவும். அதே போல் புளி உப்பு —இவற்றையும் குறைக்கவும். இதற்கெல்லாம் மனோதிடம் வேண்டும். அந்த மனோ திடத்தை ஆசனம் அளிக்கும்; தியானம் வழங்கும்.

காரம் அதிகரிப்பதால் மூலம், பௌத்தி ரம், வயிற்றுக் கடுப்பு, எரிச்சல், உஷ்ணம், மூத்திரக் கடுப்பு முதலிய கோளாறுகள் உண்டாகின்றன. 'மிளகாயில் வைட்டமின் சத்து உண்டு' என்று வாதம் புரிவோர் இருக் கிறார்கள்! அதைக் கைக்குத்தல் அரிசி, கீரை, மற்றும் 'காய்கறிகள், பழங்கள் மூலம் பெறுவது சிலாக்கியமே தவிர, மிளகாயை ஒரு கை பார்ப்பதால் விபரீத விளைவுகளே ஏற்படும். காரம் பட்டதும் நரம்புகள் துடிக் கின்றன. ரஸங்களை அதிகமாக ஊறச் செய் கின்றன. சாப்பிட்ட ஆகாரம் அதனால் சீக் கிரம் ஜீரணமாகிவிட, சீக்கிரம் பசியெடுக் கிறது. இப்படியே மிதமிஞ்சி ஜீரணக் கருவி கள் செயல்பட, நாளடைவில் அவை ரசம் பெருக்கச் சக்தியற்று நோய் உண்டாகிறது.

யோகிகள் தொண்ணூறு வயதும் அதற்கு அதிகமாகவும்கூட உயிர் வாழ்கிறார் கள். நாம் அத்தனை நாள் வாழ வேண்டாம். ஆனால் இருக்கும்வரை ஆரோக்கியமாக வாழ்ந்தால் போதாதா? டாக்டருக்கும் மருந் துக்கும் டானிக்குக்கும் செலவு செய்யாமல் மகிழ்ச்சி நிரம்பியதாய் நம் வாழ்க்கை அமைய வேண்டாமா? இதற்குத்தான் யோகா சனங்கள் உதவுகின்றன. சோம்பேறித்தனத் துக்கு இடம் தராமல் கொஞ்சம் முயற்சி எடுத்தால் போதும். ஆரோக்கியம் உங்களுக் குக் கைகட்டி வேலை செய்யும். நோய் நொடிகள் உங்கள் வீட்டுக்குள் புக அஞ்சி வீதியோடு போய்விடும். அதுமட்டுமல்ல, தாயும் தகப்பனும் ஆசனங்களைச் செய்து வந்தார்களானால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், உடல் வளர்ச்சியிலும், ஆரோக் கியத்திலும், அறிவாற்றலிலும் பெற்றோரை விடச் சிறந்து விளங்குவார்கள்! பெற்றோ ருக்கு இதைவிட ஆனந்தமளிக்கும் விஷயம் வேறு ஏது?



ஒழுங்காக ஆசனம் செய்து வருகிறவர் களின் உடல் அளவுக்கு மீறிப் பருக்காது;

வத்தல் தொத்தலாக மெலிந்தும் போகாது. அளவான உடல் அமைப்பில் தேஜஸான முகத்துடன் விளங்குவார்கள்.

இனி சலபாசனம் பற்றிச் சொல்கிறேன். வெட்டுக்கிளியைப் பார்த்திருப்பீர்கள். அது எவ்வளவு வேகமாகத் தத்திப் போகிறது! கட்டவிழ்த்து விட்ட ஸ்பிரிங் போல அதிவேகமாகப் பாய்கிறது! அப்படி நாமும் சக்தி பெற வேண்டுமானால் வெட்டுக்கிளித் தோற்றத்தில் அமைந்த சலபாசனத்தை நாம் செய்ய வேண்டும். ஆம், சலபாசனம் வெட்டுக்கிளியைப் போன்ற தோற்றமுடையது.

சிலருக்கு உடல் உழைப்புக் குறைவால் சாப்பிடும் ஆகாரத்தில் உள்ள கொழுப்புச் சத்து முதலில் வயிற்றில் இடம் தேடிக்கொள்ளும். பிறகு தொடை முதலிய இடங்களில் மூட்டையாகச் சேரும். இவைகளில் நல்ல ரத்த ஓட்டம் இருப்பது கஷ்டம். ஏன் தெரியுமா?


சாதாரணமான ஒரு வில் வண்டியை எடுத்துக்கொள்வோம். அதில் ஆறு அந்தர் வரை பாரம் ஏற்றலாம். அதற்கு மேற்பட்டு, இடம் இருக்கிறதே என்று ஏழு, எட்டு அந்தர் பாரத்தை ஏற்றினால் என்ன ஆகும்? சில நாட்களில் வில் வளைந்து, இருசு முறிந்து, வண்டி உபயோகமில்லாமல் போகும்.

அதைப் போல நம் இருதயமும் ஓர் அளவுச் சுமையைத்தான் தாங்கும். சுமை அதிகமானால் சிரமப்பட்டு வேலை செய்யும். சீக்கிரமே இருசு முறிவது போல், ஒரு நாள் 'படக்' கென்று வேலை நிறுத்தம் பண்ணி விடும்! வண்டிக்கு வில் வளைந்தால், வேறு வில் அடித்துப் போட்டு விடலாம். இருசு முறிந்தால், வேறு வாங்கிப் போடலாம். இருதயம் நின்றால் என்ன செய்வது?

ஆகையால், உடலைப் பருக்க விடக் கூடாது. உடல் பருக்கப் பருக்க அங்கேயெல்லாம் ரத்தத்தை அனுப்ப வேண்டிய கடமை கருதி இருதயம் கஷ்டப்பட்டு வேலை செய்கிறது. சீக்கிரமே பழுதுபட்டுப் போகிறது.

ஊளைச் சதையைக் கரைத்தால் அங்கேயெல்லாம் இயல்பான நல்ல ரத்த ஓட்டம் உண்டாகும். இருதயத்துக்குச் சுமை குறையும். அதன் சிரமம் நீங்கும். இயல்பான இயக்கத்துடன் நீண்ட நாட்கள் பழுதின்றிச் செயல்படும். இதற்குச் சலபாசனமும் இதர ஆசனங்களும் உதவும். மிதமான ஆனால் சத்துள்ள உணவுத் திட்டமும் துணை செய்யும்.

இன்னொரு விஞ்ஞான பூர்வமான அதிசய உண்மையையும் சொல்கிறேன். நம் உடல் உறுப்புக்களில் கை, கால், வாய் போன்றவற்றை நம் இஷ்டப்படி உபயோகிக்கலாம்; ஓய்வு தரலாம். ஆனால்,



இருதயம், நுரையீரல், வயிறு, குடல், பித்தப்பை போன்றவை நம் உத்தரவின்றித் தாமாகவே அதனதன் வேலைகளை ஒழுங்காகச் செய்து வருகின்றன! நாம் கையையும் காலையும் ஆட்டி அவற்றுக்குப் பயிற்சி தரலாம். ஆனால் உள்ளுறுப்புக்களுக்குப் பயிற்சி அளிப்பது யார்? அதற்கும் ஆண்டவன் வழி வகுத்திருக்கிறான்! நமது நெஞ்சுப் பகுதிக்கும் வயிற்றுப் பகுதிக்கும் இடையே ஒரு தோல் போன்ற ஜவ்வு இருக்கிறது. அதற்கு ''விதானம்'' என்று பெயர். அது தான், மேல் பகுதியான இருதயம், நுரையீரல் போன்றவற்றையும் கீழ்ப் பகுதியான வயிறு, குடல், பித்தப்பை போன்றவற்றையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. நாம் மூச்சு இழுக்கும் போது, நுரையீரல் விரிகிறது; விதானம் கீழே இறங்குகிறது. வயிற்று உறுப்புக்களை அமுக்குகிறது. அதனால் வயிறும் சற்றுப் பெருக்கிறது. மூச்சு விடும்போது இதற்கு நேர்மாறான காரியம் நடக்கிறது. இம்மாதிரி இயற்கையாகவே வயிற்று உறுப்புக்களுக்குப் பயிற்சி ஏற்பட்டிருக்கிறது!

ஆனால், சதா நாற்காலியில் உட்கார்ந்து, மேஜையில் வேலை செய்பவருக்கு இத்தகைய பயிற்சி போதிய அளவில் வயிற்று உறுப்புக்களுக்குக் கிடைக்காமல் போகிறது. வயிறு அமுங்கியே கிடக்கிறது. தொந்தியும் போடுகிறது. இதனால் மேலும் பயிற்சி குறைந்து, கொழுப்பு இன்னும் அதிகமாகச் சேருகிறது. இந்நிலையில் சலபாசனம் செய்து வந்தால் வயிற்று உறுப்புக்களுக்குக் கூடுதல் பயிற்சி கிடைக்கும். தொந்தி கரையும், இருதயத்துக்குச் சிரமம் குறையும். உடம்பு ஆரோக்கியத்துடன் இளமையாக இருக்கும். வெட்டுக்கிளி போல் பாயத் தோன்றும்!

இந்த வெட்டுக்கிளித் தோற்றம் கொண்ட சலபாசனம் செய்யும் விதம் பற்றி அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)


TEXACO
TEXACO
TEXACO
TEXACO

வட்டமேஜை

* அட்டையில் காஞ்சி பரமாச்சாரியாரின் திருஉருவப் படத்தையும் உள் அட்டையில் விஜேயந்திரருக்குப் பெரியவர் உபதேசிக்கும் காட்சியும் மிக அருமை. கல்கி இதழ் வாங்கிய உடன் அவற்றைச் சட்டம் போடச் செய்து விட்டேன்.

அரியலூர், வி. சுரேஷ்.

* வெறும் பிரச்னைகளையே சொல்லிக் கொண்டிராமல், அழகான தீர்வும் சொல்லியிருப்பதற்காக ஆர். கே. பத்மாவுக்கு நன்றி கலந்த பாராட்டுக்கள்.

ஆக்கூர், ஜி.கே. ராஜு.

* வாழ்கின்ற நாட்கள் பெரிதல்ல; வாழ்ந்த நாட்களில் நாம் என்ன சாதித்தோம் என்பதே பெரிது என்பதை உணர்த்தி விட்டார், முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்திருந்து சாதித்த ரவி மம்மன்.

சென்னை — 7, சிவகாமி நடராஜன்.

* 'கலைஞருக்கு எங்களைக் கலந்தாலோசிப்பது கசப்பாக இருக்கிறது!' என்ற பாப்பா உமாநாத்தின் பேட்டியைக் கலைஞர் நிச்சயம் படித்திருப்பார். படித்தபின்னராவது, இடது கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைக் கலந்தாலோசித்துச் செயல் படுவாரேயானால்... அவருக்குப் புகழும், எங்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படுத்துவதாய் இருக்கும்!


மதுரை — 1, பிரபாகர் ப்ரியன்.

* 'யாரோ ஒரு பெண்ணோடு ஸ்கூட்டரில்' சிறுகதை. இளைய தலைமுறையினர் பெரும்பாலும் அறிவு பூர்வமாகவே செயல் படுகிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம்.

சென்னை — 45, ஏ. ஜஹ்பர் காதர்.

* 'திறமைக்கு அணைபோடும் வறுமை' என்ற தலைப்பில் தமிழ்நாடு கால் பந்தாட்ட வீராங்கனை செல்வி லதாவின் பேட்டியைப் படித்தேன். கால் பந்து விளையாட்டில் சிறந்து விளங்கும் லதா போன்ற வீராங்கனைகளுக்குப் பணப் பிரச்னையால் தங்கள் திறமையை வெளியுலகத்திற்கு காட்ட (டென் மார்க் உலகக் கால் பந்து போட்டியில் கலந்து கொள்ள) முடியாத நிலை என்பது எத்தனை பெரிய சோகம்!

லால்குடி, எம். இராஜேந்திரன்.



தலையங்கப் புதிரின் விடை: மு.க.ஸ்டாலின்!

* இசைமேதை ராமானுஜ அய்யங்கார் பொடி போடும் படத்தைக் கல்கியில் பார்க்கும் போதே எனக்குத் தும்மல் வரும் போலிருந்தது. அவ்வளவு தத்ரூபமான புகைப்படம். அதுதான் நாகராஜராவின் கேமரா!

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

* ''ஹவாயின் தலைநகரான ஹானலூலுவைப் பற்றிய செய்திகளைத் தொகுத்தளித்த ராமாமணி கந்தருக்கு எங்களின் 'மஹாலோ!'

வேலூர் — 1, சி. சந்திரசேகரன்.

* குப்பைத் தொட்டியிலிருந்த குழந்தையை வளர்த்து வரும் சுந்தய்யன் தம்பதிகளை எத்தனை பாராட்டினாலும் தகும். அதே சமயத்தில் அக்குழந்தையைக் குப்பைத் தொட்டியில் போட்ட தாயை ஒரு பெண்ணாகவே மதிக்க முடியவில்லை.

சென்னை — 33, வி. எஸ். வாசன்.

* 'கவிதைக்குள் ஒரு கவிதை' பகுதியில் தேரை நிறுத்தி மணிகளைக் கட்டியது ஏன்?' என்ற கேள்விக்கு. 'பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து தலைவன் வெளியூர் செல்கிறான். பிரிவின் துன்பம் அவனுக்குத்தான் தெரியும். அதனால்தான், காதலியைப் பார்க்கும் ஆவலோடு விரைந்து வருகையில், வண்டுகள் அவற்றின் துணை வண்டுகளுடன் உல்லாசமாகத் தேனை அருந்துவதைப் பார்க்கிறான். எங்கே தன் மணியோசையால் அவை அஞ்சி வேறு வேறு திசைகளில் பறந்து பிரிந்து விடுமோ, அதனால் அதற்கும் பிரிவுத் துன்பம் ஏற்பட்டு விடுமோ என எண்ணியதால்தான் மணியின் நாக்கைக் கட்டினான்' என்பதே சரியான விளக்கமாக இருக்கும்.

சேலம் — 1, பாரதிபிரியை.

* சென்னையின் குறைகளை எடுத்துக்காட்டி நிவர்த்திக்க வழிகளையும் கூறிய எம். எல். ஏ.வைப் பாராட்டினீர்கள். சரி! நாமும் பாராட்டலாம். ஆனால் அந்த எம். எல். ஏ. யார் என்று கூறாமல் விட்டுவிட்டீர்களே...?

சென்னை — 82, எஸ். லோகலிங்கம்.

* தலையங்கத்தின் இறுதிப் பகுதியிலாவது அந்த எம். எல். ஏ. மு. க. ஸ்டாலின் எனக் கூறியிருந்தால் தலையங்கத்தை முழு மனத்தோடு பாராட்டியிருக்கலாம். ஆனால், ''யார் அந்த எம். எல். ஏ?'' என்று கேட்டுத் தலையங்கத்தைப் புதிராக மாற்றி விட்டீர்களே! பெயரை மறைத்தது நியாயமா?

திருநெல்வேலி — 2, பாளை. உதயம்.

* ஸ்ரீ பரமாச்சார்யாள் பற்றிய கட்டுரையில் கீரை சம்பவம் நான் அறிந்தவரை சற்று வித்தியாசமானது. மூன்று நாட்கள் தொடர்ந்தாற் போல பிக்ஷையை நிறுத்திய பெரியவாளை உடனிருந்தவர்கள் கேட்டதற்கு அவர் கூறினார்: ''முதல் நாள் நீ கீரை போட்டாய். நான் 'கீரையா?' என்றேன். மறு நாளும் கீரை சேர்த்தாய். நான், 'இன்றும் கீரையா?' என்று கேட்டேன். மூன்றாம் நாளும் எனக்குக் கீரை பிடிக்கிறது என்று நினைத்துக் கீரை போட்டாய். நீயும் வெளியில் யாரிடமாவது கூறுவாய். பக்தர்களும் எங்கிருந்தாவது கீரை கொண்டு வந்து தருவார்கள். 'சங்கராச்சாரியாருக்குக் கீரை இல்லாமல் சாப்பாடு பிடிக்காதா?' என்று வேறு திருசானவர்கள் பேசக் கூடும். சங்கராச்சாரியார் பேரை வைத்துக் கொண்டு இருக்கிறேனே, அதற்கு அபக்யாதி வரக்கூடாது என்றுதான் மூன்று நாட்கள் உபவாசம்.''

சென்னை — 94, ஆர். நடராஜன்.

* தங்களது கட்டுரையின் பயனாக, கெல்லிஸ் குழந்தைகள் காப்பகத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருமாறு ஒப்புதல் கடிதம் வந்துள்ளது. எங்களால் இயன்ற உதவியைச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். எங்கள் பெயரை, ''லயன்ஸ் கிளப் ஆப் பாரதி தெனாம் நகர்'' என்று திருத்தி வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை.

என். ஹரிஹரசுப்பிரமணியன்.



சொன்னது சொன்னபடி.....

●● தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு திராவிட மொழிகளையும் வளர்ப்பதில் தி. மு. க. அதிகமான அக்கறை காண்பித்து வந்திருக்கிறது.

— முதல்வர் கலைஞர்.

●● கலாசாரத் துறையைக் கவனிப்பதற்கு, மூன்று அமைச்சகங்கள் மத்தியில் இயங்கி வருகின்றன. மனித வள மேம்பாட்டு அமைச்சகம், செய்தி—ஒலி—ஒளிபரப்பு அமைச்சகம், வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய கலாசாரத் தொடர்பு கவுன்சில். ஆனால் இந்த மூன்றுமே ஒன்றுக்கு ஒன்று தொடர்பே இல்லாமல் செயல் படுவதால், கலைஞர்கள் பாவம் திசைக்குத் திசை ஓடித் திண்டாடுகிறார்கள்.

— சென்னை விழாவில்
அமைச்சர் உபேந்திரா.

●● திராவிட முன்னேற்றக் கழகம் என்பது சிவப்புக் கொடி இல்லாத கம்யூனிஸ்ட் கட்சி; சமுதாய சமத்துவத்துக்காக அர்ப்பணித்துக் கொண்ட கட்சி.

— அமைச்சர் துரைமுருகன்.

●● எனக்குப் பத்திரிகையாளருடன் எந்தத் தகராறும் கிடையாது. நிருபர்கள் நிலைமைகளைச் சரியாக எழுதினாலும் கூட, நிர்வாகிகள்தாம் எல்லாவற்றையும் திரித்து. மாற்றி வெளியிடுகிறார்கள்.

— ஹரியானா முதல்வர் சௌதாலா.



●● ஒன்றுமில்லாததை எல்லாம் விவகாரமாக்கிவிடுகிறார் வாழப்பாடியார்.

— வைஜயந்திமாலா, எம்.பி.

●● வீட்டுக்குள்ளிருந்து 'ஒப்பனை அரசியல்' நடத்துவது வெகு நாள் செல்லுபடியாகாது.

— வாழப்பாடி ராமமூர்த்தி.

●● நாட்டிலுள்ள நதிகளை எல்லாம் தேசியமயமாக்கி விடுவதால், மாநிலங்களின் நீர்த் தேவைகளை முழுவதுமாகப் பூர்த்தி செய்துவிட முடியாது.

— முதல்வர் கருணாநிதி.

●● தொழிலாளர் துறை மற்றும் முக்கிய துறைகளில், கொள்கை அறிவிப்புக்கள் செய்யும் முன்னால், வெளியே இருந்து ஆதரவு அளிக்கும் கட்சிகளைத் தேசிய முன்னணி அரசு கலந்து ஆலோசிக்க வேண்டும்.

— மே. வங்க முதல்வர் ஜோதிபாசு.

●● அமைதிப் படையின் பணியை அரசியலாக்குவது என்று திரு மு. கருணாநிதி தீர்மானித்திருந்தால் அதைச் சகித்துக் கொள்ள முடியாது. அவருடைய அரசியல் ஆதாயம் கருதியே அமைதிப்படையினரைச் சாடுகிறார். அவருடைய செயல் பாடுகளில் பிரிவினை வாதச் சாயம் தெரிகிறது.

— எம். ஜே. அக்பர். இ. காங். எம்.பி.

●● ஒரு மூலையில் இருக்கிற கிராமத்தில். மாட்டுத் தொழுவத்தில் நான் பிறந்தேன். படிப்பறிவு இல்லாமல் வளர்ந்தேன். கடவுள் அருளால், எல்லாத் தொல்லைகளையும் தடைகளையும் கடந்து, இன்று இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறேன். ஒரு தனிமனிதனாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறேன். மீதியைக் கடவுளின் கையில் விட்டுவிட்டேன்.

— பி. நாகி ரெட்டி.

●● காவிரிப் பிரச்னையில் தமிழகத்துக்கு உச்சநீதி மன்றத் தீர்ப்பு மூலம் கிடைத்த வெற்றிக்குத் தஞ்சாவூர், திருச்சி, டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகள் தாம் காரணம். நீதி மன்றத்தை நாடியவர்கள் இவர்கள்தான்.

— வாழப்பாடி ராமமூர்த்தி.

தொகுப்பு: **எஸ். வி. என்.**

இத்தனை கொடூரம் டீவியில் தேவையா?

தெய்வங்கள் போல நடிகர்கள் வேஷம் அணிந்து வரும்போது சிலருக்குக் கோபம் கோபமாக வரும். தெய்வங்களை இழிவுபடுத்துவதாகவே தோன்றும். ஆனால் சராசரி மக்களுக்கு தெய்வ பக்தி கூடுதலாகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அந்த முறையில், தியாகராஜரின் பஞ்சரத்ன கிருதிகளை, அவற்றின் உன்னதமான பக்தி உணர்வோடு, உயர்தரமான இசைத் திறனை இணைத்து ரசித்து மெய்சிலிர்த்தவர்களுக்கு, அண்மையில் டீவியில் காண்பிக்கப்பட்ட பஞ்சரத்ன கிருதிகள் பற்றிய நிகழ்ச்சி வேப்பங்காயாகக் கசந்திருக்கும். விஷுவல்களில் சினிமா பாணி வேடங்களில் இராமனையும் பிறரையும் பார்க்கவே பிடித்திருக்காது. தியாகையரின் எளிய பக்திக்கும் அரங்கின் ஆடம்பர ஜாஜ்வல்யத்துக்கும் பொருத்தமே இல்லாதது போல் தோன்றியிருக்கும்.


ஆனால் இந்த நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டதன் நோக்கம் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு அல்ல; தியாகையரைப் பற்றி அதிகம் அறியாதவர்களுக்கு, உன்னதமான இசையை உபாசிப்பதன் மூலம் இறைவனையே அடையலாம் என்பதை உணர்த்துவதற்காகவே. இதனை ஒப்புக் கொண்டோமானால் நிகழ்ச்சியின் இடையிடையே கீர்த்தனை வரிகளின் பொருளை விஷுவலாகக் காண்பித்தது நிகழ்ச்சிக்குச் சுவை கூட்டியது என்பதை ஏற்கலாம்.

தேசிய நிகழ்ச்சியில் இடம்பெற்ற இந்தத் தயாரிப்பில் ஒவ்வொரு கிருதிக்கும் முன்னதாக ஒரு சிறிய அறிமுகம் — இந்தியில். சுமார் ஒரு மணி நேரம் ஒளிபரப்பான இந்



* பஞ்சரத்ன கீர்த்தனை — 'விஷுவல்'





சிறைக்குச் சென்றார்; நஷ்ட ஈடு பெற்றார்!

ஸ்விடிஷ் பிரதமர் ஒலாஃப் பாமேயைக் கொன்றதாக கிரிஸ்டர் பெட்டர்ஸன் குற்றம்சாட்டப்பட்டார். இவர் ஏற்கெனவே பலமுறை பல்வேறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர். முதலில் விசாரணை செய்த நீதிமன்றம் இவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. பெட்டர்ஸன் அப்பீல் செய்தார். உயர் நீதிமன்றம் சாட்சியங்கள் போதவில்லை என்று இவரை விடுவிக்க உத்தரவிட்டது. பெட்டர்சன் தான் சிறைவாசம் அனுபவித்த 11 மாதங்களுக்கு நஷ்டஈடாக 3,29,000 டாலர் கேட்டு வழக்குத்தொடுத்தார். தற்போது அவருக்குக் குறைந்தபட்சமாக 16,450 டாலர் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

— சங்கரி.

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்.

நிகழ்ச்சியின் சிறப்பம்சம் — பாடியவர்கள் முன்னதாகவே நன்கு ஒத்திகை பார்த்திருந்ததுதான். எனவே, பிசிர் தட்டாத கோஷ்டிகானமாக அமைந்திருந்தது. என். கிருஷ்ணசாமியின் தயாரிப்பான இதனை வடிவமைத்து இயக்கியிருந்தவர் இசை விமர்சகர் சுப்புடு.

விளம்பரங்களுக்கான 'கய்டுலைன்'களைத் தயாரித்துள்ளதோடு, ஒரு சமயம், அவை பற்றிப் பெரிதாக விளம்பரப்படுத்தியதாகவும் நினைவு. ஆனால் அவற்றை முறையாக அமல்படுத்துகிறார்களா, தெரியவில்லை. உதாரணமாக —

''மவுத்வாஷ் அடங்கியது'' என்கிறது ஒரு பற்பசை விளம்பரம்.

''மவுத்வாஷ் போதாது'' என்கிறது இன்னொரு பற்பசை விளம்பரம். ஒரே நாளில் இரண்டும். நல்லவேளை, அடுத்தடுத்து வருவதில்லை.

விற்பனையில் போட்டியிருக்கலாம். விளம்பரப் போரை எப்படி அனுமதிக்கிறார்கள்? தொலைக்காட்சி 'கய்டுலைன்'களில் இதற்கு வழிவகை செய்யும் இடைவெளிகள் ஏதாவது இருக்கிறதா, என்ன?

மகாபாரதம் தொடரில் இப்போது போர்க் காட்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. கூடவே வெளியேயும் ஒரு வாதப் போர் — பத்திரிகைகளில். வியூகத்தை உடைத்து உள்ளே சென்று போரிட்டு உயிரிழந்த அபிமன்யுவின் மரணம் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் பற்றியது அந்தக் கருத்து வேறுபாடு.

ஒரு சிலரின் கருத்து இது: ''அபிமன்யுவின் மரணம் சம்பந்தப்பட்ட காட்சிகள் மிகவும் கொடூரமாக இருந்தன. அவனுடைய எதிரிகள் ஒவ்வொருவரும் தங்கள் வாட்களை அவன் உடலில் செருகும் நிகழ்ச்சிகள் நீண்ட நேரம் காண்பிக்கப்பட்டதோடு, அப்படி அத்தனை பேரும் குத்தி முடிக்கும் வரையில் அபிமன்யு உயிருடன் இருந்து துடித்துக் கொண்டிருந்ததாகக் காண்பித்தது சகிக்க முடியாததாக இருந்தது.'' இப்படிக் கருத்துச் சொல்லி இயக்குனர் சோப்ராவையும் இக் காட்சியை அனுமதித்த தொலைக்காட்சி நிலையத்தினரையும் இவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

இதற்கு மாறுபட்ட கருத்துக் கொண்டிருப்பவர்கள் கூறுவது: ''இது சோப்ராவின் மகாபாரதம் அல்ல. தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது வியாசர் அருளிய மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் அப்பட்டமான தொகுப்புத்தான். வரலாற்றிலும் இதிகாசங்களிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம். வெவ்வேறு சூழ்நிலைகளில் ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதையே அவை வெளிப்படுத்துகின்றன. அவற்றிலிருந்து நீதிகளைத் தெரிந்து கொள்வது நம் கடமை.''

இவர்கள், பார்ப்பது வேறு, படிப்பது வேறு என்பதை மறந்து விடுகிறார்கள். சர்வ ஜாக்கிரதையாகக் கையாளப்படவில்லையானால் டீவி, சமுதாயத்தைப் பண்படுத்துவதற்குப் பதில் பாழ்படுத்தி விடும். மேலும் பாரதத்தையும் ராமாயணத்தையும் காலத்துக்கு ஏற்ப ராஜாஜி போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றைப் பின்பற்றுவதே புத்திசாலித்தனமாக இருக்கும்.

— கிச்சாமி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.

இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம் . . . பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே !

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனில்	145 பைசா
2.5 கிலோ கேரிபேக்கில்	83 பைசா



உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கன லாபம் கிடைக்கிறது இதில் உங்களுக்கு ஒரு துளியளவு விம் உபயோகமோங்கும் நுரை கொழித்து பிசுக்குகளை விசுக்கென வெளியேற்றுகிறது கணக்குக்காக . . . அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமினுக்க.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்கேற்ற அளவிலே (தேர்ந்தெடுக்கக் கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

LINTAS-VG-482A-2519 TAM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka